மன்றம்

—இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

...ணி 4 | 1 - 3 - 56 | இதழ் 2



★

கிரேக்கம் தந்த

அறிவியல் அறிஞர்

ஆர்க்கிமிடிஸ்

★

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

எளிய வாழ்க்கை

அறிஞர் அண்ணா அவர்கள், பள்ளி—கல்லூரி ஆகியவற்றில் படித்த அந்த நாட்களிலும் சரி, பொதுப்பணியில் இறங்கித் தொண்டாற்றிவரும் இந்த நாட்களிலும் சரி ஆடம்பரமற்ற மிகமிக எளிய வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்து வருபவராவார்கள்.

அறிஞர் அண்ணாவை நேரில் காணாமல் அவரின் அறிவையும், ஆற்றலை மட்டும் கேள்விப்படுவார்கள், முதலில், அவர் ஒரு கம்பீரமான—ஆடம்பரமான—மிடுக்கான தோற்றமுடையவராக இருப்பார் என்றுதான் தம் மனதிற்குள் எண்ணிக்கொள்வார்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், அறிவும் ஆற்றலும் அற்றுக்,கூழை மட்டை, பேயத்திக்கொம்பு, முருங்கைமிலாறு, தாழங்காய் ஆகியவற்றின் வரிசையில் வைத்து எண்ணப்படக்கூடிய சிலர், நாட்டுக்கான தலைவர்கள் தாமே என்று சொல்லிக்கொண்டு ஆடம்பரமாகத் திரிவதைப் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்ட மக்கள், அறிவிலும் ஆற்றலிலும் மிக உயர்ந்து விளங்கும் அறிஞர் அண்ணா அவர்கள் மிக்க ஆடம்பரமான தோற்றமுடையவராகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணிக்கொள்வது இயல்பு ஆகிவிட்டதே ஆகும். அப்படிப்பட்டவர்கள் அண்ணாவை நேரில் காணும்போது, தம்முடைய எண்ணத்திற்கு நேர்மாறாக அவர் தோற்றமளிப்பதைக்கண்டு திடுக்கிட்டுத் திகைத்து மலைத்துப்போய் நின்று விடுகின்றனர். ஆச்சாரியாருக்கே அந்த நிலை ஏற்பட்டதென்றால், மற்றவர்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமா?

எளிமை—இனிமை—பொறுமை—அடக்கம் ஆகியவற்றிற்கு அரசியல் உலகில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு காட்டவேண்டுமானால், அறிஞர் அண்ணாவைத்தான் குறிப்பிடவேண்டும். தலைமயிரை வாருவதைப்பற்றியோ, ஆடம்பரமான உடைகளை உடுப்பதைப்பற்றியோ சிறிதும் கவலைப்படாமல் விரிந்துபரந்த தலைமயிருடன், அழுக்கேறிய ஆடைகளுடன், காலில் செருப்பு இல்லாமல், கையில் கடிகாரம் இல்லாமல் சட்டைப்பையில் பேனா இல்லாமல், (பெரும்பாலான நேரங்களில்) பணப்பை (மணிப்பர்ஸ்) இல்லாமல் காட்சியளிக்கும் அண்ணாவைத்தான் பெரும்பாலும் பார்க்கமுடியும்.

அறிஞர் அண்ணா அவர்கள் எளிமையாகவும் இனிமையாகவும் பழகுவதற்கேற்ற பண்புடையவர்களைத்தான் நண்பர்களாகக் கொள்வார்களே யொழிய, தரம்—தகுதி—திறமை பார்த்து நட்பு செய்துகொள்ளும் ஆடம்பரப் பழக்கம் அவரிடம் அறவே கிடையாது.

அண்ணா அவர்கள் கல்லூரியை விட்டு வெளியேறிய பிறகு, வேலைக்கு எதற்கும் போகாமல், பொதுப்பணியில் நாட்டம் செலுத்திக்கொண்டிருந்த போது, அவருக்கு உற்ற நண்பர்களாக உடனிருந்தவர்களில் குறிப்பிடத் தகுந்தவர்கள் சின்னக்கண்ணு, கணேசன், இரெங்கநாதன் ஆகியோர்கள். சின்னக்கண்ணு பொடிக்கடை வைத்திருந்தவர்; கணேசன் நாட்டுவைத்தியம் செய்து வந்தவர்; இரெங்கநாதன் இரவு பகலாக இயக்கத் தொண்டு செய்து வந்தவர். அண்ணா உள்ளிட்ட இந்த நால்வரையும்,

சிட்டிகைப்பொடி சின்னக்கண்ணு
கட்டிமாத்திரை கணேசன்
இராப்பட்டினி இரெங்கநாதன்
அலைந்துதிரிகிற அண்ணாதுரை

என்று பெத்துநாயக்கன் பேட்டையிலுள்ள ஏனைய நண்பர்கள் வேடிக்கையாக அழைப்பார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் ஆடம்பரத்தை எளிய வாழ்க்கையில் ஈடுபாடுடையவர்கள் என்பதற்கு, இந்த 'நண்பர் குழாமே' இனிய எடுத்துக்காட்டாகும்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1 - 3 - 56 வியாழக்கிழமை

எழுச்சியுற்ற தமிழகம்!

பிப்ரவரி 20 ஆம் நாள்! தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய சிறப்புக்குரிய நாளாகப் புகழ் பெற்றுவிட்டது! தமிழர்களின் ஒற்றுமைக்கும், உணர்ச்சிக்கும், உரிமை வேட்கைக்கும் எடுத்துக் காட்டாக அந்த நாள் அமைந்துவிட்டது!

பிப்ரவரி 20-இல் தமிழகம் எங்கணும் உள்ள தன்மான உணர்ச்சிகொண்ட தமிழர்கள் பலரும், தமது சாதி—மத—கட்சி—கருத்துவேறுபாடுகளை மறந்து, தமிழகத்தின் உரிமைகளைக் காக்க ஒன்றாய் இணைந்து நின்றார்கள் என்பதும் ஒருமித்த உரிமை முழக்கங்களை எழுப்பினார்கள் என்பதும், தமிழக உரிமைகளுக்குப் பாடுபட உறுதி மொழி எடுத்துக்கொண்டார்கள் என்பதும் நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சியை அளிப்பனவாகும். தமிழகத்தின் எதிர்காலம் மிக்க ஒளி பொருந்தியதாக விளங்கும் என்பதற்கான நம்பிக்கை பிப்ரவரி 20 இல் தமிழ் மக்களிடையே பூத்து மணங்கமழ்ந்து நின்றது என்றால் அது மிகைப்படுத்திக் கூறுவதாகாது.

சர்வ கட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கு இணங்க, தமிழகத்திலுள்ள பெருநகரங்களும் சிறு நகரங்களும், பேரூர்களும் சிற்றூர்களும், பட்டிகளும், தொட்டிகளும் பொதுவேலை நிறுத்தத்தில் (அர்த்தாலில்) கலந்துகொண்டு, பொதுவேலை நிறுத்தத்தைச் சிறப்பான முறையிலும் வெற்றிகரமான வகையிலும், கண்ணியத்துடனும், கட்டுப்பாடுடனும், அன்போடும் ஆர்வத்தோடும் அமைதியாக நடத்திக் காட்டி யிருக்கின்றன. சர்வகட்சிக் கூட்டணியினர் எதிர்பார்த்ததற்குமேல் பொதுவேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடந்தேறி யிருக்கிறது. சிற்சில இடங்களில் சிறு கலவரங்களும் சிறு குழப்பங்களும் நடந்திருப்பது வருந்தத்தக்கது என்றாலும், அவற்றிற்குக் காரணம் அந்தந்த இடங்களிலிருந்த போலீசாரின் அத்துமீறிய அடக்குமுறை நடவடிக்கைகளும், சில கருங்காலிகளின் வீண் எதிர்ப்புகளுமேயாகும் என்பதை நடுநிலையாளர்கள் நன்கு உணர்வார்கள். அமைதி ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவை நாட்டில்நிலவ வேண்டும் என்பதில் அரசியலார்க்கும் போலீசார்க்கும் எவ்வளவு அக்கறை உண்டோ, அதைவிட மிகவான அக்கறை, சர்வகட்சிக் கூட்டணித் தலைவர்களுக்கு இருந்து வந்தது என்பதைச், சர்வகட்சிக் கூட்டணியினர் தம் சொல்லிலும் செயலிலும் உண்மைப் படுத்திக் காட்டி யிருக்கின்றனர். தமிழகம் எங்கணும் உள்ள பொதுமக்கள் கூட்டணியினரின் வேண்டுகோள்களுக்கும், சொற்களுக்கும் மதிப்பு அளித்துப்பொதுவேலை நிறுத்தத்தை அமைதியாகவும, வெற்றிகரமாகவும் நடத்திக் காட்டியது போற்றிப் பாராட்டுவதற்குரியதாகும்.

செங்கோட்டை—தேவிகுளம் — பீர்மேடு—நெய்யாற்றங்கரை—கொச்சிச் சித்தூர்—பாலக்காடு ஆகிய தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளையும், வடக்கே சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப்பகுதிகளையும் புதிய தமிழகத்தோடு இணைக்காமல் அவைகளை வேறு மாநிலங்களில் கொண்டுபோய்ச் சேர்த்துள்ள இந்தியப் பேரரசின் அநீதியான போக்கு கண்டு, தமிழகம் தன் துக்கத்தை-துயரத்தை-வேதனையை வெளிப்படுத்திக் கொள்கிறது என்பதன் அறிகுறியாகவும்,

1. தட்சிணப் பிரதேச அமைப்பு என்ற யோசனையைக் கைவிட்டு, மொழிவழித் தமிழ் மாநிலம் அமைக்கப்பட வேண்டும்;

2. இழக்கும்படியாக இருக்கும் தமிழக எல்லைப் பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப் பட வேண்டும்;

3. சென்னை மாநிலத்திற்குத் 'தமிழ் நாடு' என்று பெயரிடப்பட வேண்டும்;

என்ற கோரிக்கைகளைத் தமிழகம் வலியுறுத்திக் கூறுகிறது என்பதன் அறிகுறியாகவும், தமிழகத்திலுள்ள மக்கள் தங்கள் வேலைகளை விட்டுத், தொழில்களை நிறுத்திக் கடைகளை மூடி, நிறுவனங்களைச் சாற்றி, நிலையங்களை அடைத்துப் பொதுவேலை நிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என்று சர்வகட்சிக் கூட்டணியினர் வேண்டிக் கேட்டுக் கொண்ட

னர். பொதுமக்களைத் தம் வேலைகளைச் செய்யாமலிருக்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்வதுதான் பொதுவேலை நிறுத்தத்தின் குறிக்கோளாகச் சர்வகட்சி கூட்டணியால் கொள்ளப்பட்டது. அரசாங்க வேலைகளை மறியல் மூலம் நிறுத்தும்படி கேட்டுக் கொள்ளும் தீவிரப் போராட்ட நடவடிக்கையைச் சர்வ கட்சிக் கூட்டணி மேற் கொள்ளவில்லை. எனவேதான் அரசாங்க அலுவலகங்களும், இரயில்களும், அரசாங்க பஸ்ஸுகளும் வேலை செய்வதைத் தடுக்க வேண்டாம் என்று சர்வக் கட்சிக் கூட்டணியினர் பொது மக்களைக் கேட்டுக் கொண்டார்கள். உணர்ச்சி வயப்பட்ட ஒரு சிலரைத் தவிர, ஏனைய பொது மக்கள் அனைவரும் சர்வகட்சிக் கூட்டணியின் இந்த வேண்டுகோளை நல்ல முறையிலே நிறைவேற்றித் தந்தார்கள். பெரும்பாலான மக்கள், சென்னையில், அரசாங்க பஸ்ஸுகளில் அன்று ஏறுமல், கூட்டணியின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்துக் காலால் நடந்து சென்றது குறிப்பிடத்தக்க மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

பொதுவேலை நிறுத்த முயற்சியைத் தோற்கடிக்கக் காமராசர் அரசாங்கமும், காங்கிரசுத் தலைமையினரும், காங்கிரசு நாளிதழ்களும் அறிக்கைகள் மூலமும், செய்திகள் மூலமும், எச்சரிக்கைகள் மூலமும் எவ்வளவோ உருட்டிப் பார்த்தும் மிரட்டிப் பார்த்தும் கூடப் பொதுவேலை நிறுத்தம் மிக வெற்றிகரமாக நடந்தேறி யிருக்கிறது. இரும்புத் தொப்பி அணிந்த போலீசுக்காரர்கள் சில நாட்களுக்கு முன்பிருந்தே நகர் முழுவதும் பவனி வந்து "போதுமான பாதுகாபபு அளிக்கிறேம் கடைகளைத் திறந்து வையுங்கள்" என்று தண்டோராப் போட்டும், கடைகளெல்லாம் அடைபட்டுக கிடந்தன என்பதிலிருந்து பொதுவேலை நிறுத்தத்தின் மகத்தான வெற்றியையாவரும் அறிந்து கொள்ளலாம். கருங்காலி உள்ளம் படைத்த விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலரால் சில கடைகள் ஆங்காங்குச் சில ஊர்களில் திறந்து வைக்கபபட்டன என்ருலும் அக்கடைகளில் வியாபாரம் செய்யாமல் பொது மக்கள் ஒதுங்கி நின்றுவிட்டது பொது வேலை நிறுத்தத்தின் முழு வெற்றியைக் குறிப்பதாகும்.

அரசாங்க அலுவலகங்களில் வேலை செய்வோரின் உரிமை வேட்கைக்கு அரசியலார் தடை விதிக்காமல் இருந்திருப்பார்களேயானல், பிப். 20 இல் ஒரு அரசாங்க அலுவலகம் கூட நடைபெற்றிருக்காது; அவ்வளவு பேரும் தாமாகவே வேலை நிறுத்தம் செய்திருப்பார்கள். அதுபோலவே கல்வி இலாகாவினர் தடை உத்தரவு விதிக்காமலிருந்திருந்தால், பிப் 20-இல் அரைகுறையாக வேலை செய்ததாகக் கூறப்படும் ஒரு சில பள்ளிகள், கல்லூரிகள் கூட நடைபெற்றிருக்கா, கடுமையான தடை உத்தரவு இருந்தும் பெரும்பாலான பள்ளிகள்—கல்லூரிகள் மூடப்பட்டும், நடத்துவதற்கு மாணவர்கள இல்லாமல் நிறுத்தப்பட்டும் இருந்திருக்கின்றன. இவையெல்லாம் பொதுவேலை நிறுத்தம் வெற்றி பெற்றுள்ளதைக் காட்டும் அறிகுறியாகும்.

பிப். 20-இல் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தம், தமிழக மக்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்றதாகும் என்பதை நேரு சர்க்காரோ அல்லது காமராசர் சர்க்காரோ புறக்கணித்துவிட முடியாது. பொதுவேலை நிறுத்தத்தின் மூலம் சர்வகட்சிக் கூட்டணியினர் முன் நிறுத்திய கோரிக்கைகள், தமக்கு உடன்பாடானவை அல்ல என்று எந்தத் தனிப்பட்ட காங்கிரசுத் தோழராலும் எந்தத் தனிப்பட்டதிராவிடக்கழகத்தோழராலும் இதுவரையில் கூற முடிந்ததில்லை. கட்சிக்கட்டுப்பாடுகள் அவர்களைத் தடுத்து நிறுத்துகின்றனவே ஒழிய, அவர்களது உள்ள உணர்ச்சி இந்தக் கோரிக்கைகள் பக்கந்தான் நிற்கின்றது என்பதை தனித்து அவர்களோடு உரையாடும் வாய்ப்புப் பெற்றேர் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

தொடந்தாற்போல் தமிழ்ப் பேசப்படும் பகுதிகள் அனைத்தும் மொழிவழி அடிப்படையில் ஒன்றுபட்டுத் 'தமிழ் நாடு' என்ற பெயரோடு புதிய தமிழகமாகக் காட்சியளிப்பதைக் காணவே தமிழகமக்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதைப் பிப். 20. பொது வேலை நிறுத்தம் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டது. தமிழகத்தின் இந்தப் பொது உணர்ச்சியை எந்த நல்லறிவு படைத்தவனும் குறைத்து மதிப்பிடவோ அல்லது புறக்கணித்து விடவோ முடியாது.

புதிய தமிழ் மாநில அமைப்பைப் பொறுத்துத் தமிழக மக்களின் எண்ணம் என்ன என்று அரசியலார் உணர்ந்து கொள்ள, பொதுவேலை நிறுத்தத்தை விட வேறேர் சிறந்த அளவு கருவி இருக்க முடியாது. இந்தப் பொதுவேலை நிறுத்தத்தில் தமிழக மக்கள் காட்டிய உணர்ச்சியையும், உரிமை வேட்கையையும் பயன்படுத்திக்கொண்டு காமராசர் அரசாங்கம், இந்தியப் பேரரசை வற்புறுத்துமேயானல், அதற்கு இந்தியப் பேரரசு இணங்கியே தீரும்; அதனை எதிர்த்து நிற்க இந்தியப் பேரரசால் இயலாது.

பிப். 20-இல் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தம் பண்டித நேருவின் உள்ளத்தைக் கூட ஓரளவுக்கு உலுக்கி இருக்கிறது. எல்லைத் தகராறுகளை வாக்கெடுப்பு மூலம் தீர்த்துக் கொள்வது என்பது கைவிடப்பட்ட கொள்கையாக இல்லை என்னும் கருத்துப்பட பாராளுமன்றத்தில் பேசியிருக்கிறார். பண்டித நேரு தமது மமதையான போக்கைச் சிறிது மாற்றிக்கொண்டு, பொது வாக்கெடுப்பின் மூலம் எல்லைத் தகராறுகளை தீர்த்துக்கொள்ளுவதற்கு இசைவு தரக்கூடும் என்று எண்ண இடமிருக்கிறது. அந்த அளவுக்குப் பொதுவேலை நிறுத்தம் பண்டித நேருவை ஆட்டிப் படைத்திருக்கிறது என்றால், அந்த அளவுக்கு வெற்றிதான். இந்த நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு தமிழக மக்களின் ஒருமித்த கோரிக்கைகளை நிறைவேற்ற காமராசர் அரசாங்கம் முன் வருமா என்பதுதான் இப்பொழுது ஐயத்திற்குரிய கேள்வியாக இருந்து வருகிறது.

இந்தப் பொதுவேலை நிறுத்தத்தைப் பொதுமக்களின் வேண்டுகோளாகப் பயன்படுத்திக்கொள்ள காமராசர் அரசாங்கம் தயங்குமேயானால், தமிழர்களின் ஒருமித்த கோரிக்கைகளுக்கு இணங்க இந்தியப் பேரரசு மறுக்குமேயானால், எதிர்காலத்தில் நடைபெறும் தீவிரப் போராட்டங்களுக்கு இந்தப் பொதுவேலை நிறுத்தம் முதல் எச்சரிக்கையாகக் காட்சி அளிக்கும் என்பது உறுதி.

சென்னை அரசாங்கமும், இந்தியப் பேரரசாங்கமும் புதிய 'தமிழ் நாட்டை' உருவாக்குவதைப் பொறுத்துத் தம் கடமைகளை உரிய காலத்திற்குள் நிறைவேற்றத் தவறுமேயானால், பொதுமக்களை ஈடுபடுத்தாமல், ஆனால் பொதுமக்களின் முழு ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு, தீவிரத் தொண்டர்களைப் பொறுக்கி எடுத்து வைத்துக்கொண்டு அவர்களை மட்டுமே ஈடுபடுத்தி நடத்தும் தீவிரப் போராட்டங்களைத் துவக்க வேண்டிய கட்டத்திற்குச் சர்வகட்சிக் கூட்டணி செல்ல வேண்டி நேரிடும். அத்தகைய நிலைமை ஏற்படாதவாறு ஆவன செய்ய, சென்னை முதலமைச்சர் முற்படுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

பொதுவேலை நிறுத்தம் மிகமிக வெற்றிகரமாக நடைபெற முழு ஒத்துழைப்பையும் தந்த பொதுமக்களுக்கும், சர்வகட்சிக் கூட்டணியைச் சேர்ந்தவர்களுக்கும், மறைமுகமாக ஒத்துழைப்பு தந்த ஏனைய கட்சிக்காரர்களுக்கும் பிறர்க்கும் எமது மனமுவந்த வாழ்த்துக்களையும், நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சி பெற்றுவிட்டது! அதன் அறிகுறிதான் பொது வேலை நிறுத்தம்! எழுச்சியுற்ற தமிழகத்தின் அடுத்த பணி கிளர்ச்சியாகத்தான் இருக்கும்! அந்த நிலைக்குத் தமிழகத்தைத் துரத்த, இந்தியப் பேரரசினர் முயல மாட்டார்கள் என்று எதிர்பார்ப்போமாக!

பொதுவேலை நிறுத்தத்தில் காட்டப்பட்ட உணர்ச்சிப் பெருக்கு நீடித்து நிற்பதாக!—காட்டப்பட்ட உரிமை வேட்கை விரைவில் வெற்றி பெறுவதாக!

வழக்குகளை மீட்சி பெறுக!

பொதும்வலை நிறுத்தத்தில் கலந்து ஒத்துழைக்கும்படி தொழிலாளர்களையோ அல்லது வாணிகர்களையோ, அல்லது மாணவர்களையோ வேண்டிக் கொள்வதே, இன்றைய அரசியலாரால் குற்றமாகக் கருதப்படுகிறது. பிப். 20 ஆம் நாளன்று அப்படிப்பட்ட பணியில் இறங்கி அமைதியாகத் தொண்டு செய்த பொதுநலத் தொண்டர்கள் பலர் ஆங்காங்கு கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

சிறைப்படுத்தப்பட்டவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டும், மற்றுஞ்சிலர் இன்னமும் விடுவிக்கப்படாமலும் இருந்து வருகிறார்கள். சிலர்மீது வீணாகப் பழிவாங்கும் எண்ணத்தோடு அவதூறான வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

கடலூரில் தோழர் கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள்மீதும், மற்றும் சில கழகத் தோழர்கள் மீதும் கொள்ளைவழக்கு 'ஒன்று' தொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் செய்தி பலரையும் திடுக்கிடச்செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

பொதுவேலை நிறுத்தநாளன்று அமைதியாகப் பொதுப்பணி புரிந்த பிற சர்வகட்சித் தொண்டர்கள் மீதும், கழகத்தோழர்கள்மீதும் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் துடைத்தெறியப்படக்கூடியன என்றாலும், அந்த வழக்குகளையெல்லாம் மீட்சி பெற்று, சிறைப்படுத்தப்பட்டுள்ள தோழர்களை விடுதலை செய்து பொதுமக்களின் வளர்ச்சிக்கு மதிப்பளிக்க வேண்டியது சனநாயக அரசாங்கத்தின் இன்றியமையாக் கடமை என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறோம்.

கருத்துக் கதிர்

பொதுவேலை நிறுத்தத்தின் எதிரொலி

"சென்னையில் இந்தியாவைத் துண்டாடவர், இந்தியாவிலிருந்து தென்னாட்டைப் பிரிக்கவும் வெளிப்படையாக உறுதிமொழி எடுத்துக்கொண்டதொரு கட்சி அர்த்தாலுக்கும் ஆர்பாட்டத்திற்கும் ஏற்பாடு செய்தது. அவர்கள் பல முழக்கங்களைக் கிளப்பினர். அங்கும் தொல்லை ஏற்பாடு செய்யப்படுவதாக நம்புகிறேன்......

"எல்லைப்புறத்திலுள்ள ஒரு சிறு துண்டு பிரதேசத்தைப்பற்றிக் கேரள — சென்னை அரசுகளுக்குள் தகராறு இருக்கிறது. அப் பிரதேச மக்கள் முடிவு செய்யட்டும் என்று சொன்னால் அதை ஒருவர் புரிந்துகொள்ள முடியும். ஆனால் ஒவ்வொருவரும் நெருக்கடியை உண்டாக்க விரும்புகின்றனர். சென்னையிலுள்ள சிலர் அர்த்தால் நடவடிக்கைகள் மூலம் நெருக்கடியை உண்டாக்கி அதன்மூலம் சென்னையிலிருந்து 500மைலுக்கு அப்பாலுள்ள சிறுதுண்டுப் பிரதேசத்தைச் சென்னை அரசுடன் சேர்க்கும்படி செய்ய விரும்புகின்றனர்.

—பண்டிதநேரு

24—2—56 இந்தியப் பாராளு மன்றத்தில்— விவாதத்திற்கு பதில்.

* * *

தூக்குத் தண்டனைச் சட்டம் ஒழியக்கூடாது

" சந்தேகம் ஏற்படும்போது எதிரிக்கு மரண தண்டனை அளிக்கப்படுவதில்லை. இதுபற்றிச் சட்டம் மிகத்தெளிவாக இருக்கிறது. சந்தேகமிருந்தால் அதன் அனுகூலம் எதிரிக்கே காட்டப்படுகின்றது. கொலைபோன்ற பெரிய குற்றம் செய்பவர்களுக்காகக் கருணை காட்டி மன்னிக்கவேண்டும் என்று விண்ணப்பித்துக்கொள்வதை நான் ஆதரிக்கவில்லை. தூக்குத்தண்டனையை ஒழித்துக்கட்டிய அமெரிக்காவே இம்மாதிரி செய்திருக்கிறது என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். எப்படியிருந்தாலும் தூக்குத்தண்டனையை முற்றிலும் ஒழித்துக்கட்டுவது என்பது தவறு. குற்றவாளிகளின் மனதில் அச்சம ஏற்படுவதற்கு அது இருந்தேயாகவேண்டும்"

—சி. இராசகோபாலாச்சாரி

19-2-56. சென்னை இலட்சுமிபுர யுவர் சங்கத்தில் பேச்சு.

பொதுவேலை நிறுத்தத்தை ஒட்டித்தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளையெல்லாம் மீட்சி பெறும்படியாக, நாமெல்லாம் சென்னை அரசியலாரை வற்புறுத்துவோமாக!

நரேந்திர தேவ்

இந்தியத்துணைக் கண்டத்தைச் சேர்ந்த முதுபெரும் அரசியல் தலைவர்களில் ஒருவரும், சோசலிசக் கொள்கைகளில் மிகவும் ஈடுபாடுடையவரும், பல்லாண்டு காலம் பொதுப்பணியினை நேர்மையோடும், நாணயத்தோடும், ஊக்கத்தோடும், உணர்ச்சியோடும், சலியா உழைப்போடும் ஆற்றி வந்தவரும் ஆன ஆச்சாரியா நரேந்திரதேவ் இயற்கை எய்தினர் என்ற செய்தி நம்மையெல்லாம் மிக்கத் துக்கத்தில் ஆழ்த்துகிறது. அவரைப் பிரிந்து வருந்துவோர் அனைவர்க்கும் எம் ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

பேராசிரியர் வையாபுரியார்

தமிழ் ஆராய்ச்சித்துறையில் ஈடுபாடுடையவரும், தமிழ்ப்பேராசிரியராக விளங்கியவரும், தமக்கு ஏற்ற ஒரு முறையில் தமிழ்த்தொண்டு ஆற்றியவரும், தமிழ் நூல்கள் சில வெளியிட்டவரும் ஆன பேராசிரியர் வையாபுரியார் அவர்கள் இயற்கை எய்தியது மிக்கத் துயரத்தையும், துக்கத்தையும் அளிக்கிறது. அவரைப்பிரிந்து வருந்தும் நண்பர்களுக்கு நமது உளங்கனிந்த பரிவு உரித்தாகுக!

வினாவும் விளக்கமும்

வினா : உலகில் ஒவ்வொன்றிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன. அறிவுடையோர் தீயன வற்றை விலக்கி நல்லனவற்றைக் கொள்ளுதல் வேண்டும். அதுமுதல் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து பல்கோடி மக்களால் கைக்கொண்டு ஒழுகப் பெற்ற இந்து மதத்தில் சில போலிப் புலமையினால் எழுந்த புராணங்களையே குறிக்கோளாகக் கொண்டு பலர் படித்தும் கேட்டும் இராத புராணங்களையே எழுதியும் பேசியும் வருவது சரியா? இதற்காக இந்து மதத்தையே வெறுக்கலாமா?

[இது அருள் நெறித் திருக் கூட்டத்தாரின் பத்தாவது வினாவாகும்.]

விளக்கம்: "உலகில் ஒவ்வொன்றிலும் நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன. அறிவுடையோர் தீயனவற்றை விலக்கி நல்லனவற்றைக் கொள்ளுதல் வேண்டும்" என்று அருள்நெறித் திருக் கூட்டத்தார் கூறும் அந்தக் கூற்றை நாம், முழுக்க, முழுக்க அப்படியே நூற்றுக்கு நூறு ஆதரித்துப் போற்றி வரவேற்கவே செய்கிறோம். உலகில் உள்ள 'கடவுள்,' மதம், வழிபாடு, கோயில், திருவிழா, வேதம், புராணம், இதிகாசம், சாத்திரம், சம்பிரதாயம், சடங்கு, மடம், மடாதிபதி, காவி வேட்டி, கமண்டலம், திருநீறு, உருத்திராக்கம் போன்ற ஒவ்வொன்றிலும் கூட நன்மையும் தீமையும் கலந்தே இருக்கின்றன என்று ஒப்புக் கொள்ளும் அளவுக்குத் திருக் கூட்டத்தார் வந்திருப்பது வியப்புக் குரியதே யாகும். மேற்குறிக்கப் பெற்றவற்றுள், நன்மையைத் தவிர தீமை என்பது அறவே கிடையாது என்று இதுவரையில் வாதிட்டு வந்த மதவாதிகள், இப்பொழுது அவைகளில் தீமையும் உண்டுஎன்று கூறிடும்அளவுக்கு வந்திருப்பது மகிழ்ந்து வரவேற்றற்குரியதாகும்.

மதத்தின் பெயரால் சொல்லப்படுபவைகளையும்,செய்யப்படுபவைகளையும் பகுத்தறிவுவாதிகளாகிய நாம் ஆராய்ந்து பார்த்து, அவற்றிலுள்ள மூட நம்பிக்கை, குருட்டுப் பழக்க வழக்கம், பொய்மை, புனைசுருட்டு, அறியாமை, ஒழுக்கக்கேடு, ஆபாசம் காலத்துக்கும் கருத்துக்கும் பொருந்தி வராதவை, பயன் தராதவை ஆகியவற்றை வன்மையாகக் கண்டித்து ஒதுக்குகிறோம். மதம் புகட்டும் அன்பு, அருள், அறம், அறிவுடைமை, நீதி, நேர்மை, நாணயம், ஒழுக்கம் போன்ற பண்புகளை நாம் வெறுக்கவில்லை; ஏற்றுக்கொள்ளவே செய்கிறோம். இவற்றை இந்து மதம் சொல்லினாலும் சரி அல்லது வேறு எந்த மதம் சொல்லினாலும் சரி நாம் வரவேற்கவே செய்கிறோம். ஆனால், மதங்கள் கூறும் கடவுள், மோட்சம், நரகம், மறுபிறப்பு, சாத்திரம், சம்பிரதாயம், சடங்கு, இதிகாசம், புராணம், வேதம் ஆகியவற்றில் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருந்தி வராதவற்றைக் காரண காரிய விளக்கங் காட்டி வன்மையாகக் கண்டிக்கவே செய்கிறோம்.

இந்து மத புராணங்களில், திருக் கூட்டத்தார் எவை எவை போலிப் புலமையினால் எழுந்தவை என்றும், எவை எவை உண்மைப் புலமையினால் எழுந்தவை என்றும் சுட்டிக் காட்டுகிறார்களோ தெரியவில்லை. அவர்கள் திட்ட வட்டமாக இன்ன இன்ன புராணங்கள் போலிப் புலமை கொண்டவை. இன்ன இன்ன உண்மைப் புலமை கொண்டவை என்று பிரித்துக் காட்டுவார்களே யானால், நாம் போலிப் புலமையினால் எழுந்த புராணங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு உண்மைப் புராணங்களை அலசிப் பார்க்க முயலலாம். இந்து மதத்தின் பெயரால் எழுந்துள்ள அவ்வளவு புராணங்களையும் அப்படியே உண்மை என்று இந்து மத நம்பிக்கையுள்ள பொதுமக்கள் கருதும் காரணத்தாலும், இந்து மதவாதிகள் அவைகள் எல்லாவற்றையும் அப்படியே நம்பும்படி வற்புறுத்தும் காரணத்தாலுந்தான், நாம் அவற்றையெல்லாம் அலசிக்காட்டி அவற்றில் பொதிந்து கிடக்கும் அறியாமைகளையும் ஆபாசங்களையும் பொய்மைகளையும் சுட்டிக் காட்டி, மக்களைச் சீர்திருத்த வழியில் அழைத்துச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பலர் படித்தும் கேட்டும் இராத புராணங்களையே நாம் எழுதியும் பேசியும் வருவதாகத் திருக்கூட்டத்தார் நம்மீது குற்றம் சுமத்துகின்றனர். எல்லோர்க்கும் நன்கு தெரிந்தவைகளாக இருப்பவையும் மத நம்பிக்கைகொண்ட மக்களின் அன்றாட வாழ்க்கையில் புகுந்து மிகவும் தோய்ந்து கிடப்பவையும், மதவாதிகள் ஓயாமல் எடுத்துச் சொல்லி வருபவையும் ஆன இராமாயணம், பாரதம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், தேவாரம், திருவாசகம் போன்றவைகளைத்தான் நாம்

அடிக்கடி அலசிக் காட்டி வருகிறோம். இவை யெல்லாம் பலர் படித்தும் கேட்டும் இராத புராணங்கள் அல்லது மத நூல்கள் என்று திருக்கூட்டத்தார் அவ்வளவு எளிதில் கூறிவிட முடியாதே! பலரும் தாம் படிக்காத, கேள்விப் படாத புராணங்களெல்லாம்கூட உண்மை யானவை, உயர்ந்தவை, சிறந்தவை என்று தான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டுள்ள மூடநம்பிக்கையைத் தகர்த்தெறிய, அத்தகைய புராணங்களையும் அலசிக் காட்ட வேண்டிய நிலைக்குத்தான் சீர்திருத்தவாதிகள் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

போலிப் புலமையினால் எழுந்த புராணங்கள் இவை இவை, இவற்றையெல்லாம் நம்ப வேண்டாம் என்று திருக்கூட்டத்தார் சொல்லி, பொது மக்களை அவற்றினின்றும் மீட்க முற்பட்டுவிட்டால், பகுத்தறிவுவாதிகள் பிறகு அவற்றைப்பற்றிப் பேச வேண்டிய இன்றியமையாமையே ஏற்படாது. திருக்கூட்டத்தார் அப்படிச் செய்ய முன் வருவார்களா? அருள்நெறித் திருக்கூட்டத்தார் நம்பிக் கொண்டிருக்கும் முக்கியமான இதிகாச புராணங்களும் ஆராய்ச்சி யறிவுக்குப் பொருந்தி வராத காரணத்தால்தான், அவற்றில் பொருத்தமற்றவற்றைப் பகுத்தறிவுவாதிகள் வெறுத்து ஒதுக்குகிறார்கள்.

பகுத்தறிவு வாதிகள் இந்து மதத்தை மட்டுமல்ல, கடவுள், மோட்சம், நரகம், மறுபிறப்பு மூடச்சாத்திரம், குருட்டுச் சம்பிரதாயம், மூடச் சடங்கு முதலியவைகளை கொண்டிருக்கும் எல்லா மதங்களையும் வெறுக்கவே செய்கிறார்கள். நல்லன, மதங்களிடத்திலிருந்து வந்தாலும் சரி, மதமல்லாத பிற அமைப்புகளிடத்திலிருந்து வந்தாலும் சரி அவற்றை ஏற்றுக் கொள்ளப் பகுத்தறிவுவாதி தயங்குவதில்லை. நல்வாழ்வு வாழ 'மத நம்பிக்கை' என்ற ஒன்று இன்றியமையாதது அல்ல என்றே பகுத்தறிவுவாதி கருதுகிறான். காலத்திற்கு ஏற்ற பகுத்தறிவு நெறிப்படி வாழ்வு அமைய வேண்டும் என்பதைத்தான் பகுத்தறிவுவாதி வற்புறுத்தி வருகிறான்.

வினா: **"ஐயா உயிரோடு இருக்கும்பொழுதே அநாதை ஆகிக் கொண்டார்கள் என்றால், 5 லட்சத்திற்காகவே 'ஐயாப்'ப் பட்டம் போட்டார்கள் என்று படுகிறது.......தி. மு. க. பிறந்ததற்கு மாத்திரம் அல்ல, அது தொடர்ந்து நடப்பதற்கே மூல காரகாரணங்கள் பெண் பிரச்சினையும், பணப் பிரச்சினையுமே என்று கழகத்திற்கு வெளியில் இருந்து கொண்டே கழகத்தைக் கவனிக்கும் கருத்துடையார் கூறுகின்றனர்" என்று விசுவாசப் பாதிரியார் விளம்புகின்றாரே அதுபற்றிய கருத்து என்ன?**

விளக்கம்: விசுவாசப் பாதிரியார், தி. மு. கழகத்தின்மீது மாசு கற்பிக்கும் ஆத்திரத்தில் மிக இழி நிலைக்கு இறங்கி, மிக மிக அறிவிழந்து காணப்படுகிறார் என்பது அவர் கூற்றிலிருந்து தெரியவருகிறது.

விசுவாசப் பாதிரியார் ஆத்திரத்தால் ஏதேதோ உளறிக் கொட்டுகிறார். ஆத்திரம் அவர் கண்ணையும், கருத்தையும் மிகவாக அடைத்திருக்கிறது என்று எண்ணவேண்டியிருக்கிறது. தி. மு. கழகம் தோன்றுவதற்கான காரியங்களைப் பன்முறைத் தெளிவாக விளக்கியும், அவ்வளவும் செவிடன் காதில் ஊதிய சங்குபோல் விசுவாசப்பாதிரியாருக்குப் பட்டிருக்கின்றன.

தி. மு. கழகம் தோன்றுவதற்கு **"சனநாயகப் பிரச்சினை"**யும் **"கொள்கைப் பிரச்சினை"**யுந்தான் முக்கிய காரணங்கள் ஆகும் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் "திராவிட நாடு" "மாலைமணி" இதழ்கள் மூலம் அந்தக் காலத்திலேயே தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். பிற கழக இதழ்கள் மூலமும் கழகத் தோழர்கள் அக் கருத்தைத் தெளிவு படுத்தி யிருக்கிறார்கள்.

பெரியார் இராமசாமி அவர்கள் சனநாயகப் பண்பிற்கு முரணாகச் சென்றார், கொள்கைக்குப் புறம்பாக நடந்துகொண்டார் என்ற காரணங்களைக் காட்டித்தான் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் தி. கழகத்திலிருந்து பிரிந்து வந்தார்களே ஒழிய, பெரியார் திருமணம் செய்துகொண்ட பெண் தங்களைச் சேரவேண்டும் என்ற பிரச்சினையைக்காட்டியோ, அல்லது அவரிடம் சேர்ந்துள்ள பணம் தங்களைச் சேர வேண்டும் என்ற பணப் பிரச்சினையைக் காட்டியோ பிரிந்து வரவில்லை என்பதை அறியாமையில் மூழ்கிக்கிடக்கும் விசுவாசப்பாதிரியார் உணரட்டும்.

சொத்துக்கு வாரிசு எடுக்கும் முறையை எந்தப் பெரியார் அவர்கள் நீண்ட காலமாக மூடநம்பிக்கை என்று கண்டித்து வந்தாரோ, அதே பெரியார் அதே முறையைக் கையாள முற்பட்டார். இது கொள்கைக்கு முரண்பாடு என்று கழகத்தவர்களில் பலர் கருதினார்கள். மேலும் தாம் திருமணம் செய்துகொண்டதாகப் பெரியார் அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. **'திருமணம் என்ற பெயரில் ஒரு ஏற்பாடு'** செய்துகொண்டதாகக் கூறினார். திராவிடக் கழகத்தை விட்டுப் பிரிந்தவர்கள் பெரியாரின் திருமணத்தைக் கூட அவ்வளவாகக் கண்டிக்கவில்லை; அதன் பெயரால் செய்யப்பட்ட ஏற்பாட்டைத்தான் வன்மையாகக் கண்டித்தார்கள். அந்த ஏற்பாடு என்பது, தோழியார் மணியம்மையைத் தமக்குப் பிறகு இயக்கத்திற்கு வாரிசாக ஆக்குவது ஆகும். இது சனநாயகப் பண்பிற்கு முரணானது என்று

பிரிந்தவர்கள் வாதிட்டார்கள். கொள்கைக்கு மாறுபடுதல், சனநாயகத்திற்கு முரண்படுதல் ஆகிய இந்தத் தவறுகளினின்றும் தம்மைத் திருத்திக் கொள்ளும்படி, கழகத் தோழர்கள் பலரும் பலமுறை கெஞ்சிக் கேட்ட பிறகும் பெரியார் அவர்கள் தம்மைத் திருத்திக்கொள்ள ஒருப்படாததால், அப்படிக் கேட்டுக்கொண்ட கழகத் தோழர்கள், வெளியேறிக் கொள்கைகளைக் காப்பாற்றவும், சனநாயக நெறிமுறைகளை வகுக்கவும் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற ஒரு அமைப்பைக் காணவேண்டிய இன்றியமையாமைக்கு உள்ளானார்கள். இந்த உண்மைகளை நாம் பன்முறை எடுத்துக்காட்டி வந்துங்கூட விசுவாசப் பாதிரியாருக்குத் தெளிவு ஏற்படவில்லை என்றால், அவர் அறியாமை கண்டு நாம் கழிவிரக்கந்தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

தி. மு. கழகம் இப்பொழுது தொடர்ந்து நடைபெற்று வருவதற்கு மூல காரணங்கள் கள் பெண் பிரச்சினையும், பணப் பிரச்சினையுமே" என்று நேற்று ஏகாரம் போட்டுப் பேசுகிறார் பாதிரியார். தி. மு. கழகத்தின் நடவடிக்கைகளெல்லாம் சென்ற ஆறு ஆண்டு காலமாகப் பொதுமக்கள் யாவரும் எளிதில் அறிந்து கொள்ளும் வண்ணம் வெளிப்படையாகத்தான் நடந்தேறி வருகின்றன. தி.மு. கழகத்தின் உயர்வையும், நேர்மையையும் நாணயத்தையும் பொது மக்கள் நன்கு அறிந்து கொண்டு வருவதால்தான் அதற்குப் பொது மக்களின் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இதனை உணர்ந்துகொள்ள முடியாத விசுவாசப் பாதிரியார் பொறாமையால் பொசுங்கி, அறிவிழந்து, காரணகாரிய விளக்கமின்றி ஏதேதோ உளறிக் கொட்டத் தலைப்பட்டு விட்டார். பைத்தியக்கார விடுதியில் இருக்கவேண்டியவரோ என்று எண்ணிடும் நிலையில் அவர் காட்சியளிப்பது இரங்கத்தக்கதாக இருக்கிறது. "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளாய்த் தெரியும்" என்ற பழமொழிக்கிணங்க, விசுவாசப் பாதிரியாரே 'பெண் பிரச்சினை' யிலும் 'பணப் பிரச்சினை'யிலும தனிப்பட்ட மறைமுகமான வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறாரோ என்றுகூட ஐயுற வேண்டியிருக்கிறது. அதனால்தான் தம்முடைய இயல்பே கழகத்தின் இயல்பாகவும் இருக்கக் கூடும் என்று எண்ணிவிட்டார் போலும்! கழகத்திற்கு வெளியில் இருந்துகொண்டு கழகத்தைக் கவனிக்கும் 'காமாலைக் கண்ணராக' விசுவர்சப் பாதிரியார் விளங்குகிறார்! காலம் அவரது 'காமாலை நோயை' நீக்குமாக!

° ° °

வினா: அண்மையில் நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தில் தி.மு. கழகம் முன்னணியில் நின்று, மலையாளிகளின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டு விட்டதால், தி.மு. கழகம் கோரும் "திராவிடநாடு" அண்மையிலோ, அன்றி காலங் கடந்தோ கிடைப்பது சாத்தியமாகுமா?

விளக்கம்: தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கும் தேவையான உரிமைகளைத் தனித்தனிப் பெற்று, மொழிவழி மாநிலங்களாக அமைந்து, அந்த நான்கு மாநிலங்களும் குறைந்த அளவுத் திட்ட அடிப்படையில் திராவிடத் தனிக் கூட்டாட்சி நாடாக அமைய வேண்டும் என்பதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வருகிறது. இந்தக் கொள்கை அடிப்படையில் நின்றுதான் மொழிவழி மாநில அரசு காணும் கிளர்ச்சிகளில் கழகம் ஈடுபடுகிறது.

கேரளத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்க வேண்டும் என்றும், தமிழகத்திலுள்ள மலையாளப் பகுதிகளைக் கேரளத்தோடு சேர்க்க வேண்டும் என்றும் நாம் நியாயத்தின் அடிப்படை நின்று கோருகிறோம். நாம் தமிழர்—மலையாளிகள் சண்டை சச்சரவுகள் எவ்வகையிலும் மூளக்கூடாது என்ற கருத்தை உள்ளடக்கிக் கொண்டுதான் பணியாற்றி வருகிறோம். இந்தியப் பேரரசின் போக்குதான் இன்றைய தமிழர் — மலையாளிகளுக்கிடையே வெறுப்பை வளர்ப்பதற்குக் காரணமாக இருக்கின்றது. இந்தியப் பேரரசினர் மொழி வழியில்தான் மாநிலம் பிரிப்போம் என்றும், அதன்படி கேரளத்திலுள்ள தமிழ்ப்பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்கிறோம் என்றும் கூறி அதன்படி நடந்து கொண்டிருந்தால் வீண் வெறுப்புகளுக்கு இடம் ஏற்பட்டிருக்காது. சென்னையை ஆந்திரத்தோடு சேர்க்கவேண்டும் என்று ஆந்திரர்கள் எவ்வளவோ துடிதுடித்தார்கள்; கிளர்ச்சிகள் செய்தார்கள்; போராட்ட முழக்கங்கள் கிளப்பினார்கள்; ஆந்திரர்—தமிழர் சண்டைச் சச்சரவுகளை வளர்த்தார்கள். மொழிவழி அடிப்படையில் சென்னை தமிழகத்தைத்தான் சேரும் என்று இந்தியப் பேரரசினர் முடிவு எடுத்தவுடன் ஆந்திரர் அப்படியே அடங்கிவிட்டனர். அந்த முடிவை எதிர்த்து வாதாட அவர்கள் பக்கம் நியாயம் இல்லை; எனவே அடங்கிவிட்டனர்—ஆந்திரர் தமிழர்க்கிடையே நிலவி வந்த மாற்சரியம் எவ்வளவோ குறைந்து, இப்பொழுது நட்புறவு ஓரளவுக்கு வளர்ந்து வருகிறது என்னலாம். அதுபோலவே தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை, கொச்சிச் சித்தூர், பாலக்காடு ஆகிய தாலுக்காக்களிலுள்ள தமிழ்ப் பகுதிகளைத் தமிழகத்தோடு மொழிவழி அடிப்படையில் சேர்த்துவிட இந்தியப் பேரரசினர் முடிவு எடுத்தால், அந்த முடிவை எதிர்த்து நிற்கும் துணிவை, எந்த நியாயத்தின் அடிப்

படையிலும் மலையாளிகள் பெற முடியாது. இந்தியப் பேரரசினர் முன்னுக்குப்பின் முரண்பட்ட போக்கைக் கொண்டிருத்தலால்தான், "கிடைத்த வரையில் லாபம்" என்ற போட்டா போட்டி உணர்வுக்கு மலையாளிகள் இரையாகித் தமிழர்களை வெறுக்கும் அளவுக்குச் சண்டை சச்சரவுகளில் இறங்குகிறார்கள். இப்பொழுது தமிழர்—மலையாளிகளுக்கிடையே ஏற்பட்டிருக்கும் மாற்சரியம், ஒரு குடும்பத்தில் பாகப் பிரிவினை ஏற்படும் மாற்சரியத்தைப் போன்றதாகும். நியாயத்தின் அடிப்படையில் பாகப் பிரிவினை ஏற்பட்ட சிறிது காலத்திற்குப் பிறகு அண்ணனும் தம்பியும் நல்லுறவோடு வாழ முற்படுவதைப் போல, எல்லைப் பிரச்சினை திட்டவட்டமான நியாயத்தின் அடிப்படையில் தீர்ந்துவிட்டால், தமிழரும் மலையாளிகளும் இப்பொழுது நிலவும் மாற்சரியத்தை விட்டுவிட்டு நல்லுறவோடு வாழுவார்கள் என்பது திண்ணம்.

தமிழகமோ அல்லது கருநாடகமோ கேரளத்தோடு சேர்ந்த ஒரு தட்சிணப் பிரதேசத்தை விரும்பாவிட்டாலும், கேரளம் அத்தகைய தட்சிணப் பிரதேசத்தை விரும்புகிறது என்பது அதனுடைய நிலைமையாலும், கேரளத் தலைவர்களின் பேச்சுக்களாலும் உணரலாம். கேரளம் தனி மாநிலமாக ஆகும் நிலைமை ஏற்பட்டால், தமிழகத்தோடும் கருநாடகத்தோடும் உறவு வைத்துக்கொள்ளும் நிலையை அது உறுதியாக விரும்பியே தீரும்.

தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கும், தனித்தனியாகப் பிரிந்து போகும் நிலைமை ஏற்பட்டாலும் கூட, நான்கும் ஒன்றோடொன்று உடன்படிக்கை செய்து கொண்டு ஒரு கூட்டாட்சியில் அமையக்கூடிய வகையில்தான் இனம்—மொழி—பண்பாடு—நாகரிகம்—கலை—நிலம்—வரலாறு வாணிபம் ஆகியவற்றில் ஒருமைப்பாடும், நெருங்கிய தொடர்பும் கொண்டிருக்கின்றன. இந்த உண்மைகளைக் கூர்ந்து கவனித்தால் 'திராவிட நாடு" அமைவது என்பது எல்லாவகையிலும் சாத்தியமான ஒன்றேயாகும் என்பது புலனாகும்.

வினா: **பிப். 20 ஆம் நாள் பொதுவேலை நிறுத்தம்—கடையடைப்பு ஆகியவற்றில் கலந்துகொண்ட பொதுமக்கள் அச்சத்தின் காரணமாகக் கலந்து கொண்டார்களே ஒழிய அன்பின் காரணமாகக் கலந்துகொள்ளவில்லை என்று 'மெயில்! இதழ் குறிப்பிடுவது பற்றிய கருத்து என்ன?**

விளக்கம்: அரசாங்கத்திற்கு வால்பிடித்துத்தான் தாம் வாழ வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் 'மெயில்' போன்ற இதழ்களிடம் இப்படிப்பட்ட கூற்றைத் தவிர வேறு எதனை எதிர்பார்க்க முடியும்.

பிப். 20 இல் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் கடையடைப்பு ஆகியவற்றில் அச்சத்தைவிட அன்புதான் மிகமிகப் பெருவாரியாக வேலைசெய்து வெற்றி வாங்கித் தந்தது என்பதை நடுநிலையாளர்கள் அத்துணைப் பேரும் நன்கு உணர்வார்கள்.

கடைகளுக்கும், தொழிலாளர்களுக்கும் தக்கப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று அரசாங்கமும், போலீசும், வாக்குறுதி அளித்தும் பெரும்பாலான கடைகளும், தொழிற்சாலைகளும் மூடியிருந்தன என்றால், அரசாங்கத்தின் வாக்குறுதியைவிட, சர்வகட்சிக் கூட்டணியின் வேண்டுகோள்தான் மிகவாகப் பயனளித்திருக்கிறது என்று பொருள்.

'மெயில்' போன்ற பத்திரிகாலயங்களும், சில பள்ளிக்கூடங்களும், அரசாங்க அலுவலகங்களும் பிப். 20 இல் திறந்திருந்தன என்றால், அதற்குக் காரணம் என்ன என்று நாமும் 'மெயில்' இதழைத் திருப்பிக் கேட்கலாமே! 'மெயில்' அலுவலகத்தில் பிப். 20 இல் பல தொழிலாளர்கள் வேலை செய்தார்கள் என்றால், அன்பின் காரணமாக வேலை செய்தார்கள் என்று சொல்ல முடியாதே! 'மெயில்' அதிபர் அச்சமூட்டித்தானே அவ்வளவு தொழிலாளர்களையும் அன்று வேலை செய்ய வைத்திருக்கிறார். பொது வேலைநிறுத்தத்தில் விருப்பமானவர்கள் கலந்து கொள்ளலாம் என்று 'மெயில்' அதிபர் 'மெயில்' அலுவலகத்தில் வேலை செய்பவரிடம் கூறியிருந்தால், எத்தனைப் பேர் அன்று வேலைக்கு வந்திருப்பார்கள்? பலர் பொது வேலைநிறுத்தத்தில் தமிழன் என்ற உணர்ச்சியில் கலந்து கொண்டிருந்திருப்பார்களே! அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தால், 'மெயில்' இதழே அன்று வெளிவந்திருக்காதே! அதுபோலவே அரசாங்கம் மிரட்டவில்லை என்றால், தமிழன் என்ற உணர்ச்சி கொண்ட அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த பலரும், பள்ளிகளைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களும், அரசாங்க பஸ் ஓட்டும் டிரைவர்களும், கண்டக்டர்களும், இரயில்வேகாரர்களும் பொதுவேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டிருந்திருப்பார்களே!

சில தமிழரல்லாத பிறநாட்டார்—வடநாட்டார்—மலையாளிகள் ஆகியோரைத் தவிர மற்ற தமிழர்கள் அனைவரும் முழு எண்ணத்தோடும், அன்போடுந்தான் பொது வேலை நிறுத்தத்திலும், கடையடைப்பிலும் கலந்து கொண்டார்கள் என்றால் அது மிகையாகாது.

(38)

பிரமனுக்கு சரசுவதியிடம் 100 பிள்ளைகள் பிறந்தனர். அவர்கள் எல்லாம் அரக்கர்களாயினர், பின்னால் பிரமனிடம் உதித்த உக்கிரன் என்பவனால் இறந்தனர். பிள்ளைகளை இழந்த சோகத்துடன் பிரமன் பார்க்க, உக்கிரனும் இறந்தான். மூவுலகைப் படைத்தவராயிருந்தாலும், உயிர்களை சிருட்டிக்கும் முதல்வராயிருந்தபோதிலும், பிள்ளைகளை இழந்த சோகம் பிரமாவுக்கு இருந்தது. சரசுவதிக்கும் இருந்தது. பிள்ளையில்லாக் குறையைத் தீர்க்குமாறு அவள் தன் கணவனை—'பழைய தந்தையைக்' கேட்டுக்கொண்டாள். பிரமாவும் ஒப்புக்கொண்டார். ஆனால் முன்போல, அவசரப்பட்டு அருள்செய்து, அரக்கர்களைப் பெற்றெடுக்கக் கூடாது என்ற எண்ணமும் இருந்தது. பிறக்கும் குழந்தை நல்லபிள்ளையாக இருக்கவேண்டும் எனபதற்காக, இருவரும் தவஞ்செய்யச் சென்றனர். எல்லாவுயிர்களையும் படைக்க வல்லவராயினும், தமக்கு ஒரு நல்ல பையனை உண்டாக்கிக்கொள்ள முடியாமல் அவர் தவித்தார். பிரமா தவஞ்செய்ய, சரசுவதி பணிவிடைகள்செய்ய கடைசியாக இரிபு என்பவன் பிள்ளையாகப்பிறந்தான். இவன்பின்பு சிறந்தமுனிபுங்கவராகி, சநகர் முதலியோருக்கு ஆசிரியராகும் அளவு உயர்ந்தவனாகயிருந்தானாம்.

பிரமனுக்கு மூன்று மனைவியர்கள் என்றும் புராணங்களில் கூறப்படுகிறது. அவர்கள் சரசுவதி, காயத்திரி, சாவித்திரி இவர்களில் சரசுவதி அவருக்கு மகளாகப்பிறந்து பின் மனைவியாக ஆன பாக்கியசாலி! காயத்திரி ஒரு பசுவுக்குப் பெண்ணாகப் பிறந்து, பிரமபத்தினியானவள். ஒரு முறை பிரம்மா யாகஞ் செய்ய ஆரம்பித்தாராம். குறித்த நேரமாகியும் சரசுவதி வரவில்லை. யாகஞ் செய்பவரின் மனைவியும் யாககாலத்தில் உடனிருக்க வேண்டுமானதால், மனைவி வராததால் பிரமாவின் யாகம் தொடங்கப்படவில்லை. யாகம் தடைபடுவதைக்கண்ட முனிவர்கள் பிரம்மாவுக்கு மனைவி தேடும் படலத்தில் ஈடுபட்டனர். உடனடியாக அவர்களுக்குப் பெண்ணொருத்தி எங்கிருந்து கிடைப்பாள். யாகம் செய்யும் இடத்தில் கட்டப்பட்டிருந்த யாகப்பசு ஒன்று தான் கண்ணிற்பட்டது. அவர்களுடைய கருத்தும் வேலைசெய்ய ஆரம்பித்தது. வேண்டியது பெண், எதிரில் இருப்பது பெண்பாற் பசு! தேவர்கள் ஒன்றுகூடி, தங்களுடைய தபோ பலத்தால், அந்தப் பசுவிடம் ஒரு பெண்ணை உண்டாக்கினார்கள். பசுவின் வயிற்றிலிருந்து, நல்ல வயது மங்கையாக அந்தப் பெண் வெளிவந்தாள். பசுவினிடம் உதித்த பெண்ணை அழைத்து, காயத்திரி என்ற பெயரிட்டு, பிரம்மாவின் பக்கத்தில் உட்காரவைத்தார்கள். யாகம் நடந்தது. யாகம் நடந்து முடிந்ததும், தற்காலிகமாக பக்கத்தில் உட்காரவைக்கப்பட்ட காயத்திரியை பிரம்மா அழைத்துக்கொண்டு சென்றார். காயத்திரி பிரமபத்தினியானாள்.

சரசுவதி வந்ததும் தன்வரவுக்குக்காத்திராமல் வேறொரு பெண்ணை உண்டாக்கி யாகத்தை முடித்ததற்கு தேவர்களின்மீது அவளுக்குக் கோபம் மூண்டது. தனக்குப் போட்டியாக, வேறொரு மனைவியையும் அவர்கள் தந்துவிட்டனர். எல்லாவற்றிற்கும்சேர்ந்து தண்டனையாக, சரசுவதி அந்தத் தேவர்களை எரித்துச் சாம்பலாக்கினாள். தேவர்கள் இறந்ததும், தேவபத்தினிகள் வந்து புலம்பினர். அந்தப் பெண்ணிடம் இரக்கங்கொண்ட பிரம்மா, விநாயகருக்குத் தெரிவித்தார். விநா

யகர் அருள, சாம்பலான தேவர்கள் உயிர் பெற்றெழுந்தார்கள். காயத்திரி, சந்தியாவனத்தில் பிராமணர்கள் உச்சரிக்கும் மந்திரசொரூபமாக இருப்பவளாம்.

சாவித்திரி பிரம்மனுடைய மூன்ருவது மனேவி. பிரமதேவன் உலகங்களேயும், உயிர்களேயும் சிருட்டித்ததும், வேதசாஸ்திரங்களேச் சிருட்டிக்க எண்ணங்கொண்டாராம். அது அவ்வளவு சுலபமானதாக முடியவில்லே. அண்டசராசரங்களேச்சிருட்டித்துவிட்டு, வேத சாஸ்திரங்களேத் தராவிட்டால், மிகச் சூன்யமாக இருந்துவிடுமாம். ஆனல் அதுபிரபஞ்சத்தை உண்டு பண்ணியதைக் காட்டிலும் கடினமான செயலாக இருந்தது. பிரமதேவர் அதற்கு என்ன செய்தார்? மற்றவர்கள் என்ன செய்திருப்பார்கள்? மிகபக்திமான்கள், சம்பிரதாயமிக்கவர்கள, காட்டுக்குச் செல்வார்கள் அகோரத்தவம் செய்வார்கள் சிவனே, விட்டுணுவோ தோன்றுவார். வேண்டிய வரங்களேப் பெற்றுக்கொள்வார்கள். பிரமதேவரும், சதுர் வேதங்களே உண்டாக்கும் முயற்சியில் காட்டுக்குச் சென்ருர். ஆனல் கடுந்தவத்தாலோ, அல்லது பெரிய யோக பலத்தாலோ அல்ல அவர் காரியத்வைத முடித்து வந்தது! புதிய முறையில், தெய் லீலே ஒன்று புரிந்து!

காட்டுக்குள் பிரமதேவன் சென்ருர். போகும்பொழுது வேத சாஸ்திரங்களேயுடைய நீண்டயோகம், தியானம் செய்வதென்ற உறுதியுடன்தான் அவர் இருந்தார். சிறிதுகாலம் யோகத்திலும், தியானத்திலும் ஈடுபட்டும் இருந்தார். ஆனல் இவர் தேர்ந்தெடுத்தகாடு மிக ரமமியமாக, பார்ப்பதற்கு உல்லாசத்தை அளிப்பதாக இருந்த்து. வசந்த காலத்தில் மலர்கள் பூத்துக்குலுங்கின. வண்டுகள் இசை பாடிக்கொண்டு பறந்து வந்தன, பூவிலுள்ள தேனேச்சுவைக்க! பறவைகள் கூவின, பறந்து சென்றன ஒன்றையொன்று துரத்தி விளேயாடின! பெண்மானேத்தேடி ஆண்மான் ஓடி வந்தது, ஒன்றைப்பிடிக்க மற்றென்று முயன்றது, அடர்ந்த புதரில் பெண்மான் சிக்கிக்கொண்டது. ஆண்மான் அருகே வந்தது. இரண்டும் களிப்படைந்தன!

அரிய சாதனேகளே முடிக்கத் தவஞ்செய்ய வந்த பிரமாவுக்கு இந்தக் காட்சிகள்தாம் தெரிந்தன. பிரமதேவர் உள்ளம் துளித்தது. உடல் துடித்தது, தனக்கேற்றத் துணேயைத் தேடி கண்ணே மூடிக்கொண்டு கடுந்தவத்தில் அமர்ந்தாலும், உள்ளத்தில் கன்னியர்கள் தோன்றினுர்கள், நடனமாடினுர்கள், அவருடன்கூடி விளேயாடினுர்கள்! தனிமையில் தவம் நடைபெறவில்லே. காடும், அதன் மத்தியில் அவர் அனுபவித்த தனிமையும், மோகத்திற்கு ஏற்ற மனத்தை அவருக்களித்தன. வேதசாத்திரங்களேச் சிருட்டிக்க முடியாவிட்டாலும், பெண்களே அப்பழுக்கின்றி சிருட்டிப்பதில் பிரமதேவன் வல்லவராயிருந்தார். அந்த அளவு பயிற்சியும், அமைப்புகளேப்பற்றிச் சதா எண்ணமும் இருந்ததால் வெகு சீக்கிரத்தில் அவரால் அழகிய பெண்ணே உண்டாக்கிக்கொள்ள முடிந்தது.

புதிதாக உதயமான அழகு மங்கை, தன்னேச் சிருட்டித்தவரின் முன் நின்று வணங்கினுள்.

"சாவித்திரி" பிரமா தனது புதிய சிருட்டிக்குத் தந்த பெயர்!

"பிரபு!" அவள் வணங்கி நின்ருள்.

தானமைத்த சிலேயின் அழகைக்கண்டு பிரமா ஆச்சரியமடைந்தார். எதிர்பார்த்ததை விட அதிக ரூபமும் மோகந்தரும் சாயலும் அவளிடமிருந்தன. சிலேயை வடித்த சிற்பி மகிழ்வதுபோல, தனது படைப்பைக்கண்டு ரசித்தபடி அவர் இருந்தார். அவள் வணங்கிக் கட்டளேக்குக்காத்திருந்தபொழுது, தலேமுதல் பாதம்வரை பார்த்துக் குதூகளித்தபடி பிரமா இருந்தார்.

"பிரபு!" மறுபடியும் சாவித்திரி வணங்கினுள். தன்னே வெறிக்கப்பார்ப்பது ஏனென்று அவளுக்குப்புரியவில்லே. அனுபவமில்லாதவள், புதியவள், என்று பிரமாவுக்கு அசட்டுச் சிரிப்பு வந்தது. என்ன செய்வது, அவளுக்குத்தகுந்த அனுபவங்களேச் சொல்லித்தருவது அவருடைய கடமையல்லவா!

"நாம் தவஞ்செய்யும்பொழுது, நீ பணிவிடை செய்வாயாக!

பிரமா மீண்டும் யோகத்தில் அமர்ந்தார். சாவித்திரி பர்ணசாலேயை ஒழுங்கு படுத்தி வைத்தாள். யோகத்திற்காகக் கண்ணேமூடி உட்கார்ந்திருந்தபோதிலும், ஓரக்கண்ணுல் தமது பணிப்பெண் நடமாடுவதையும், குனிவதையும், நிமிர்வதையும் கவனித்தபடி பிரமா இருந்தார். தனது வேலே முடிந்ததும், அந்த இடத்தைவிட்டு வெளியில் போய்க்காத்திருக்க எண்ணி சாவித்திரி கிளம்பினுள். பிரமாவின் யோகம் கலேந்துவிட்டது.

"சாவித்திரி!"

"ஏன், ஸ்வாமி!" பெண் திரும்பிவந்து அடிபணிந்தாள்.

"கமண்டலத்தில் தண்ணீர் வைக்கவும், பூஜைக்குப் பூ கொண்டுவரவும்"

கட்டளைகளைப்பணிப்பெண் நிறைவேற்றினாள். குரு என்ன சொன்னாலும் அவள் நிறைவேற்றியிருப்பாள். ஆனால் குரு தம்மனதில் உள்ளதை எப்படிச்சொல்வது என்று தவித்தார்.

பணிப்பெண் தனது வேலைகளைச்சுத்தமாகச் செய்து முடித்தாள். பிரமா அவளைப்பாராட்டுவார், அவளைப்பார்த்துச் சிரிப்பார்! குருவின் பாராட்டுதலைப்பெறும்போது பெண் குதூகலமடைவாள். முன்னிலும் அதிக உற்சாகத்துடன் பணிபுரிவாள். பிரமா அவள் முதுகில் தட்டிக்கொடுப்பார், தோளைப்பிடித்து வருடுவார், சிலசமயங்களில் குருவின் கை மார்பின் மீதும் தவறிப்பட்டுவிடும். அவள் உடல் சிலிர்ப்பாள். ஆனால் அவளுக்குப் புரியாத இன்பமாக இருந்தது.

சிறுகச்சிறுக, அந்தப்பெண் குருவுக்குப் பணிவிடை செய்வது நின்று, பெண்ணுக்குக் குரு பணிவிடை செய்ய ஆரம்பித்தார். குருவின் போக்கு அவளுக்கு முதலில் ஆச்சரியத்தை அளித்தது. அவள் பெருமைப்பட்டாள், மகிழ்ந்தாள். கடைசியாக குரு அவளைத் தன்னிச்சைக்கு ஆட்படுத்திக்கொண்டார். அதற்கும் அவள் உடன்பட்டிருந்தாள். குருவுக்குச்செய்யவேண்டிய பணிவிடைகளில் இதுவுமொன்று என்றிருந்தாள். குரு தவத்தைக்கைவிட்டார், யோகத்தை மறந்தார், மோகம் ஒன்றே கருத்தாக இருந்தார்.

தான் எடுத்துவந்த வேலையை பிரமா மறந்துவிட்டார் என்று கூறமுடியாது. வேத சாத்திரங்களை உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் சதா அவர் உள்ளத்தில் இருந்தது. அதை அவர் மறக்கவில்லை. வேத சாத்திரங்களைப்பற்றிய கவலையுடன்தான் பிரமா தனது புது மனைவிக்கு காம லீலைகளைக் கற்றுக் கொடுத்துக்கொண்டிருந்தார். பணிப்பெண்—மனைவி கருத்தாங்கினாள். பிரமாவினால் உண்டான கரு நூறு ஆண்டுகள் தங்கி யிருந்ததாம்! நூறு ஆண்டுகள் கழிந்ததும், பல குழந்தைகளை அவள் பெற்றெடுத்தாள். அந்தப் பிள்ளைகளே, நான்கு வேதங்கள், மற்ற சாத்திரங்கள், சதுர்யுகங்கள், பரதம் முதலியன. வேத சாத்திரங்களை கருத்தினால் உணர்ந்து உண்டாக்க தவத்திற்குப் போன பிரமதேவர் கடைசியில் ஒரு பெண்ணைப் பிடித்து, அவளிடம் வேத சாத்திரங்களை உண்டாக்கிக் கொண்டார்! அறிவு பெற மிகச் சுலபமான வழி!

வேதங்கள் உண்டானதைப்பற்றி வரும் பல புராணக் கதைகளில் இது ஒன்று. வேதாந்திகளில் சிலர்—மிமாம்சா பகுதியினர் வேதங்கள் எவராலும் உண்டாக்கப்பட்டவையல்ல. அநாதி காலத்தது என்று வாதிடுவார்கள். நியாய வேதாந்திகள் கடவுளால் சொல்லப்பட்டவை வேதங்கள் என்பார்கள். முதற் கடவுள்—முதற் கடவுள் சிவனா, திருமாலா என்பதில் சைவ, வைணவர்களில் கருத்து வேற்றுமை யிருக்கலாம். எப்படி யிருந்தாலும் அந்த முதற் கடவுள்—வேதங்களைப் பிரமாவுக்கு முதலில், உபதேசித்தாராம். பிரமா அதனை சப்த முனிவர்களுக்குச் சொன்னார். அந்த முனிவர்கள் தம் சீடர்களுக்கு உபதேசித்தார்கள். வீடுகளில் சாமான்கள் திருட்டுப் போவதுபோல, தெய்வலோகத்திலிருந்து வேதங்கள் அடிக்கடி திருட்டுப் போய் விடுவதுண்டாம். ஒருசமயம் அசுரன் ஒருவன் வேதத்தைத் திருடிக்கொண்டு போய்விட்டானாம். வேதம் காணாமற் போய்விட்டது, யாருக்கும் அதைப்பற்றி நினைவு—படித்த அறிவு போய்விட்டது. திருமால் திருடனைக் கண்டு பிடித்து, அவனைக் கொன்று, வேதத்தை மீட்டு வந்தார். அப்பொழுதுதான் தேவர்தவர்களுக்கு வேதங்களைப்பற்றிய அறிவு மீண்டும் வந்ததாம்.

மற்றொருமுறை வேறொரு அசுரன் திருடிச் செல்ல, இந்தத் தடவை பிரமா துரத்திச் சென்று, வேதங்களை மீட்டு வந்தார். ஆனால் அசுரனுடன் போராடும்பொழுது வேதங்களில் பல பகுதிகள் காணாமற்போய்விட்டன. பிரமா திரும்பி வந்து வேதத்தைப் படிக்கும்பொழுது பல பகுதிகள் விடப்பட்டிருப்பது தெரிந்தது. உடனே முனிவர்களைக் கூப்பிட்டு, காணாமற் போன பகுதிகளை எழுதச் சொன்னாராம். அவர்களும் தங்களால் முடிந்தவரை எழுதி முடித்தார்கள். முதலில் ஒரே வேதமாக இருந்ததை, வியாசர் என்ற பதிப்பாசிரியர், நான்கு பகுதிகளாகப் பிரித்து, இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்ற பெயர்களுடன் நான்கு வேதங்களாக ஆக்கினாராம. அதனால் அவர் வேத வியாசர் என்னும் பெயர் பெற்றார்.

வேதங்களுக்குச் சந்தம் அமைத்தவன் இராவணன் என்று புராணங்கள் கூறும்.

சிருட்டியில் பிரமா தமது தேகத்தில் விருப்பப்பட்ட இடங்களிலெல்லாம் தேவர்களையும் மனிதர்களையும் உண்டாக்கி யிருக்கிறார். இவருடைய கண்ணில் மரீசி, இருதயத்தில் பிருகு, தலையில் அங்கீரசு, இடுப்பில் கிருது, புலகன்,

வயிற்றில் புலத்தியன், உயிரில் தக்கன், சமானனில் வசிட்டன், தொடையில் அத்திரி இவ்வாறு ஒன்பது பிரசாபதிகளும் பிரமாவின் உடலின் வெவ்வேறு பாகங்களில் உண்டாக்கப்பட்டனர். அவர் தொண்டையிலிருந்து அரக்கர்கள் உண்டாயினர். பின் உடலைவிட்டு, வேறொரு உடலை பிரமா மேற்கொண்டார். முதலில் உபயோகிக்கப்பட்டு விடப்பட்ட உடல் இருளாகி, இரவாயிற்றும். மறுபடியும் உடல் எடுத்ததில். அப்பொழுது முகத்தில் தேவர்கள் பிறந்தார்கள். அந்த தேகத்தை விட்டுவிட, அது பகலாயிற்று. மூன்றாவது உடலை எடுத்து, அதிலிருந்து பிதுர்க்களை பிரமா படைத்தார். அந்த உடலையும் விட, அது மாலைக் காலமாயிற்று. நான்காவது உடலிலிருந்து மனிதர் உண்டானார்கள். முகத்திலிருந்து வேதியர்களும், தோளில் அரசர்களும், தொடையில் வைசியர்களும், காலில் சூத்திரர்களும் ஆகிய நான்கு வருணங்களும் அப்பொழுதுதான் உண்டாயின. மனிதர்களைப் படைத்து விட்ட உடல் நிலவாயிற்று. மிருகங்களும் இவருடைய மற்றொரு உடலிலிருந்து உண்டானவையே! முகத்திலும் மார்பிலும் ஆடுகள் உண்டாயின. விலாப் பக்கத்திலும், வயிற்றிலும் மாடுகள் தோன்றின, காலில் சிங்கமும், கன்னத்தில் பறவைகளும் உதித்தன. உடலில் பல பாகங்களிலிருந்தும் பாம்புகள் குதித்தோடின. பாம்புகளைக் கண்டதும் பிரமாவுக்கு அடங்காத கோபம் உண்டாக. கோபத்தால் சிவந்த பொன்னுடன் அவ்வாறே பொன்னிறமாக நின்றுவிட்டது. பின் பேய், பூதம் முதலியவை உண்டாயின. நாக்கில் கந்தருவர் தோன்றினர். அவருடைய உடலில் இருந்து உதிர்ந்த மயிர்கள் கிழங்குகளாயின. இவ்வாறு உலகில் தோன்றிய உயிர்களனைத்தும் பிரமாவின் உடலிலிருந்து உண்டானவைகளாகும். புராணங்கள் தரும் சிருட்டிக்கணக்கில், வேத காலத்தில் அதிலும் வட இந்தியாவில் எங்கெந்த மிருகங்கள் இருந்தனவோ அவைகள் மட்டும் வரும். ஆஸ்திரேலிய நாட்டு கங்காருவோ, ஆப்பிரிக்கா நெருப்புக் கோழியோ இவர்கள் உயிர் நூல் பட்டியலில் வராது. வேதகால ஆரியர்களுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான அவர்களுடைய சிருட்டி கர்த்தா பிரமாவுக்கும் தெரிந்திருந்தது.

உலகங்களையெல்லாம் சிருட்டிக்கும் பிரமாவும் ஒரு சமயம், ஒவ்வொரு கல்ப முடிவிலும் இறந்து விட்டுணுவின் குமாரராகப் பிறக்கிறார். பின சிருட்டித்தொழில் ஆரம்பிப்பார். சில சமயம் சிருட்டித்தொழிலை மறந்து பிரமா தவிப்பாராம். விட்டுணு அல்லது சிவன் யாராவது வந்து, பையனுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுப்பதைப்போல, பிரமாவுக்குச் சிருட்டிபற்றி சொல்லித்தருவார்கள். பின்பு பிரமா தனது வேலையைக் கவனிப்பார். இடையிடையே மகளின்மேல் காதல், குருவேடத்தில் பணிப்பெண்ணுடன் குலாவுதல், இப்படி நடைபெறும். இருந்தாலும் ஒரு கல்பகாலம் முடியும் பிரமா சிருட்டித் தொழிலில் ஈடுபட்டுக் கடைசியில் மறைந்துவிடுவார். ஒரு கல்பத்தின் ஆரம்பத்தில், தனக்கு எல்லாம் தெரியும் என்ற மமதையுடன் பிரமா சிருட்டி செய்யத் தொடங்கினாராம். வழக்கமாக சிருட்டி ஆரம்பத்தில் சிவ விட்டுணு இருவரில் ஒருவரிடம் பாடங்கேட்டு தொழிலை ஆரம்பிப்பார். ஆனால் இந்தத்தடவை அப்படிக் கேட்காமல் தாமாகவே சிருட்டி வேலையில் ஈடுபட்டார். ஆனால் அவர் எவ்வாறு பாடுபட்டும் சிருட்டி கைகூடி வரவில்லை. செய்யவேண்டிய வேலை தடைப்பட்டது. விரும்பியவண்ணம் அண்டசராசரங்கள் முன்னால் எழவில்லை. அந்த கல்பம் ஆரம்பித்தும் பிரமாமட்டும் தனிமையாக உட்கார்ந்திருந்தார். தாமெடுத்த வேலை நடைபெறாதது கண்டு. பிரமா அழ ஆரம்பித்துவிட்டாராம். வேடிக்கைக்காகவல்ல, உண்மையாக பிரமா—அண்டசராசரங்களை உண்டாக்குபவர்—உயிர்களையெல்லாம் படைப்பவர் கண்ணீர்விட்டு அழ ஆரம்பித்தாராம். அவருடைய நிலை கண்டு இரக்கங்கொண்ட ருத்திரன், அவருடைய கண்ணீரிலிருந்து வெளிவந்து, சிருட்டி வேலையைச் சொல்லிக்கொடுத்தார். பின் பிரமா சிருட்டிக்க முற்பட்டார்.

இந்தப் புராணக் கதையைப் பார்க்கும்பொழுது—பிரமா முதலிய தேவர்கள் சிறு பிள்ளைகளைப்போலப் பாடங் கேட்டுக்கொள்வதும், பாடந்தெரியாத நிலையில் சிறுவர்களைப்போல அழ ஆரம்பித்துவிடுவதும்—அவர்கள் கடவுள்களா அல்லது நம்மைப்போல—அல்ல நமது சிறுவர்களைப்போல ஏதோ தெரிந்தும் தெரியாமலும் இருப்பவர்களா என்ற சந்தேகம் வந்துவிடுகிறது. புராணக் கதைகளின் படி கடவுள்கள் ஒருவகையில் சிறுவர்களுக்குரிய குழம்பிய அறிவும், செயலற்ற பண்பும் உடையவர்களாக இருந்திருக்கின்றனர். இதைவிட சிறுவர்களைப்போன்ற குழம்பிய அறிவும், செயலற்ற பண்பும், எதற்கும் அஞ்சி அழுதிடும் நிலையில் மக்கள் இருந்தபொழுது, இந்தக் கடவுள்கள் தோன்றியிருக்கவேண்டும்.

(தொடரும்)

999

அல்லி

(செல்வன்)

கண்ணன்:

என் பெயரைக் கொண்டே ஜாதகத்தைக் கணித்துவிடாதீர்கள்! ஆனால்... ஆனால் என்ன? ஒரு விதத்தில் நானும் அந்தக் கோபியர் கொஞ்சும் ரமணன் கோபால கிருஷ்ணனும் ஒரே ரகம்தான்! நான் செய்த ஒரு பாவத்திற்கே, இப்பொழுது அதை எண்ணி எண்ணிக் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துக் கொண்டிருக்கிறேன். என்னைப் போலன்றி பல மங்கையரைத் தவிக்க விட்ட அந்தக் கோபாலகிருஷ்ணன் பாவம்! கடைசி காலத்தில் வேதனைப்பட்டுத் துடித்துத்தான் செத்திருப்பான்! நல்ல வேளை. நான் என் அநுபவத்தையும், அது பற்றிய எண்ணங்களையும் எழுதுவது போல் அந்தக் கோபாலகிருஷ்ணன் எழுதவில்லை. அவனைப் பற்றிப் புகழ்ந்தோரும் இதுபற்றிக் குறிப்பிடவில்லை. ஒரு வேளை அந்தப் புகழ் பாடிகள் இது பற்றி குறிப்பிட்டிருந்தால்...ஆம்! உண்மையாகவே நான் இரண்டும் கெட்டானாக இந்த வேலையில் இறங்கி இருக்கவே மாட்டேன்!

புலம்பிப் பயன் என்ன. நடந்தது நடந்து விட்டது. அதற்குக் கழுவாய் தேடும் வேலையில்தான் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறேன். என் வாழ்க்கைப் பயணத்தில் நடந்து வரும் பொழுது கடந்து சென்ற அந்த நினைவுகள்— இன்றும் நினைத்தாலே நெஞ்சு வேகும் அந்த நினைவுகள், பருவக் கோட்டையின் உச்சியில் கொடிகட்டிப் பறந்த அந்த நாட்களில் எண்ணுந்தோறும், இன்பம் ஊட்டி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் மங்காத நிழல் படமாகவே இருந்தது.

அன்றொரு நாள் எங்கள் கல்லூரி விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றது என்பதற்காக அரைநாள் விடுமுறை விட்டிருந்தனர். தேக்கி வைத்திருந்த உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்து என் பயத்தைத் தற்காலிகமாக அமுக்கி வைத்தது. என் உடலெங்கும் பரவிக் கிடந்த காதல் உணர்ச்சியை ஒன்று சேர்த்து இயற்கை அளித்த துணிவைத் துணைக்கொண்டு பெண்களுக்கெனத் தனியாக இருந்த அறையை நோக்கிநடந்தேன். அறை வாயிலில் நின்று அல்லி! எனக்கூவ நினைத்தேன். வார்த்தைகள் வாய் வரை வந்து சினிமாக் காட்சியின் நடுவே வரும் 'லாங்ஷாட்' மாதிரி தேய்ந்து உருத் தெரியாமல் உருண்டோடிவிட்டது வந்த வழி நோக்கி. அல்லியை அழைக்க வழி தெரியாமல் திகைத்து நின்று கொண்டிருந்த வேளையில்தான் அட்டெண்டர் ஆண்டியப்பன் வந்தான். என்னைப் போன்ற வாலிபர்கள், வழியில் நின்று கொண்டு வகை தெரியாது திகைத்த வேளையில் வழிகாட்டி பழக்கப் பட்டவன். "என்ன சார், என்ன வேணும்?" என்று சற்று உரத்த குரலில் கேட்டுக்கொண்டே வந்தான். "ஒன்றுமில்லை ஆண்டியப்பா, அல்லியிடம் ஒரு நோட்டு வாங்க வேண்டும், கொஞ்சம் அல்லியம்மாவைக் கூப்பிடேன்" என்றேன். அல்லி வந்தாள். அத்துடன் சேர்த்து வைத்திருந்த துணிவும் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கால், கைகள் சில்லென்று வியர்த்துவிட்டன. அல்லியைக் காண வேண்டும், அவளுடன் பேசவேண்டும். அவளை நான் காதலிப்பதை அவளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்த என் உள்ளம் செயலிழந்து இருந்தது. என் நிலை கண்டு

இரக்கம் கொண்டவள்போல, 'கண்ணன்! உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்ருள்.

கேள்வி மிகச் சுருக்கமாகக் கேட்டுவிட்டாள். பதில் என்ன அவ்வளவு சுலபமானதா, சொல்லிவிட. சொல்லாமலும் இருக்க முடியாது. என் எதிர்காலமே அந்தக் கேள்வியில் தொக்கி நிற்பதால். சுற்றி வளைத்தாவது சொல்லிவிடவேண்டும் என்று நினைத்தேன.

"நீங்கள் நன்ருகப் படிக்கிறீர்கள். ரசாயனத்தில் நீங்கள்தான் முதலாவதாக இருக்கிறீர்கள்'' என்றேன்.

"அந்தமாதிரி ஒன்னுமில்லேங்க! ரசாயனப் பகுதி எல்லாம் இடைநிலை வகுப்பில் நடந்தது அதனுல்தான்...'' என்ருள் அல்லி.

தொடர்பு நீடித்துக் கொள்ளச் சரியான சந்தர்ப்பம் கிடைத்தது. என் மூளை சுறு சுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது.

"அப்படியானல் உங்கள் இடைநிலை வகுப்பு ரசாயன நோட்டு கொஞ்சம்...'' என்று நான் முடிப்பதற்குள், "அதற்கு என்ன, நாளை தருகிறேன்'' என்ருள். பேசுவதற்கு வேறு விஷயங்கள் கிடைக்கவில்லை. திடீரென இடையில் பேச்சு நின்றது எனக்கு மிகவும் வருத்தமாகத்தான் இருந்தது. இருந்தாலும் நாளை மறுபடியும் சந்தித்துப் பேசும் வாய்ப்புக் கிடைக்கும் என்று சிறிது தெம்பு கொடுத்தது. "வணக்கம் நாளை சந்திக்கிறேன். மறவாமல் நோட்டு.'' என்று கூறி விடை பெற்றுக் கொண்டு திரும்பினேன். கல்லூரிக்கு அருகாமையில் இருக்கும் வெற்றிலைப்பாக்குக் கடையில் சிகரெட் வாங்கி பற்றவைத்துக் கொண்டு பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தேன். உடலில் வியர்வை இன்னும் அடங்கியபாடில்லை. சிறிது ஓய்வாகக்காற்று வாங்கலாம் என்று நினைத்து கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சந்தடி இல்லாத ஒரு மூலையில் சென்று அமர்ந்தேன்.

மாலை மங்கி இருள் கவியும் நேரம். அங்கும் இங்குமாக சில மாணவர்கள் கல்லூரி விடுதி நோக்கிப் போவதும், வருவதுமாக இருந்தனர். அவர்களேய உற்றுப் பாரத்துக் கொண்டிருந்தேன். அந்த உருவங்கள் சிறிதாகி, சிறிது நேரத்தில் உருவமிழந்து வெறும் புள்ளிகளாகத் தெரிந்தன. என்னுடைய மூன்ருண்டுக் கல்லூரி வாழ்வு—என் மனத்திரை முன் நிழலாட ஆரம்பித்தது. மற்ற கல்லூரி மாணவர்களைப் போல் ஓய்வு ஒழிவின்றி தீராத வேலைகளை வைத்துக்கொண்டு திகைத்துத் திரியவில்லை நான். காலை பத்து மணிக்கு வீட்டிலிருந்து என் காரை எடுத்துக்கொண்டு கல்லூரிக்கு வருவேன். மத்தியானம் ஒரு மணி நேரம் இடைவெளி இருந்தால்கூட எனக்குச் சாப்பாடு வீட்டிலிருந்து வந்துவிடும். சாப்பிட்டுச் சிறிது நேரம் காரில் உட்கார்ந்தபடியே ஒரு சிகரெட்டைப் புகைத்துவிட்டு காலையில் எடுத்துவந்த பத்திரிகைகளைப் பார்த்துக் கொண்டிருப்பேன். மாலையில் கல்லூரி முடிந்ததும் பந்தாடுவேன். பந்தாட்டம் முடிந்ததும் காரை எடுத்துக் கொண்டு நேராக வீட்டிற்கு வந்து விடுவேன். நண்பர்கள் எப்போதாவது உடன் வருவார்கள். ஆனல் மனம் விட்டுப் பழகி உயிருக்குயிராய் இருக்கும் நண்பர்கள் ஓரிருவர்தான் உண்டு. அவர்களில் முக்கியமானவன் அருணன், அவனுக்கு என்னைப் பற்றித் தெரியாத விஷயங்களே இல்லை. என் குடும்ப விஷயங்களிலிருந்து கல்லூரி வரை எல்லாம் அவனுக்குத் தெரியாத தொன்றுமில்லை. ஆனல் அவனுக்குக் கூட என் மனதில் காதல் அரும்பு விட்டிருப்பது தெரியாது. அல்லியின் சம்மதம் கிடைத்ததும் அவனுக்கு தெரிவிக்கலாம் என்று இருந்தேன். சாவி கொடுத்ததும் சுற்றிவரும் கெடிகாரம் போல் என் மூன்ருண்டுக் கல்லூரி வாழ்வு கழிந்து சென்றது. சென்ற ஆண்டுகளைப் போல் இந்த ஆண்டும் கழிந்திருந்தால் ......என் வாழ்வில் இன்பத்தின் ஒளிகூட வீசியிருக்காது. அல்லி சென்ற ஆண்டுதான் எங்கள் கல்லூரிக்கு வந்தாள். இதற்குமுன் பெண்கள் கல்லூரியில் படித்தாளாம். முதன் முதலில் நான் அவளைப் பார்த்த பொழுது. வீட்டிற்கு வரும் அறிமுகமாகாத விருந்தாளியைப் பார்ப்பது போன்ற உணர்வுதான் இருந்தது. கால் வருடத் தேர்வு, அரை வருடத் தேர்வு முதலியவைகள் முடிந்து விட்டன. கல்லூரியில் பாடம் ஆரம்பித்ததும் பெண்கள் கும்பலாக வந்து தங்களுக்கெனத் தனித்தனியாக இருக்கும் இடத்தில் அமர்வார்கள். பாடம் நடந்து கொண்டிருக்கும் பொழுது இடை இடையே அல்லியைப் பார்ப்பேன். இந்த 'தரிசனப்படலம்' தொடர்ந்து முதலாண்டு முடிவு நெருங்க, நெருங்க, கல்லூரியில் முதல் பாடம் ஆரம்பித்ததும் அல்லியைப் பார்ப்பது, என் நித்திய கடமைகளில் ஒன்ருக இருந்தது. முதலாண்டு முடிந்து விடுமுறை ஆரம்பமாகியது.

காலையில் எழுந்ததும் கல்லூரி நினைவு, அதைத் தொடர்ந்து அல்லியின் உருவம். அல்லி வருவாள், வகுப்பில் நுழைந்ததும் அவளிடத்தில் அமருமுன் என்னை ஓரக் கண்

ணல் வழக்கம் போல் பார்ப்பாள். அவள் சிரிப்பாள், என் சிந்தை குளிரும். நிமிர்ந்து பார்ப்பாள், என் நெஞ்சு படபட வென்று அடித்துக் கொள்ளும், 'அல்லி' என்பேன், பேசமாட்டாள், சிரிப்பாள், ஆனால் சிரிப்பு ஒலி கேட்காது. என் திறந்த கண் எதிரே நடமாடும் நித்தியக் காட்சி இது. கல்லூரியில் இருக்கும் பொழுது மாத்திரம் நான் அவளுடன் பேசிக்கொண்டா இருந்தேன்? அவளைப் பார்ப்பேன், அவள் புன்முறுவல் செய்வாள். ஒவ்வொரு சமயங்களில் கல்லூரியில் படித்தும் கொஞ்சம்கூட நாகரிகமின்றி முறைத்துப் பார்க்கிறானே என்று நினைத்து விடுவாளோ என்று மனம் தடுமாறும். ஆனால் பார்க்காமல் இருந்தாலோ, கிடைக்க இருந்த பெருநிதியைத் தவற விட்டது போன்ற உணர்வு எழுந்து என்னை எள்ளி நகையாடும் இந்த விடுமுறை நாட்களில் அவள் முகம் என் முன் தோன்றி சிரித்துக் கொண்டிருந்தாலும் உயிரும் உணர்வும கொண்டு நடமாடும் பொற்சிலையாக இருக்கும் அவளைக் காண என் கண்கள் ஏங்கிக் கொண்டிருந்தன. எதை எடுத்தாலும் எரிச்சல், எதிலும் பற்றில்லாத ஒரு போக்கு யாருடன் பேசினாலும் கோபம். தனித்திருந்த நேரத்தில் என்னுடைய செயல்களில் மெதுவாகப் புகுந்து என்னையே மாற்றிய நோய் எது என்ற ஆராய்ச்சியில் புகுந்தேன். நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடியதின் விளைவுதான் இன்று கல்லூரியில் அல்லியைக் கண்டு பேச வைத்தது.

அல்லி:

ஆண்கள் கல்லூரியில் பெண்கள் படித்தால் என்ன, பாவமா? கல்லூரி என்ன ஆண்களின் சொந்த சொத்தா? அவர்களும் சம்பளம் கட்டிக் கல்வி கற்கிறார்கள்...கல்வியா கற்கிறார்கள்...எனக்கென்ன, இதைச் சொன்னால்கூட என்னை வகுப்புமாணவர்கள் பேருக்கு ஏற்ற அல்லி ராணி என்று தூற்றுவார்கள்! நாங்களும் அவர்களைப் போல் சம்பளம் கட்டுகிறோம், கல்வி கற்கும் ஆர்வத்துடன். வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது பாடத்தைக் கவனிக்காமல், எந்தப் பெண் எந்தச் சேலை கட்டிக்கொண்டு வந்திருக்கிறாள், தலையில் என்ன பூ வைத்திருக்கிறாள், எந்தப் பக்கம் திரும்புகிறாள் என்ற ஆராய்ச்சியில் ஆண்கள் மட்டும்தான் இறங்கலாமாம். நான் மற்றப் பெண்களைப் போலன்றி சற்றுத் துணிவுடன், நிமிர்ந்த தலையுடன் நடந்தால் 'அல்லி ராணி,' 'ஜான்ஸி ராணி' என்று பெயர் வைத்துக் கூப்பிடுகிறார்கள். கூப்பிட்டா செய்கிறார்கள், கூப்பாடு அல்லவா போடுகிறார்கள்! என் வகுப்பு மாணவர்கள் எல்லோரும் அப்படித்தான் என்று எண்ணிவிடாதீர்கள். ஒருசில நல்லவர்களும் உண்டு. 'தானுண்டு, தன் படிப்பு உண்டு' என்ற போக்கில் இருக்கும் மாணவர்கள் ஒன்று இரண்டு உண்டு. இது தவிர, கல்லூரிக்கு வருவதும், வகுப்பில் உட்காருவதும் தன் கடமை யென்று, பிறரிடம் பேச்சு வார்த்தை அதிகம் வைத்துக்கொள்ளாதவர்களும் உண்டு. இந்தக் கடைசி ரகத்தைச் சேர்ந்தவர்தான் கண்ணன்.

'பொறாமை' பெண்களுக்கு உரிய தனிச் சொத்து என்று கூறும் இந்த ஆண்கள் மட்டும் என்ன, பொறாமை இல்லாதவர்களா? அப்படியிருந்தால் நான் வகுப்பில் நுழைந்ததும் தற்செயலாகக் கண்ணனைப் பார்க்கும் பொழுதெல்லாம் என்னையும் அவரையும் மாற்றி மாற்ற ஏன் பார்க்க வேண்டும்? கண்ணன சிறந்த அழகன் என்று கூற முடியா விட்டாலும், அவலட்சணமல்ல. கண்ணனைத் தற்செயலாகப் பார்த்தேன் முதல் ஓரிரு நாட்கள். ஆனால் எங்களிருவரையும் சந்தேகக்கண்களுடன பார்க்கும் மாணவர்களுக்குப் பயந்து பணிந்துவிடக் கூடாது என்ற எண்ணத்தில் கண்ணனை வகுப்பில் நுழைந்ததும் ஒருமுறை பார்ப்பதை என்னுடைய அன்றாட அலுவல்களில் ஒன்றாக்கிக் கொண்டேன். அதனுடைய விளைவுதான் என்றுமில்லாத துணிவுடன் கண்ணன் என்னைச் சந்தித்தான் என்று நினைக்கிறேன். ஆண்கள் மிக தைரியசாலிகள் என்று கூறிக் கொள்கிறார்களே, பாவம், கண்ணன் அன்று ஒரு நாள் எதையோ பேச விரும்பி எங்கெங்கோ சென்று தடுமாறிக் கொண்டிருந்தார். மறுநாள் மாலை என்னிடம் நோட்டு வாங்க வந்தார். நோட்டு வாங்கிக் கொண்டு சென்றவர் நான்கு நாட்கள் கழித்து திரும்பி வந்தார். இரண்டு நாட்களுக்குள் பாடங்கள் முழுவதும் எழுதியிருக்க முடியாது, இருந்தாலும் "ரொம்ப தாங்ஸ்" என்று கூறிக்கொண்டே என் கையில் கொடுத்தார்.

இப்படியாக எங்கள் நட்பு வளர்ந்தது. இரண்டாவது வகுப்பு இறுதியில் எங்களுக்கு தேர்வுக்குப் படிப்பதற்காக விடுமுறை விடுவதற்கு முதல் நாள் மாலை வழக்கம் போல் என்னைச் சந்திக்க வந்தார். அன்று அவர் கண்கள் மிகவும் கலங்கியிருந்தன. என்னுடன் பேசமுடியாமல் ஏதோ துக்கத்தில் ஆழ்ந்தவர் போல் இருந்தார். எனக்கும் மனது என்னவோ போலிருந்தது. கண்களிலிருந்து வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கும் கண்ணீரை அடக்

கியவாறு, "இனிமேல் நான் உங்களைப் பார்க்க முடியாது" என்றார். முடியாமல் என்ன, தேர்வு எழுத வருவேன் என்றேன். "தேர்வு உங்களுக்கு எல்லாம் பெண்கள் கல்லூரியில் அல்லவா நடக்கும்" என்றார். எனக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு அவரே பேச ஆரம்பித்தார். "நான் ஒரே பையன். எனக்குத் தங்கை, தம்பி, அக்காள், அண்ணன் கிடையாது. நான் உங்களை விரும்புகிறேன். நீங்கள் விரும்பினால் மணம் செய்து கொள்வோம்" என்றார். என் கண் முன்பு ஒரு கணம், "படிப்பை நல்லபடியா முடிச்சுட்டு பழிச் சொல் இல்லாம வந்து சேரனும்" என்று புலம்பிக் கொண்டிருக்கும் தாய், "என் அல்லி, புத்திசாலி, வரும் தேர்தலில் நிச்சயம் முதல் வகுப்பில் தேர்ச்சியடைவாள்...அடுத்த வருடம் எப்படியாவது மருத்துவக் கல்லூரியில் சேர்த்துவிட வேண்டும்" என்று கனவு கண்டு கொண்டிருக்கும் என் அருமை அண்ணன் இவர்களின் உருவம் தோன்றியது.

பெற்று வளர்த்துப் பெரியவளாக்கிய தாய், அன்பைக் கொட்டி ஆசையாக வளர்த்த அண்ணன், இவர்கள் எத்தனை நாள் தான் என்னை வளர்க்க முடியும்? என்றைக்காவது ஒரு நாள் நான் வேறொருவருக்கு வாழ்க்கைப் பட்டு, வெளியிடத்திற்கு செல்லவேண்டியதுதானே! ஆனால் அவர்களுக்குத் தெரிந்தால் அவர்கள் சம்மதம் கிடைக்குமோ, என்னவோ! ஒரே ஜாதியில் திருமணம் செய்து கொள்ளவே அந்தஸ்து, பணம், யோக்கியதை என்று கூறி தடுத்துவிடுகிறார்கள். கண்ணனோ வேற்று ஜாதியைச் சேர்ந்தவர். பெற்றவர்களுக்கும், பெரியவர்களுக்கும் தெரியாமல் நான் என் சம்மதத்தை தெரிவித்தால் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்களுக்கு துரோகம் செய்வதாகுமா? என்றெல்லாம் சிந்தித்த நான் அவர்கள் வீட்டில் சம்மதம் கிடைத்ததா என்று கேட்க மறந்தேன். என் சம்மதத்தையும் தெரிவித்துவிட்டேன். தேர்வு முடிவதற்குள் இருவரும் சென்று பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்றும், அப்படிச் செய்துகொண்டால் தான் வீட்டில் சம்மதிக்க மறுத்தாலும் நம் திருமணத்தைத் தடை செய்ய முடியாது என்றும் கூறினார். அன்று முழுதும் என் குழந்தைப் பருவ நினைவுகளும், அதைத் தொடர்ந்து எதிர் காலத்தைப்பற்றிய இன்ப நினைவுகளும் சுழன்று வந்தன. இந்த சுழற் காட்சி நடுவே நிகழ்காலத்தைப்பற்றிய நினைவு வந்ததும் இன்ப நினைவுகள் மங்கி துயர உணர்ச்சி மேலிட்டது.

தேர்வு முடிவதற்கு முன் எங்கள் திருமணம் முடிந்தது. வழக்கமாக வந்து தம்பதிகளை வாழ்த்திச் செல்லும் உற்றார், சுற்றம், ஊரார், முதலியவர்கள் வரவில்லை. கண்ணனின் நெருங்கிய நண்பர் அருணனும், என் தோழி குழலியும் வந்திருந்தனர். மற்றும் அலுவலகத்தில் உள்ள கண்ணனுக்கு வேண்டிய மூவரும் வந்திருந்தனர்.

சில நாட்களுக்குப் பிறகு தேர்வு முடிந்தது. இதற்குள் எங்கள் திருமண விஷயம் கல்லூரிக்கு எப்படியோ தெரிந்து கண்ணனின் தகப்பனார் காதுக்கும் எட்டியது. ஒரே பையனைப்பற்றி அவர் கண்ட கனவுகள், கொண்ட ஆசைகள் எல்லாம் வீணாகிப் போவதை அவர் விரும்பவில்லை. தன் இனத்திலேயே, அதிலும் தூரத்து உறவு இல்லாத பெரிய இடத்துப் பெண்ணை அவனுக்கு மணம் முடிக்க ஏற்பாடு செய்தார். கண்ணனுக்கு அப்பாவை எதிர்க்கும் துணிவு இல்லை நண்பர் அருணன் மூலம் அப்பாவுக்கு செய்தி தெரிவித்தார், "என்னைக் கேட்காமல் எப்படி நடந்தது திருமணம். யாரோ ஓடுகாலி உன்னை மயக்கி இப்படிச் செய்துவிட்டாள்" என்று கொதித்து எழுந்தார். பதிவுத் திருமணம் தானே தள்ளிவைத்துவிடு என்று கூறி அதற்கு வழக்காட பிரபல வக்கீல் வாகீசுவரய்யரையும் பிடித்தார்.

அந்தச் செய்தி என் தாய், தனயன் இருவர் காதுக்கும் எட்டுவதற்குள் நான் எப்படியாவது வீட்டைவிட்டுக் கிளம்பியாக வேண்டும். வெளியேறி எங்கே செல்வது? கண்ணன் வீட்டில் இருக்கும் நிலையில் நான் போய்ச் சேர்ந்தால்... அவர் தகப்பனார் எதற்கும் துணிந்த பெரிய மனிதர். என் உயிருக்காக நான் கவலைப்படவில்லை. உயிரினும் பெரிய என் மானம். என் தன் மானத்தை இழந்து அந்தப் பெரிய மனிதர் காலடியில் விழுந்து கெஞ்சுவதை விரும்பவில்லை. பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்கும் செல்லமுடியாது. இந்த உலகில் பெண்களுக்கு பிறந்த வீடு புகுந்த வீடு இது தவிர வேறு வழியே இல்லையா?

நீண்ட நேரம் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்தேன். என் துணிமணி இவற்றுடன் கொஞ்சம் பணமும் எடுத்துக்கொண்டு அன்று இரவு வீட்டைவிட்டுக் கிளம்பினேன். பத்திரிக்கையில் வந்த விளம்பரத்தை யொட்டி

மாங்குடி நகரில் உயர்நிலைப்பள்ளியில் இப்பொழுது ஆசிரியையாக வேலை பார்க்கிறேன். நான் கற்ற கல்வி என் வாழ்வை நடத்த ஓரளவு உதவி செய்கிறது. என் வாழ்வு இப்படியே சென்றுவிட்டால்கூட கவலையில்லை என்ற வேதாந்த நிலைக்கு நான் வந்துகொண்டிருந்த வேலையில்தான், இன்று காலை தினப் பத்திரிக்கையில் கண்ணனின் தகப்பனார், இறந்த செய்தியைத் தற்செயலாகப் படிக்க நேர்ந்தது. என் வனவாசத்திலிருந்து நான் மீண்டும் சென்று கண்ணனைக் காண்பதா? அவர் எந்த நிலையில் இருக்கிறாரோ? முன் போல் என்னிடம் அன்பு காட்டி, ஆசையோடு வரவேற்பாரா அல்லது......

என்னை விரும்புபவர் என்றால், என்னைத் தேடி வரட்டுமே, இல்லையென்றால் என் எஞ்சிய நாட்களையும் பள்ளியில் பாடம் போதிப்பதில் கழித்து விடுகிறேன்.

சிலந்திகளைப்பற்றி



வரலாற்றில், சிலந்திகள் செய்த உதவிபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் ''ராபர்ட் புருசும் சிலந்தியும்'' என்பதை அனேகமாக யாவரும் அறிந்திருக்கலாம். இங்கிலாந்தை எதிர்த்து வெற்றிகொண்டு ஸ்காட்லாந்தின் மன்னனாக ஆவதற்கு ராபர்ட் புருஸ் பலமுறை இங்கிலாநதை எதிர்த்துப் போரிட்டான். அவனது ஆறாவது எதிர்ப்பும் தோல்வியைத் தந்தது. அது 1305-ம் ஆண்டாகும். புருஸ், ரத்லின் என்ற தீவிலுள்ள காட்டில் புகுந்து வாழ வேண்டியவனானான். ஒருநாள் தனது படுக்கையில் படுத்துக்கொண்டு சிந்தனையில் ஈடுபட்டிருந்தபோது, உயரே கூரையில் ஒரு சிலந்தி கூடு கட்ட முயற்சிப்பதைக் கண்டான். ஆறுமுறை முயற்சித்தும் சிலந்தியால் கூரையைப் பிடிக்க முடியவில்லை. ஏழாவது தடவையாக முயற்சித்தது. வெற்றி கண்டது. இந்நிகழ்ச்சி புருசின் உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டியது. தீவைவிட்டு வெளியேறி ஒரு படை சேகரித்து ஏழாவது முறையாக இங்கிலாந்தை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கண்டான்.

பிரஷ்யா தேசத்தின் அரசனான மகா பிரடெரிக் (1712—1786) சான்சி சௌசி என்ற இடத்திலுள்ள தனது அரண்மனையில் தங்கி யிருந்தான். வழக்கம்போல ஒரு நாள், சாக்கலேட் குடிநீர் அருந்த உணவருந்தும் அறைக்குச் சென்றான். ஆனால் தனது கைகுட்டையை படுக்கையிலேயே வைத்துவிட்டதை எண்ணி, கோப்பையை மூடிவிட்டு, படுக்கை யறைக்குத் திரும்பினான். கைகுட்டையை எடுத்துத் திரும்ப வந்து கோப்பையை எடுத்துக் குடிக்கப் போகும்போது அதில் ஒரு சிலந்தி விழுந்து இருப்பதைக் கண்டான். உடனே கைதட்டி பணியாளை வேறொரு கோப்பை சாக்கலேட் கொண்டு வருமாறு குரல் கொடுத்தான். மறுகணம் துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. சமையல்காரன் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டான். காரணம், அவன் சதிக்கு உடந்தையாக மன்னனைக் கொல்ல சாக்கலேட் நீரில் விஷம் கலந்திருந்தான். மன்னன் வேறொரு கோப்பை சாக்கலேட்டுக்கு கட்டளையிடவே சதியை மன்னன் அறிந்துவிட்டான் என்றெண்ணி சமயல்காரன் தற்கொலை செய்துகொண்டான். தற்செயலாக கோப்பைக்குள் விழுந்து இறந்த சிலந்தி மன்னன் உயிரைக் காப்பாற்றியதாம்.

முகமதிய மதத்தைத் தோற்றுவித்த முகமது நபி மெக்காவிலிருந்து எதிரிகளின் பிடியிலிருந்து தப்பியோடுகையில் வழியிலிருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டார். அவர் உள்ளே நுழைந்த மறுகணம் அங்கு தோன்றிய ஒரு மலைச் சிலந்தி தனது கூட்டை குகை வாயிலில் கட்டத் தொடங்கியது. பின்னால் துரத்திக்கொண்டுவந்த அவரது எதிரிகள் குகையருகே வந்தனர். குகை வாயிலில் சிலந்திக் கூட்டைக் கண்டதும், நபி குகைக்குள் சென்றிருந்தால் கூட்டை உடைத்துக்கொண்டுதான் போயிருக்க வேண்டும் என்றும், சிலந்திக் கூடு அப்படியே இருப்பதால் அப்பொழுது யாரும் உள்ளே நுழைந்திருக்க முடியாது என்றும் எண்ணிக்கொண்டு திரும்பினர். முகமது நபி தப்பினார். தற்செயலாகத் தோன்றிய சிலந்தி முகமது நபியைக் காப்பாற்றியது.

எலியும் புலியும்

[புலவர். அழகுவேலன்]

எளிய முயற்சியும் பிறர் உழைப்பைத்திருடித் தின்று கொழுக்கும்வஞ்சகத்தன்மையும் வாய்ந்தது எலி. ஊரார் உழைப்பை உழைப்பின்றித் தின்று உடல் கொழுக்கும் உலுத்தர் இனத்தோடு ஒப்பிடத்தக்கது அது. அல்லும் பகலும் வயலில் வருந்தி முயன்றான் உழவன். பனியும் மழையும் வெய்யிலும் தன்னுடம்பிற்கு இயற்கை தந்த எழிலாடையாக ஏற்றுத்தரித்தான். காலமெல்லாம் பாடுபட்டான், குடியானவன் பலனை எதிர்பார்த்து. தன்னிடத்திலுள்ள உணவைப் பகிர்ந்து மற்றவர்களுக்கும் மகிழ்ந்து கொடுத்து வாழும் வள்ளல்போன்று நல்ல கதிர் மணிகளை வெளிக்காட்டிற்றுப்பசும் பயிர். நல்லறிவு பெற்றோர் உள்ளம்போல நெல்லில் உள்ளீடு பொருந்தியது. பயனற்ற சொற்களையே விரும்பிப்பேசும் அற்பர்போலப் பதரும் அங்கே கலந்திருந்தது. உலகினரின் அறியாமைப்பசியை அறிஞர்கள் எழுத்தாலும், பேச்சாலும் செயலாலும் போக்கி வருவதுபோல உள்ளீடுமணியால் பாரின் பசியைப்போக்கக் கதிர் முற்றிற்று. காய்நெல்லறுக்குங் காலமுங்கிட்டிற்று. விளைந்து முற்றி வளைந்துகொடுத்துப் படிந்து கிடந்தது பயிர், காலங்கருதிய எலிக்கூட்டம் தங்காரியத்தில் கண்வைத்தன. பயனைப்பெற உழைத்தவர் ஒருவரானார். அதன் பலனைத் திருடித்தின்ன முற்பட்டவர் பிறரானார். உழைத்தவன் உழவன். அவன் விளைத்த விளைவைப்பெருமுயற்சியின்றி வளையில்கொண்டு திணிக்கும் (சிறையிற் கொண்டடைக்கும்) சிறிய முயற்சியையே மேற்கொண்டது எலி. எலி, எளிய முயற்சியினால் வஞ்சகத் தந்திரத்தினால், கள்ளத்தன்மையினால், பெருமுயற்சிகொண்டு நேரிய வழியில் உண்மையாக உழைத்த, உழவன் விளைத்த தானியத்தைத் தன் வளையில் சிக்கவைத்துத் தான்மட்டும் உண்டு மகிழவே கருதிற்று. இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணம் தன்னலமிக்க தன்மை. கீழ்மையுள்ளம், மற்றவர்களைப்பற்றிக் கவலைகொள்ளாத மனப்பான்மை. அத்தனையும் சேர்ந்து உருவான ஒருவனே எலியுள்ளங்கொண்ட மனிதன்.

புலி அரிய முயற்சியை உடையது. வஞ்சகத் தன்மையற்றது. தன் முயற்சியினால் பழிப்பின்றிப்பெறும் உணவையே உண்ணும் தன்மையது. அத்தகைய வரிப்புலியொன்று இரையைப்பெறத் தன்குகையினின்றும் புறப்பட்டது. எதிர்ப்பட்டது கேழல் பன்றியொன்று, பாய்ந்தது புலி. மாய்ந்தது பன்றி. குறிவைத்துப்பாய்ந்து பற்றும்விலங்கு தன்பிடியினின்று தவறினும், அல்லது இடப்பக்கத்தே வீழ்ந்தாலும் அது தன் வீரத்திற்கு இழுக்கென்று உண்ணாமல் பட்டினி கிடக்கும் உறுதியுடையது புலி. புலியின் இரைக்கு ஆளாகவிருந்த பன்றி அதன் பிடியினின்றும் மீளப்பெரிதும் முயன்றது. கேழல் தவறிப் புலியின் இடப்பக்கத்தே வீழ்ந்தது. பெருமையின்றி வந்த உணவைப் புலி உண்ண ஒப்பவில்லை. அதனால் அன்று அவ்விடத்து அதனை உண்ணாமல் பட்டினியாகவே படுத்துக்கிடந்தது. மறுநாள் உணவை விரும்பித் தன் முயற்சியோடு பெரிய மலைக்குகையினின்றும் சீறி எழுந்தது. எதிரே வலிமையோடு கூடிய உயர்ந்த பெரிய ஆண்யானையொன்று வந்தது. முழுவலிமையோடும் பெருமுயற்சியோடும் அதன் வலப்பக்கத்தே விழுமாறு வீழ்த்தியது. தன் முயற்சியால் பெருமையோடு அடைந்த உணவையே சிறந்ததாகவும் தனக்குப்பெருமையாகவும் கருதிற்று. புலியுள்ளங்கொண்ட பெருமித வாழ்வுடைய பெருமக்களும் உளர். அரிய முயற்சி, நேர்மையுள்ளம் தன்னுழைப்பால் உணவைத்தேடி உயிரைவளர்க்கும் உயர்ச்சி பெருமையின்றி வரும் பொருளைக் கொள்ளாமையாகிய குணங்களையுடையார் புலிநிகர் மாந்தர்.

எலியுள்ளமும், புலியுள்ளமுங்கொண்ட மனிதர்கள் சோழன் நலலுருத்திரன் ஆட்சியில் அமைச்சர்களாக இருந்தனர். அரசன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவன். தமிழ்ப் புலமை மிக்கவன். கவிபாடும் ஆற்றல் பெற்றவன். 'உள்ளுவதெல்லாம் உயர் உள்ளல்' என்ற வள்ளுவர் உரைக்கேற்ற உயர்ந்த எண்ணங்களையுடையவன்.

கல்வியறிவுடன் கேள்வியறிவும் நிரம்பியவன். வினை செயல்வகையில் தேர்ந்தவன். தமிழகத்தில் தலைசிறந்து விளங்கினான். பேரரசனாதலால் குறுநில மன்னரும் பெருஞ் செல்வர்களும் சுற்றமாக அவனைச் சூழ்ந்து நின்றனர். அவர்களையும் அமைச்சர் குழுவினையும் துணையாகக் கொண்டே அவன் அரிய பல செயல்களையும் எளிதில் முடித்தான். அதனால் பெரும்புகழும் பெருவாழ்வும் பெற்றான். மன்னனென்ற மமதையின்றி மற்றவர்களோடு கலந்து பழகினான். சூழ்ந்து நின்ற சுற்றத்தவர்களின் குணஞ்செயல்களைக் கூர்ந்து ஆராய்ந்தான். தன்னை யடுத்திருந்தவர்களுள் ஒரு சிலர் உண்மைக்குப் பாடுபட்டனர். உயர்ந்த உள்ளமுடையவராய், நடுவு நிலைமை மாறாதவராய்த் தன்னலமே பெரிது என்று எண்ணாமல் மக்கள் நலனைக் கருதி ஆட்சிக்கு இழுக்கு நேராவகையில் நடந்துகொண்டனர். வேறு சிலர் எத்தகைய இழிசெயலைப்புரிந்தும் பொருளைத் திரட்ட எண்ணினர். மக்களைப் பற்றியோ ஆட்சியைப்பற்றியோ சிறிதும் கருதிலர். இட்டதே சட்டம், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று சாதிக்கும் பிடிவாதக் குணம் படைத்தவராயினர். தன்னலமே பெரிதென மதித்தனர். மாற்றார் வலிமையை நினைக்கமறந்தனர். சிறிய முயற்சியும், குறுகிய உள்ளமுங் கொண்டிருந்தனர். இத்தகையவரால் ஆட்சிக்குக்கேடு நேர்வதையும் கண்டான் சோழன்.

ஆட்சியின் ஆக்கத்திற்குக் காரணமா யிருந்தவர்கள் மாசற்ற மனமும், அறநெறியொழுக்கமும், மனத்திட்பமும், நேர்மையும் கொண்டிருந்தனர். நடுநிலை மாறி வரக்கூடிய செல்வம் எவ்வளவு பெரிது எனினும் அதனைப் பெற மறுத்தனர். மாறுபாடுகள் வேறுபாடுகள் நிறைந்த வழியில் அவர்கள் உள்ளம் செல்லவில்லை.

நாட்டிற்குக் கேடுவருங் காலத்தில் அக்கேட்டிற்குரிய காரணத்தையும் நல்லுருத்திரன் ஆராய்ந்தான். கேடு வருவதற்குக் காரணமானவர் தம்மிடத்திலேயே சூழ்ந்திருப்பதை யுணர்ந்தான். அவர்கள் குணஞ்செயல்களையும் ஆராய்ந்தான். அக்கேடர்களின் உள்ளத்தில் தூய்மையில்லை. பேச்சில் உண்மையில்லை. கடமையை நிறைவேற்றும் பண்பில்லை. மனவலிமையுமிலர். உழைப்பார் உழைப்பை நேர்முகமாகவும் மறைமுகமாகவுங் கவர்ந்தனர். மற்றவர்களைப்பற்றிச் சிறிதும் சிந்தியாத கடுகுள்ளம் படைத்தனர். தன்னலச் சூழ்ச்சியில் தலைசிறந்தனர்.

"எற்றிற் குரியர் கயவர் ஒன்றுற்றக் கால்
விற்றற் குரியர் விரைந்து"—என்ற வள்ளுவர் மொழிக்கு இலக்காயினர். தவறான வழியில் சென்று அகப்பட்டுக் கொள்ளுங் காலத்தில் உடனே காலந்தாழ்க்காமல் காலைப் பிடித்துக்கொண்டு தஞ்சம் புகத் தயங்க மாட்டார்கள். அத்தகைய கீழோரை விலக்கி நாட்டுக்குழைக்கும் நல்லோரைப் பெருக்கிக் கொள்ள அவன் விழைந்தான். உள்ளக் கருத்தினை ஒளுருக்கினான். இவர்கள் குண நலன்களுக்கு ஏற்ற உவமையைக் கண்டான். அவ்வுவமைகளே எலியும் புலியுமாகும். அவற்றின் செயல்கள் தீக்குணமுடையார் நற்குணமுடையார் செயல்களுக்குப் பொருந்தும் வகையைச் சோழன் நல்லுருத்திரன் அமைத்த கருத்தோவியமே புறநானூற்றின் பாடல்.

விளைபதச் சீறிட நோக்கி வளைகதிர்
வல்சி கொண்டளை மல்க வைக்கும்
எலிமுயன் றனைய ராகி யுள்ளதம்
வளன்வலி யுறுக்கும் உளமில் ஆளரொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ.
கடுங்கண் கேழல் இடம்பட வீழ்ந்தென
அன்றவன் உண்ணா தாகி வழிநாள்
பெருமலை விடரகம் புலம்ப வேட்டெழுந்து
இருங்களிற் றொருத்தல் நல்வலம் படுக்கும்
புலிபசித் தன்ன மெலிவி லுள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ.

[நற்றிணை—81]

[வல்சி - உணவு, அளைமல்க - குகைநிறைய, வளன் - செல்வம், வலியுறுக்கும்-உண்ணாமல் இறுகப் பிடிக்கும். கேழல் - ஆண்பன்றி. பட - இறக்க; அவன் - அவ்விடம், வழிநாள் - மறுநாள். விட ரகம் - குகையிடம், புலம்ப - தனிமைப்பட, வேட்டெழுந்து - விரும்பி எழுந்து, உரன் - வலிமை, வைகல் - நாள்.]

பில்லி சூனியம்

(பேரறிஞர் ம சிங்காரவேலு)

சூனியம் வைத்தல் என்ற வித்தையை (Art) சற்று விசாரிப்போம். இந்த வித்தையை மாரண வித்தை என்பார்கள். அதாவது ஒருவனை அழித்து விடுதற்குரிய வித்தை என்று சொல்லலாம். பழக்கத்தில் சூனியம் வைத்து ஒருவனை "எடுத்து விடுதல்" என்றும் சொல்லுவார்கள். அகால நோய் ஒருவனுக்கு வந்தால் அந்த நோயைச் சூனியத்தால் ஏவ விடப்பட்ட தென்பார். சில நாளைக்கு முன்பு சூனியம் வைப்பதற்கு முயன்ற கூட்டத்தாரை கிராம அதிகாரிகள் கைபிடியாகப் பிடித்த காலையில் அந்த இடத்தில் நடந்த சம்பவத்தை சற்று விளக்குவோம். திருவான்மியூர் என்ற கிராமத்தில் பலகை வாராவதிக்கு அருகில் இரண்டு பங்காளிகளுக்குள் மனவருத்தம் நேரிட்டு, ஒரு பங்காளி இன்னொரு பங்காளிக்கு சூனியம் வைத்து விடச் சில சூனியக்காரர்களை வர வழைத்து அடுத்த தோட்டத்தில் சில சூனியத்திற்கு வேண்டிய கிரிகைகள் நடந்தனவாம். அவைகளெனனவென்றல், சுடுகாட்டிலிருந்து கொண்டுவந்த சில எலும்புகள், முக்கியமாக பெருவிரல்கள், ஓணன் தலைகள், ஆட்டு இறைச்சி, கோழி இரத்தம், தேரை (ஓர்வித தவளை வகை) மஞ்சள், குங்குமம், தேங்காய் பழம், அழுககடைந்த கந்தைத்துணி, இனனுஞ் சில பொருள்கள் அங்கு கிடந்தனவாம். இவைகளைக்கொண்டு மந்திர ஜபம் செய்ய எத்தனித்த காலை எதிரி இதனை அழித்துவிட்டதாக வதந்தி. இந்த அழுக்கான பொருள்களைக்கொண்டு (Filthy things) சில மந்திரங்களை உச்சாடனம் செய்து (அதாவது) விளங்காத அர்த்தமில்லாத சொற்களைச் சொல்லி, எந்த ஆண்மாவையோ எழுப்புவதாக எண்ணி நாயை உசுப்பிவிடும் மாதிரியாக எழும்பிய ஆண்மாவையோ, பிசாசையோ, குட்டிச்சாத்தானையோ, எதிரியின் பேரில விடுவதாக உத்தேசித்துக்கொண்டு பூசையை நிறைவேற்றுகின்றர்கள். இந்த வித்தையில் நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அது யாதெனில், ஆதிமுதல் அந்தம்வரை எல்லாம் கற்பனைகளே. மந்திரங்களும், கற்பனை (Dirty things) அசங்கித பொருள்களைக்கொண்டு பூதமோ, பிசாசோ, கன்னிகையோ, குட்டிச்சாத்தானையோ எழுப்புவதும் கற்பனை, அவைகள் மூலமாக எதிரியை கொல்ல நினைப்பதும் கற்பனை. கற்பனு "ஆண்மாக்களால்" நோய் உண்டாக்குவதும் கற்பனை. இந்தக் கற்பனைகள் ஒன்றெடொன்று கோர்க்கப்பட்டு அவைகளிலிருந்து விளையும் வினைகளைக் கண்டால் மூட கற்பனைகளின் ஆதிக்கமே ஆதிக்கம்! உலகம் கற்பனைகளாலேயே மயங்கி வருந்துகின்றது,

சூனியம் வைத்தல் என்பது புராதனமான வித்தை என்னலாம். யஜுர் (Yajur Veda) வேதத்தில் இந்த கற்பனையைக் காணலாம். அசங்கித பொருள்களால் பிசாசுகளை வசப்படுத்தலாமென்ற கோரிக்கை ஒரு காலத்தில் உலக முழுமையுமே பரவி இருந்தது. ஷேக்ஸ்பியர் (Shakespear) என்ற ப்ரபல ஆங்கில நாடகக் கவி மாகபத் (Macbeth) என்ற நாடகக் கதையில் சூனியக்காரிகள் மந்திரங்களால் அசங்கிதமான பொருள்களால் பேய் பிசாசுகளை எழுப்புவதை நன்ருக வர்ணித்துள்ளார். இதைப்போன்ற கற்பனையை ஜெர்மன் பிரபல கவியாகிய கெதே (Goethe) என்றவர் தன்னுடைய பிரபல நூலாகிய "பாஸ்டில்" (Fawst) வரைந்துள்ளார். நமது நாட்டில் "சூனியம்" என்ற பித்தலாட்டம் கிராமமக்களை வதைத்து வருகின்றது. சூனியத்தால் கிராம முழுமையுமே பயந்து விடுகின்றது! சூனியக்காரனென்ற பித்தலாட்டக்காரனைக் கண்டதும். பாமர மக்கள் நடுங்குகின்ருர்கள்! அறிவின்மையாலும் விசாரணை இன்மையாலும், வெறுங் கற்பிதச் சொற்கள் இவ்வளவு பயத்தை உண்டாக்குகின்றன. இதன் காரணமென்னவெனில் அறியாமையே. (Ignorance) உடலில் நிகழும் செய்கைகள் யாவும் (Bodily actions) நடத்தைகள் யாவும் (Behaviour) நிகழ்கின்ற காரணத்தைத் தெரிந்து கொள்ளாமல் "புருஷன்" என்ற தனிப்பொருள் ஆண்மா வடிவமாக, அல்லது பேய் பிசாசு வடிவமாக அல்லது குட்டிச்சாத்தான் வடிவமாக உலாவுகின்றதாக எண்ணுகின்ருர்கள். இது முதல் கற்பனை. இக்கற்பனைப் புருஷர்களை சிற்சில கிரியைகளால் அவைகளுக்குப் பிரியமான பொருள்களைக் கொண்டு வசியப்படுத்தலா

1007

மென்ற எண்ணம் இரண்டு. இத்தியாதி பேய் பிசாசுகளைக்கொண்டு, அதாவது அவைகளை வசியப்படுத்திக்கொண்டு, தங்கள் எதிரிகளின் பேரில் எந்தக் குட்டிச்சாத்தான்களையும் வெளியிடலாமென்ற எண்ணம் மூன்று. இம்மூன்று எண்ணங்களால் சாமானிய மனிதர் நோய்கள் உண்டாகும் காரண காரியங்களைத் தெரிந்துகொள்ளாமல் மந்திர தந்திரங்களினால் அவைகள் உண்டாகலாமென்றும், அந்நோய்கள் மூலமாக பகைவரை வருத்தலாமென்றும் நம்புகின்றார்கள். இந்த மூட நம்பிக்கைக்கு ஆதாரமென்னவெனில் ஆண்மா ஒன்று உண்டென்ற மூட நம்பிக்கையேயாகும், இந்த மூடநம்பிக்கை போன்ற இன்னொரு மூட நம்பிக்கை நமது மக்களிடம் காணலாம். அதாவது "கழிப்பு எடுத்தல்" என்னும் ஓர் பழக்க முறை. இது பலவிதமாக பல பொருள்களைக் கொண்டு செய்து வரப்படுகின்றது! கழிப்பின முக்கிய கருத்து என்னவென்னில் சில பொருள்களைக்கொண்டு சில்லறைத் தெய்வங்களாகிய முனீஸ்வரன், காளி அம்மன் அருளைப்பெறலாமென்பது. இதற்கு செய்ய வேண்டிய முக்கிய காரியமென்னவெனில், பலியிடுதல், அதாவது உயிரை, எந்த உயிராயினும், அந்தத்தேவதைகளால் உண்டானதாக எண்ணப்படும் சில நோய்களைத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்கையைச் சாமானியரிடம் அதிகமாகக் காணலாம்.

சில்லறை நோய்களாகிய வயிற்றுப் போக்கு, சீதபேதி, குளிர் சுரம் இவைகளைப் போக்க தேங்காய்களை சமர்ப்பிக்கின்றார்கள். சில இடங்களில் தேங்காய் குடுமியில் மூன்று குச்சிகளை நுழைத்து அந்த குச்சிகளுக்குக் கந்தைகளை சுற்றி தீ பற்றவைத்து நோயாளிமுன் சுற்றுகிறார்கள். இத்துடன் மிளகாயை நெருப்பிலிட்டு அதையும் நோயாளி முகத்திற்கெதிரில் சுற்றும் பழக்கம் மீன் பிடிக்கும் வலைஞரிடம் காணலாம். மலேரியா என்ற குளிர் சுரங்களுக்கு (Malarial fever) காலணாவை மஞ்சள் கந்தையில் சுற்றி கையில் கட்டுகிறார்கள். இதை ஆமுலெட்ஸ (Amulets) என்று அதாவது குளிசம் என்று சொல்லுவார்கள். இத்தியாதி பொருள்களுக்கும், வியாதி போவதற்கும் என்ன சம்பந்தமென்பதை அறியக்கூடவில்லை. ஆனால் இவைபோன்ற பழக்கங்கள் உலக முழுமையுமே காணலாம். காட்டுமிராண்டிகளிடம் குளிசத்தை வெகு வினோத காட்சிகளுக்கெல்லாம் உபயோகிக்கின்றார்கள்! விரோதியை வெல்ல வேண்டுமானால் அதற்கு ஓர் குளிசம், நோய் "காற்று" "கருப்பன" படாதிருக்க வேண்டுமானால் அதற்கு ஒரு குளிசம், ஒரு பெண்ணை வசியம் செய்ய வேண்டுமானால் அதற்கோர் குளிசம். இன்றைக்கும் சில கட்சிக்காரர் நீதிபதிகளை வசியம் செய்ய மந்திரித்தகுங்குமத்தையாகிலும், குளிசத்தையாகிலும் தரித்துக்கொண்டு நீதிபதி முன் நிற்கப்பார்க்கலாம். இப்பழக்கங்களின் அந்தரங்க தாத்பரியம் என்னவெனில் மந்திரத்தால் சிறு தேவதைகளை வசியம் செய்து அந்த தேவதையை அந்த குளிசத்தில் புகச் செய்து அந்த தேவதையின் சக்தியைக் கொண்டு, வேண்டிய கோரிக்கையை நிறைவேற்றிகொள்வதென்ற நினைவு போலும்!

நான்கு சந்து சந்திக்கும் இடங்களில் சில உயிரைக்கொன்று, அங்கு அதன் இரத்தத்தை, குங்குமம், மஞ்சள், ஓணான்வால், அல்லது முயல்காதுடன், புதைக்கும் பழக்கம் அதிகமாக பட்டணங்களிலும் பார்க்கலாம். சந்திக்கும் சந்துகளுக்கும் கோரிய கோரிக்கைக்கும், என்ன சம்பந்தமென்றும் தெரியவில்லை. நாலு பக்கங்களிலிருந்து வரும் மக்களில், தங்கள் விரோதியும் வருவான் என்ற எண்ணமாக இருக்கலாம்! புதைத்த பொருள்களுக்கும் நான்கு சந்து சந்திப்புக்கும், வயற்றுங்கழிச்சலுக்கும், என்ன சம்பந்தமென்றும் விளங்கவில்லை. சில சூனியக்காரர்களை (Sorcerers) விசாரித்ததில், புதைத்த சாமான்கள் அழுகும் மாதிரி, எதிரியும அழுகிப்போவானாம்! இது என்ன விந்தை! சுடுகாட்டில் வேகும் உடல்களைப்போல், அவைகளின் சுற்றத்தாரும் வெந்து போவதை ஒத்திருக்கிறது! அல்லது புதைந்த பிணங்கள் மாதிரி சுற்றத்தாரும் அழுகுவார்களோ? மனிதனுக்கு, அகோர எண்ணங்கள் பலப்பல தோன்றிக்கொண்டே இருக்கின்றன. அவைகளில் இதுவும் ஒன்றாக இருக்கலாம். இதை சாதாரண மக்கள்கேட்டு, மயங்கி, காரியங்களின் சம்பந்தங்களை அறியாமல், பல எண்ணங்களிலும் மனதைச்செலுத்தி மோசம் போகும் வினோதமே, வினோதம்! இவைகளை செய்து பிழைக்கும் மனிதர்களை விலங்கிட்டு தண்டிக்கும்வரை, இந்த அகோர எண்ணங்கள், பழக்கத்தில் வந்துகொண்டே இருக்கும். இதனால் பலவாயிரம் ஏழைமக்கள் ஏமாந்து கொண்டே போவார்கள். பல உயிர்களும் நாசமுற இடங்கொடுக்கிறது.

இக்கொடிய பழக்கவழக்கங்களின் ஆதாரங்களை விளக்குவது மாத்திரம் போதா. இதன் ஆபாசங்களை தெரியப்படுத்தலும் போதா. இவைகளால் எழும் கெடுதிகளை விளக்குவதும் போதா. இந்தமாதிரி ஈனத்தை நிகழச் செய்யும் மந்திரககாரர்களையும், சூனியக்காரர்

களையும்(Sorcerers)குற்றவாளிகளாக்கவும், தண்டிக்கவும் பகுத்தறிவுச் சங்கத்தார் (Rationalist) ஆதிக்கம் பெறவேண்டும். பகுத்தறிவுச் சங்கத்தோடு (Rationalist association) நின்றால் போதாதது. அரசியலில் நமது பிரதிநிதிகளை அனுப்பி இந்தக்கொடுமைகளை நீக்கும் நீதி மார்க்கங்களைக் கையாடல் வேண்டும். சட்டங்களால் தண்டிக்கப்படாமல், இம்மாபாதக பழக்கங்கள், ஒழியவேயொழியா, பகுத்தறிவுச்சங்கத்தாருக்குப் பதிலாக நமது நாட்டில் உழைத்துவரும் சுயமரியாதைக் கூட்டத்தார், இதற்காக அரசியலில் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

அரசியல் ஆதிக்கம் பெறாமல் எந்த சமூகத்தீமைகளையும் வேரறுக்க முடியாது. "சதி" (Suttee) எனும் கொடும் பழக்கத்தை ஒழித்தும் விதவா விவாக நியாமும், சாதி துறந்தாருக்கு ஆதரவும் கிடைக்கப்பெற்றதும அரசியல் ஆதிக்கம் இருந்தமையால் என அறிக. வெறும் பிரசாரத்தால் மூட நம்பிக்கைகள் முடிவுபெறா எனவும் அறிக. உதாரணமாக நமது இளவரசர் வரும்போது, ஒன்பது கருப்புப்பூனைகளையும், ஒரு எட்டுக்கால் பூச்சியையும் அதிருட்டம் உண்டாக பிரயாணத்தில் கொண்டுபோவது வழக்கமாம்! அரசர்களே மூடப்பழக்கங்களுக்கு இடங்கொடுத்ததால் சாமான்ய மக்களாகிய நாம் எவ்வளவு? அதற்குத்தான் இந்த மூடப் பழக்க வழக்கங்களை விட்டுவிட சட்ட திட்டங்கள் ஏற்படவேண்டும். ஆங்கிலேயர்கள் 13வது எண்ணைக் கண்டு மிகவும் பயப்படுவதும் ஓர் அதிசயம். சிற்சில எண்கள் மகத்துவம் அடைந்திருப்பதைப் பார்த்தால் ஆச்சரியமாகவே இருக்கின்றது. மும்மணி, மும்மூர்த்தி, மூன்று உலகம் கீழ், மேல், நடு என்று 3-க்கும், பஞ்சலோகம், பஞ்சசீலம், பஞ்சமா பாதம் என 5-க்கும், ஏழுகால், ஏழுமேகம், ஏழுரிஷிகள் ஏழு வர்ணம் என 7-க்கும், ஒன்பது கிரகங்கள், ஒன்பது வாரம் என 9-க்கும், பன்னிரண்டு மாணுக்கர்கள்...(Twelve disciples)பன்னிரண்டு நட்சத்திரங்கள், பன்னிரண்டு மாதங்கள் என 12-க்கும், இவ்விதமான சிற்சில எண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். இதுவும் ஓர் சொல்பழக்கம். இந்த எண்கள் சோதிடத்தில் அதிகமாக உபயோகப்படும். இவ்வெண்களைச் சொன்னால் அதன்மேல் சோதிடன் (Astrologer) அந்தக் கணக்கிற்கு ஒத்த நடவடிக்கைகளைச் சொல்கின்றான். இவையாவும் ஓர்வித பித்தலாட்டம் என அறிக. எண்களுக்கும், நமது நடவடிக்கைகளுக்கும் என்ன சம்பந்தம் எனக்கேட்கின்றேன். நட்சத்திரங்களுக்கும், நமக்குமுள்ள சம்பந்தம் தினை அளவுகூட ஒன்றுமில்லை 1, 2, 3, 4, 5, 6,......என்று கோடி எண்களை உச்சரித்தாலும், இந்த எண்களுக்கும் நமது குணசேட்டைகளுக்கும் என்ன உறவு? எனக்கேட்கின்றேன். கோடி என்று சொல்வதில் கோடி ஒன்று இருக்கிறது. கோடி ஒன்றைச் சொல்லாமல் நமது சௌகரியத்திற்காக கோடி ஒன்றுகளை, ஒருகோடி என்று வழங்குகின்றோம் அதே மாதிரி 2. 3, 4, 5, 6, 7, 8, 9, 10...ல் இரண்டு ஒன்றும் மூன்று ஒன்றும் சொல்வதை விட்டு 2, 3, 4, 5,...என்று சுருங்க உரைக்கின்றோம். இதுதான் கணக்கின் வரலாறு. பெருக்கலும், கூட்டலும், கழித்தலும் எத்தனை ஒன்றைக் கழித்தோம், எத்தனை ஒன்றைக் கூட்டினோம் என்று அடிக்கடி சொல்லாமல் $4+4=8$ என்கின்றோம். $4\times4=$ பதினாறு என்கின்றோம். நம்முடைய அவசரத்திற்காக அங்க கணிதம், பீஜ கணிதம் ஏற்பட்டன. நம்முடைய சௌகரியத்திற்கும், அவசரத்திற்கும் சுருங்க உரைத்தலுக்கும் ஏற்படுத்திக்கொண்ட எண்களை மகத்துவப்படுத்துவதென்றால் இதைவிட பயித்தியக்காரத்தனம் உலகில் ஒன்றுமில்லை. சோதிடம் முழுமையும் எண்களைக்கொண்டே நிர்ணயிக்கின்றார்கள். இதை நமது "நாலடி" அதிகாரிகள் பித்தத்திலும் பித்தம் என்று வரைந்துள்ளார்.

சோதிடம், மந்திர தந்திரங்கள், பில்லி, சூன்யாதிகள், பூசை நைவேத்தியம், பிரார்த்தனை, (Prayer) முதலிய பழக்கங்கள் தொழில் புரியாமல், எளிதில் பலனை அனுபவிக்க நேரிடும் சோம்பேறிகளுக்கு ஏற்பட்ட மோசவித்தைகளாகும்.

செல்வமும், சம்பத்தும், வெற்றியும் அடைய வேண்டுமானால் கடுமையாக உழைக்கவேண்டும். இவ்விதம் உழைக்க மனமில்லாத சோம்பேரிகளுடைய கோரிக்கைகளுக்கு ஓர்வித பரிகாரம் கொடுக்க ஏற்பட்டவை எல்லா மதங்களும். எல்லா மந்திரங்களும், எல்லாப் பிரார்த்தனைகளும் மனிதனுடைய மூடக் கோரிக்கைகளுக்கு ஆறுதலையுண்டாக்க ஏற்பட்டவை. இயற்கையிலிருந்து எதையாகிலும் பெறவேண்டுமானால், கடினமாகஉழைக்கவேண்டும். மழைத் தண்ணீரைத் தேக்க உழுது பயிரிட, துணிகளை நெய்ய, கப்பல் கட்ட யாத்திரை செய்ய, கல்வி கற்க மற்றும் பல காரியங்கள் செய்ய மெய் வருந்த உழைத்தே தீரவேண்டும். மந்திரத்தால், தந்திரத்தால், சோதிடத்தால் எந்த உயிரும் தனது வாழ்வுக்கு வேண்டியவைகளை பெறுகிறதில்லை. பெறவும் முடியாது. உலக முழுமையுமுள்ள, உயிர்கள் அனைத்தும் மெய்

வருந்தி இரவும் பகலும் உழைத்தே வாழ்ந்து வருகின்றன. விஞ்ஞான பயன்கள் யாவும் மெய்வருந்த கடினமான உழைப்பினுல்தான் இன்று மனிதர்கள் அடையப் பெற்றுள்ளார்கள். ரயில் வண்டிகளும், ஆகாயத் தந்திகளும், பேசும் யந்திரங்களும், மின்சார வண்டிகளும், மின்சார விளக்குகளும் பல ஆண்டு காலங்களாக உழைத்ததின் பயனுகை கண்டுபிடிக்கப்பட்டன. "ஒரு எண்ணைச் சொல்லு ஐந்துக்குக் குறையச்சொல்லு" என்று கேட்டு ஓலைச் சீட்டைப் பார்த்து, உனக்கு ஆகாய ரதங்கள் கண்டுபிடிக்கச் சக்தி யுண்டாகுமென்றதனுலா ஆகாய ரதங்கள் வந்தன? 1874-ம் ஆண்டு முதல் நாளதுவரை மெய்வருந்த உழைப்பதனுல் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு அபாயத்தினின்றும் மீண்டு வருகின்றோம். எந்த சோதிடக்காரன இந்த அபாயங்களைத் தெரிந்து முன் எச்சரிக்கை செய்கின்றன்? பூகம்பத்தால் (Earthquake) பூமி அதிர்ச்சியால் ஆயிரக்கணக்கான மக்கள் திடீரென மடிகின்றுர்கள்? இதன் ஆதாரங்களைக் கண்டுபிடித்து முன் எச்சரிக்கை செய்ய பல நாடுகளில் பூமி அதிர்ச்சி நூலோர் (Scismologists) மெய்வருந்த உழைத்து வருகின்றுர்கள். மழை, இடி, மின்னல், புயல், பனி, எந்தக் காலத்தில் வருமென்று முன் அறிக்கையிட, கடந்த 50 ஆண்டு காலமாக உலகந்தோறும் அறிவியல் வல்லுநர்கள், காற்று, மழை, இரவு, பகலெனப் பாராது உழைத்து வருகின்றுர்கள். இவ்வளவு உழைத்து வந்தும் இயற்கை (Nature) அவர்களுக்கு இடம் தருவதாகக் காணேம். விடாமுயற்சி கொண்டு உழைத்து வந்தால் அன்றே, எந்தப் பயனும் பெற முடியும்? இதை விட்டு விட்டு சோம்பித் திரியும் சில தனவந்தர்கள் "என்க்கு அந்த சோதிடன் சொன்னுன், இந்த சோதிடன் சொன்னுன் என்று எழை மக்களை ஏமாற்றுவதைக் கண்டால் யாருக்குத் தான் மனம் பொறுக்கும்?

நட்சத்திர சம்பந்தத்தால் உலக செல்வாக்கும், சம்பத்தும், செல்வமும், அறிவும், ஞானமும், புகழும், கிடைக்குமென்றுல் எவ்வளவு பேருக்கோ கிடைத்திருக்குமே? செல்வமும் செல்வாக்கும், முதலில் பெற்றவர்கள் அவர்களுடைய திறமையால் அடையப் பெற்றுர்களே யொழிய நட்சத்திர சம்மந்தத்தாலோ அல்லது மந்திரத்தாலோ அல்லது எண்ணங்களாலோ பெறவில்லை யென்பது மக்கள் அனுபவம்.

நம்முடைய நடத்தை நமது வழக்கவொழுக்கங்களாலும் நமது தாய் தந்தையர், சுற்றத்தார், உறவினர் சிநேகிதர் அடுத்தவர்களுடைய கூட்டுறவாலும் சம்பந்தப்பட்டு இருக்கின்றனவே யொழிய கோடி மைலுக்கப்பால் மினுக்குமினுக்கென பிரகாசிக்கும் நட்சத்திரங்களினுல் ஒன்றும் ஆவதில்லை. மெழுகுவத்தி ஒன்றை அடுத்த அறையில் கொளுத்தி வைத்து அதனுல் நமது நடத்தையோ நடவடிக்கையோ பாதிக்கப்படுகிறதா என்று பாருங்கள்! இல்லையானுல் அதே வெளிச்சத்தைதரும் நட்சத்திரங்களால் நமது நடத்தை பாதிக்கப்படுவது என்ன நிச்சயம்?

அதே மாதிரி அடுத்த வீட்டுக்காரன் கோழி இறைச்சியையும், தவளை இறைச்சியையும் தின்பது நமது வீட்டுப் பிள்ளைகளுடைய சுகத்தை எப்படி பாதிக்கும்? அதுபோலவே சுடுகாட்டு எலும்புகளும், மனிதனுடைய பெருவிரலும் குரங்கு நகங்களும் அடுத்த வீட்டுக்காரன குழந்தையின் சுகத்தை எப்படிக் கெடுக்கும்? ஆதலின் சூனியத்தால் ஒருவனை கொல்வதாவது நோயில் விழச் செய்வதாவது குதிரைக்கு கொம்பு முளைத்தது என்று கேட்பதையே ஒக்கும்.

முதலில் பிள்ளையின் பெருவிரலாலும், ஒணுன் பல்லிவால் துண்டுகளாலும், ஆமை ஓட்டாலும், தவளை, தேரையாலும்; ஒருவனை சாக வைக்கக் கூடுமானுல், சண்டைக்கு சேனைகளென? அம்பு வில் ஏன்? குண்டு துப்பாக்கிகளேன்? இரண்டொரு இறந்து போன ஒணுன், எளிய குழந்தைகளின் பெருவிரலைக் கொண்டு, சில மந்திரத்தைச்சொல்லி சேனைத் தலைவனை "எடுத்து" விடலாமே? மெழுகுவத்தி வெளிச்சத்தால் நமது நல்ல நடவடிக்கையோ, அல்லது கெட்ட நடவடிக்கையோ சரிபடுத்தப்பட்டால் ஏன் ஒவ்வொரு சிறுவன் சிறுமியையும் மெழுகுவத்தியாலேயே திருந்த வைக்கலாமே? இது ஆபாசமான செய்கை என்றுல் மெழுகுவத்திக்கும் மிக குறைந்த வெளிச்சத்தைக் கொடுக்கும் ஒரு நட்சத்திரத்தால் நமது நடவடிக்கை ஆளப்படுமென்பது ஏன் ஆபாச வார்த்தை ஆகாது? ஆதலின், பில்லி, சூனியாதிகளும், சோதிடமும், எண்களும், மந்திர தந்திரங்களும் சில மோசக்காரர் ஜீவனம் செய்து பிழைக்க ஏற்பட்ட சூழ்ச்சிகளே யொழிய அவ்வித்தைகளில் யாதொரு— உண்மையுமில்லையென அறிக.

★

கடைசிக் கடிதம்

(ப. சிவானந்தம்)

(ஒரு பிரஞ்சு கதையின் தழுவல்)

பிலிப்பின் வாழ்வில் அன்று அஸ்தமனம். அவனுடைய ஒன்பதாண்டு இன்ப வாழ்வு ஒரே நொடியில் சரிந்துவிட்டது. அவனுடைய மனைவி தோரேஸ் இறந்துவிட்டாள். அளவற்ற செல்வம், அழகான இருப்பிடம் ஒன்றுமே அவனுக்கு இன்பத்தைத் தரவில்லை. உலகமே பாழும் வெளியாகத் தோன்றியது.

கல்லறை அவளின் மலர் உடம்பை விழுங்கியது. பிலிப்பின் கதறலும் கடல் அலைகளின் பேரொலியும் மாறி மாறி எழுந்தன. தங்களின கடைசி வணக்கத்தைத் தெருவிப்பது போன்று மரத்தில் இருந்து சில பூக்கள் உதிர்ந்தன. கொஞ்சம் கொஞ்சமாக அந்த இடத்தில் மௌனம் நுழைந்தது. கடைசியாக எஞ்சி இருந்தவை ஒரு சிட்டுக்குருவியின் "கீக் கீக்" என்ற சப்தமும் கடல் அலைகளின் முழக்கமுமே.

நோராவிற்கு ஒன்றுமே புரியவில்லை. தன் தாயை ஏன் காணவில்லை? எங்கு சென்று விட்டாள்? ஏன் தந்தை அழுகிறார்? என்ற கேட்விகளை அவளின் பிஞ்சு மூளை எழுப்பியது. ஆனால் அந்த வினாக்கள் விளங்காத பெரும் புதிராகவேத் தோன்றின.

மறுநாள்......

நோராவின் பால் வடியும் வதனத்தில் ஏக்கத்தின சாயல் படிந்திருந்தது.

"அம்மா எங்கேப்பா?" என்று கேட்டாள்.

நாற்காலியில் கவலையாக உட்கார்ந்திருந்த பிலிப் அவளை ஏறிட்டு நோக்கினான். என்ன பதில் கூறுவது?

"அம்மா எங்கேப்பா?" மீண்டும் கேட்டாள். அவன் உள்ளம் நடுங்கியது. "வருவாள் நோரா" என்றான் அந்த குரலிலும் நடுக்கம் தொனித்தது.

"ஒரே குளிரா இருக்கே, அம்மா போர்வையை எடுத்துப் போனாளா அப்பா?" கபடமற்ற கேள்வி. அவன் துயரத்தைத் தூண்டியது. மனம் சென்ற காலநினைவை நோக்கி ஆடியது.

"ஆமாம் நோரா அம்மாவிற்கு குளிரத்தான் செய்யும்" என்று கூறிக்கொண்டே அவளை அணைத்துக்கொண்டு கதற ஆரம்பித்தான். இந்த சோகக் காட்சியைக் காணச் சகிக்காமல் அவன் காலடியில் மௌனமாக படுத்திருந்த சடை நாய் எழுந்து நின்றது.

பிலிப் ஒருவாறு சமாதான மடைந்தான். சின்ன குழந்தையின் முன் துயரத்தை வெளியிடுவது தவறு என்று அவன் உள் மனம் கூறியது. நோராவை கீழேவிட்டான். "அதோ பார் நோரா உன் நாய் போய் விளையாடு" என்று அன்போடு கூறினான். அந்த நன்றியுள்ள நாய் சந்தோஷத்தால் வாலை ஆட்டியது. "அம்மாவை அழைத்து வரணும்" என்று கூறிக்கொண்டே தன் நாயைப் பின் தொடர்ந்தாள்.

பிலிப் அறையை விட்டு வெளிவந்தான். கால்கள் தள்ளாடின. எங்கே போவது? அவனுக்கே தெரியவில்லை. பக்கத்து அறை—தோரேஸ் இருந்த இடம். அவன் கால்கள் ஒரு நிமிடம் தயங்கின. மெதுவாக உள்ளே நுழைந்தான். கண்ணாடி — படுக்கை—புடவை எல்லாம் அவளின் பிரிவைக் குறித்து மௌனமாகக் கண்ணீர் வடித்தன.

சுவரில் தோரேஸ் சிரித்த முகத்தோடு காட்சி அளிக்கும் படம் மாட்டி இருந்தது.

அதன் முன் நின்ருன். தோரேஸ்—தோரேஸ் இனி என்று உன்னைக் காண்பேன். தோரேஸ் என்னை ஏன் தனித்துவிட்டாய்?'' என்று அவன் மனம் அழுதது. கண்களிலிருந்து பொல பொலவென்று கண்ணீர் வடிந்தது. நாற்காலியில் உட்கார்ந்தான். எதிரே அவளால் உபயோகிக்கப்பட்ட கண்ணுடி, சீப்பு—தைலப்புட்டி எல்லாம் இருந்தன. அவைகளும் ஆதரவற்றுப் போய்விட்டன. அவனும் அனாதை யாஞன். பாசத்தோடு ஒவ்வொரு பொருளையும் எடுத்துப் பார்த்தான். ஒர் கால் தன் மனைவியின் உருவத்தை அதில் தேடிஞனே என்னவோ? "எத்தனை நாட்கள் அவளுடன் ஆனந்தமாக வாழ்ந்தேன். இனி அந்த நாட்கள் திரும்பி வருமா?'' ஒரு ஏக்க பெருமூச்சு வெளிப்பட்டது.

மேஜையைத் திறந்தான். அவளால் உபயோகிக்கப்பட்ட ரிப்பன், சுனே, பவுடர் எல்லாம் கிடந்தன. இனி இவைகளை யார் உபயோகிப்பது? நோரா பெரியவளாஞல், சிறு சாந்தி அவன் மனதில் வட்டமிட்டது.

ஒரு கடிதக் கட்டு தென்பட்டது.—"நான் இறந்துவிட்டால் கொளுத்திவிடவும்'' என்று அதன் மேல் எழுதியிருந்தது. தோரேஸின் கையெழுத்துத்தான். என்ன கடிதங்கள்? யார் எழுதினது? என்ற கேள்விகளை மூளை எழுப்பி தோரேஸைப்பற்றி சந்தேகிக்க அவன் மனம் இடம் தரவில்லை. கண்ணீர் வடித்தவாறு ஒவ்வொரு கடிதமாக கொளுத்த ஆரம்பித்தான். அவனின் இன்ப நாட்கள் மடிந்தது போல அவைகளும் சாம்பலாயின.

அதுதான் கடைசிக் கடிதம். அதை எடுத்து மெழுகுவத்தியின் முன் பிடித்தான் எரித்துவிட. "அன்புள்ள காதலி தோரேஸ்'' என்ற எழுத்துக்கள் தென்பட்டன. "காதலி தோரேஸ்'' ஆ! அப்படி என்ருல் என் மனைவி ......? சந்தேக ஒளி தோன்றியது. அது வர வர பெரிதாகிக்கொண்டே வந்து கண்களை அவித்துவிடும் பெரும் ஒளியாக எரியத் தொடங்கியது. கடிதத்தைப் படித்தான்.

"அன்புள்ள காதலி தோரேஸ்.

தோரேஸ் நீ இருக்கிருய் வெகுதூரம். இந்த கடிதம் நம் இருவரையும் பிணைக்கிறது. இந்த கோடைக்கு நீ உல்லாஸ் ஓடைக்கு வருவாயா? வந்தால் நம் கண்மணி நோராவையும் அழைத்துவா. மறந்து விடாதே.

அன்பன்

தாமஸ்.

பிலிப்பிற்கு ஒன்றுமே புரியவில்லை. என்ன செய்கிருேம் எங்கே இருக்கிருேம்? என்ன நடந்தது? ஒன்றும் அவன் மூளையில் உறைக்கவில்லை. உணர்வற்று அப்படியே உட்கார்ந்துவிட்டான். மூச்சுக்கூட மிகமிக மெதுவாக வந்தது.

வெளியே எதோ சப்தம் கேட்டு நாய் பயங்கரமாக திடீரென்று குறைக்க ஆரம்பித்தது—அந்த சப்தம் அவன் மௌனத்தைக் கலைத்தது. கடிதத்தைப் பார்த்தான். கரங்கள் துடித்தன. மறுநிமிடம் சுக்கல்சுக்கலாக அதைக் கிழித்தான். நீண்ட மூச்சு வெளிப்பட்டது. அவனது இருதயமே வெடித்துவிடுவதுபோல இருந்தது. கண்கள் கலங்கின.

"விபசாரி—விபசாரி—நோரா...நோரா...... என் மகள் இல்லை. என் மகள் இல்லை. விபசாரியின் மகள்'' என்று நினைத்தான்.

அவன் மனம் குமுறியது. கட்டுக்கடங்காத கோபம் அவனை அப்படியே ஆக்ரமித்தது.

அந்த நேரத்தில் நோரா மெதுவாக வந்தாள். அவள் பின்னே அந்த நாயும் ஓடி வந்தது. தனது மலர்போன்ற கைகளால் அவன கழுத்தை அணைத்துக் கொண்டு "அப்பா, அப்பா'' என்ருள்.

பிலிப் திடுக்கிட்டு திரும்பிஞன், நோரா.

ஆசையாக அன்பாக பார்த்த அவன் கண்கள் கொடூரத்தைக் கக்கின. எழுந்தான். நோரா ஒன்றும் புரியாமல் தயங்கிக்கொண்டு நின்ருள். அவளையே பார்த்தான். "அப்பா,' என்ற மழலை மொழிகள் வெளிவந்தன.

"அப்பா. என்னடி அப்பா, விபசாரி மகளே அப்பா!'' என்று கூறி அவளை எட்டி உதைத்தான். நோரா தரையில் உருண்டாள். அவள் கையில் வைத்திருந்த பொம்மை தூரத்தில் போய் விழுந்தது. மண்டையில் இருந்து இரத்தம் லேசாக கசிந்தது. அவள் கண்கள் மூடிக் கிடந்தன. அம்மா அம்மா என்ற சப்தம்மட்டும் அந்த சின்னஞ்சிறிய குழந்தையிடமிருந்து எழும்பியது.

நாய் கோபமாக பிலிப்பை முறைத்து பார்த்தது. "உர்'' என்றது. தன் எஜமான் ஆனதால், கஷ்டப்பட்டு கோபத்தை அடக்கிக் கொண்டு நோராவின் தலையை நக்கியது. பிறகு மௌனமாக சோர்ந்துபோய் அவள் பக்கத்திலேயே படுத்துவிட்டது.

அந்த பகுத்தறிவற்ற மிருகம் செய்யும் அந்த காட்சி அவன் மன நரம்புகளைத் தட்டி விட்டது. களங்கமற்ற நோராவின் பால் வடியும் முகத்தையே பார்த்திருந்தான்.

"நீ செய்தது தவறு. பாவம் குழந்தை என்ன செய்யும்? தாய் தவறிவிட்டால் பிள்ளையைத் தண்டிப்பதா? கொடுமையானவனே! பார் அதன் முகத்தை—பால்வடியும் களங்கமற்ற முகத்தைப்பார். நோராவையா உதைத்தாய்? நீ ஒரு பேய். நீ ஒரு பேய்" என்று அவன் காது அருகே யாரோ கூவினதுபோல தோன்றியது. ஒருநிமிடம் அவளையே பார்த்து நின்றான். அவன் உதடுகள் லேசாகத் துடித்தன. கண்களில் நீர் மெதுவாகச் சுரக்க ஆரம்பித்தது. எதையும் நினைக்கவில்லை அவசரமாகக் கீழேகுனிந்து நோராவைத் தூக்கினன். அவன் கண்கள் கலங்கின, நெஞ்சு விம்மியது, அவளை அப்படியே மார்போடு அணைத்துக் கொண்டு செறும ஆரம்பித்தான்.

படுத்திருந்த நாயும் எழுந்தது. சந்தோஷத்தால் குதித்துக்கொண்டு அவனைசுற்றிச்சுற்றி வந்தது. நோரா மெதுவாக விழித்தாள்.

செறுமல்களின் இடை இடையே நோரா, என்ற சப்தமும், அபபா அப்பா என்ற கதறலும் எழுந்தன.

மின்பொறியால் மீன் பிடித்தல்

★

கெண்ட் பகுதியில், காண்டர்பரி என்னுமிடத்தில் தூர் நதியில், உயிரைப் பாதிக்காமல் உணர்ச்சியை மட்டும் தற்காலிகமாக இழக்கச் செய்யும் மின்சாரத்தை உபயோகித்து மீன் பிடிக்கத் திட்டம் வகுத்துள்ளனர். தூர் நதியில் பிடிக்கப்படும் இம்மீன்கள் இருபது மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஏரிக்கு எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது.

அடுத்து இரண்டு ஆண்டுகளுக்குள் மின்சாரத்தின் உதவியால் மீன் பிடிக்கும் இந்தப் புதிய முறை அதிக அளவில் கைக்கொள்ளப்படலாம் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். சமீப காலத்தில் வட கடலில் மின் அலையின் உதவியினால் மீன் பிடிக்கும் முறைபற்றி இரகசிய ஆராய்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. இதன் முடிவு போற்றத்தக்க முறையில் இருப்பதால் இப்பொழுது இருப்பதுபோல் வலை வீசி மீன் பிடித்தல் நாளடைவில் கைவிடப்படும் என்று கருதப்படுகிறது. அதிக அளவில் மீன் பிடிக்க வழி ஏற்படுவதால் மிகக் குறைந்த விலையில் மீன் ஏராளமாக விற்பனைக்கு வரலாம்.

இப்புதிய முறைப்படி, மீன் பிடிக்கவேண்டிய இடத்தில் மின்சாரப் பொறியை தண்ணீருக்குள் செலுத்துகிறார்கள். தண்ணீரில் மின்சாரம் பாய்ந்து செல்லும்பொழுது சுற்றுப்புறமுள்ள மீன்கள் மின் அலையில் தாக்குண்டு உணர்விழக்கின்றன. மின்பொறியைச் சிறிது சிறிதாக இறுக்கி பரவிக்கிடக்கும் மீன்களை ஒரு குறிப்பிட்ட இடத்திற்குக் கொண்டுவந்து பிறகு பிடிக்கிறார்கள்.

அதிக அளவு மீன்கள் பிடிக்கப்பட்டாலும், சிறு மீன்கள் பிடிக்கப்பட்டாலும் அவற்றை மறுபடியும் எடுத்துக் கடலில் விட்டுவிடுவதற்கும் வசதியிருக்கிறது.

ஒரு நீண்ட கழியின் முனையில் கொக்கியை மாட்டி அதில் சிறு இறைப்பொருளை வைத்து ஒவ்வொரு மீனைப் பிடித்தல், வலைவீசி மீன் பிடித்தல், கட்டுமரம் கட்டி கடல்மீது நாலைந்து பேராகச் சென்று வலைவீசி மீன்பிடித்தல், இம்மாதிரியாகப் படிப்படியாக மீன் பிடிக்கும் தொழில் முன்னேறி இன்று மின்பொறியால், தேவைக்கு வேண்டிய அளவை குறைந்த காலத்தில், மலிந்த விலையில் பெறும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது.

இத்தாலி தந்த இணையற்ற செல்வம்

[அ. கபிலன்]

எண்ணற்ற, களிப்பூட்டும் கவிஞர்களையும், கருத்தொளிரும் கலைஞர்களையும் உளங்கவரும் ஓவியர்களையும், உலகிற்குத் தந்த பெருமை உடையது இத்தாலி. இணையற்ற புகழ் கொண்ட அந்த இத்தாலி ஈன்றெடுத்த மைந்தன்தான் உலகப் பெருங்கவி தாந்தே (Dante). அவன் கவிஞன் மட்டுமல்லன்; அமர் புரியும் போர் வீரனுங்கூட. எழுதுகோல் பிடித்த கரத்தாலேயே இரத்தம் தோய்ந்த வாளினையும் ஏந்தியிருக்கிறான் அவன் வாழ் நாளில். அவன் வாழ்க்கை அழகுதவழ் பூஞ் சோலை அல்ல, கனல் 'கக்கும் எரிமலை அது. அங்கே அமைதியைக் காண முடியாது. அடங்காத சூறுவளி ஆரவாரிக்கும். அவனால் வாழ்க்கையில் அமைதியைக் காண முடியவில்லை.' அமைதியைக் காண முடியாமல் ஆக்கியது அவன் பிறந்த பிளாரன்ஸ் நகரம். அவனைப் பெற்றெடுத்த பிளாரென்ஸ் நகரம் அடித்துத் துரத்தவும் பின் வாங்கவில்லை.

தாந்தே வீரப்புகழ்பெற்ற மரபிலே வந்தவன். அவன் தந்தை அலிகெரி என்னும் ஆண்மை வாய்ந்தோன். அவன் தாய் பெல்லா என்னும் அருங்குணப் பெண்மணி. இவர்களுக்கு, 1265-ஆம் ஆண்டு பிறந்தான் தாந்தே. அவனுக்கோர் சகோதரி உண்டு. குழந்தைப் பருவத்திலேயே தந்தையை இழந்தான். தாய் பெல்லாவின் அக்க பாதுகாப்பில் வளர்ந்தான்.

தாந்தே இளமையில் பெலோனா, பதுவா (Paduwa) பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்றான். அவன் பி. ஏ. பட்டம் பெற்றது பாரிஸ் பல்கலைக் கழகத்தில் ஆகும். தாந்தேயிடம் கல்வி விருப்போடு விடுதலை விருப்பமும் சேர்ந்துதான் இருந்தது. புலவரை விரும்பிய அவன் உள்ளம் போர்வீரரையும் விரும்பியது. வாட்போர், மற்போர் போன்ற வீர விளையாட்டுகளில் தேர்ந்தான்.

அவனுக்கு 24 வயது ஆகையில், அவன் சிறந்த புலவனாகவும், வீரனாகவும் விளங்கினான். கம்பால்டினோ என்ற போரில் குதிரைப் படை செலுத்தி வெற்றி பெற்றான்.

கவிஞன் தாந்தேயின் அகவாழ்வை நோக்கின் அது கண்ணீர் சொரியும் காட்சியாகத் தான் இருக்கும். அவன் சிறு வயதிலேயே பியாட்ரிக்ஸ் என்பாளைக் காதலித்தான். ஆனால் அவள் தன் 24ஆம் வயதில் மண்ணுலகை விட்டு மறைந்தாள். மனமுடைந்தான் தாந்தே. அவன் வாழ்க்கையில் ஏமாற்றத்தின் முதற்படி இது. அவளைப்பற்றி விடாநியூவா (Vitancvova) என்னும் நூலில் தாந்தேயே கூறுகிறார்.

பியாட்ரிக்ஸ் பிரியவும், தாந்தே ஜெம்மா என்பாளை மணந்தான். அவளோ, அலங்கார விரும்பியாக, யாரையும் இழிவாக மதிக்கும் அகங்காரங் கொண்டவளாக வாழத்தலைப்பட்டாள். தாந்தே இதைக் கண்டு உள்ளம் தளர்ந்தான். இனிமையைத் தேடிச் செல்லும் இல்லறத்தில் அவன் கசப்பைத்தான் காண முடிந்தது.

1300ம் ஆண்டில் அவன் பிளாரென்ஸ் நகர நீதிபதியாக வந்தான். அவன் உள்ளமோ அடிமை வேலை செய்யும், அந்த அரசாங்கப் பணியை விரும்பவில்லை. அவன் விடுதலையை நாடினான். பெரும் பெரும் செல்வர்கள் குழுமிய இடம் பிளாரென்ஸ்நகரம். அவர்களுடைய செல்வச் செருக்கையும், பதவிச் செருக்கையும் கண்டு தாந்தே வெறுத்தான். செல்வர்களிடம் அடிமைப்பட்டுத் திணறுகின்ற எண்ணற்ற ஏழைகளின் இதயத் துடிப்புகள் அவன் காதுகளில் ஒலித்தன. அவர்கள் படுந்துயரைக் கண்டு துயரக் கண்ணீர் உகுத்தான் தாந்தே.

அப்பொழுது போப்பாண்டவரின் அக்ரம ஆட்சி கோர தாண்டவம் ஆடியது அங்கே. மதத்தின் பெயரால் வஞ்சகச் செயல்கள் நடைபெற்றன. போப்பின் அகங்கார போக்கு தாந்தேயிக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணியது.

அச்சமயம் பிளாரென்ஸ் நகரமே அல்லோல கல்லோலப்பட்டது. அமைதி நிலவிய பிளா

ரென்ஸ் நகரத்தில் ஆரவாரம் எழுந்தது. வாள்கள் மின்னலிட்டன. துப்பாக்கிக் குண்டுகளின் சத்தம் காதுகளைத் துளைத்தன. எழில்விளங்கும் பிளாரென்ஸ் நகர் வீதிகள் இரத்தக்கறை படிந்தன. ஆம். கெல்கப் என்னும் கட்சிக்கும், கிபெல்லீன் என்னும் கட்சிக்கும் போட்டி வளர, முடிவில் கெல்கப்கட்சி நகராட்சியைக் தன் வசம் ஆக்கிக்கொண்டது. அன்றையிலிருந்து நகர மக்கள் இருபிளவாக பிரிந்தனர், ஏன் நகரமே இரண்டாக பிரிந்தது. கெல்கப் கட்சியார் இருக்கும் பகுதி நெரி என்றும், கிபெல்லீன் கட்சியார் இருக்கும்பகுதி பியன்ஷி என்றும் பிரிந்தது. நெரியர் போப்பிணைக் போற்றி அவரை ஆதரிப்போர். பியன்ஷியரோ "அரசியலில் மத சம்பந்தமே கூடாது" என்னும் அதற்கு மாறுனக் கொள்கை உடையவர்கள். இவ்வாறு இருவருக்குருடையில் பகை வளர்ந்தது.

பகைமுற்றி, கலகம் ஏற்பட, நீதிபதி தாந்தே இருகட்சி தலைவர்களையும் நாடு கடத்தினான். இதைக்கண்ட நெரியரோ "தாந்தே நடுநிலைமை இல்லாதவன். பியன்ஷியர் கட்சியை ஆதரிப்பவன் என்று கூக்குரல் இட்டனர். ஒருசமயம் தாந்தே ஊரில் இல்லாதபோது, அவ்வூர் மற்றோர் அதிகாரி பியன்ஷியர் தலைவனை நகரத்திற்கு வரவழைத்து விட்டார், இதைக்கண்ட நெரியர், இதுதான் சமயம் என்று "தாந்தே சூழ்ச்சிக்காரன். போப்பின் பரம விரோதி, பியன்ஷியரோடு சேர்ந்து கொண்டு போப்புவைக் கொல்ல சதி செய்கிறான்" என்ற பழிகளை சுமத்தினர். பிளாரென்ஸ் நகரில் நெரியரின் ஆட்சி வலுத்தது. தாந்தேமீது சீற்றங்கொண்டனர் நெரியர். அவனுடைய சொத்துக்களை எல்லாம் பறித்துக்கொண்டனர். அதோடு மட்டுமல்ல. வெளியூர் சென்ற தாந்தேயை மீண்டும் நகருக்குள் நுழையவிடாது தடுத்து அவனைத் துரத்தினர்.

மக்களால் துரத்தப்பட்டு மறைந்தொளிந்தான் தாந்தே. ஓடிய தாந்தே மீண்டும் ஒரு படையை திரட்டிக்கொண்டு பிளாரென்ஸ் நகர்மேல் படையெடுத்தான். ஆனால் அவன் முயற்சி வெற்றி அளிக்கவில்லை. தோற்று மறைந்தோடி விட்டான் தாந்தே. மேலும் சீற்றங்கொண்ட நெரியரோ அவன்மேல் ஒற்றர்களை ஏவினர். அவனோ ஊர் ஊராகத் திரிந்தான்.

எனினும் உறுதி தளராமல் 'கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்ட, நண்பர்களைத் தூண்டி வந்தான். அடிக்கடி அவன் எண்ணமுகில்களிலே மின்னலிடும் அவன் தாய் நகரம் பிளாரென்ஸ். "என்னருமைப் பிளாரென்ஸ் நகரமே நீ பெற்றெடுத்த மைந்தனை நீயே துரத்திவிட்டாய். உன்னை என் கவிதை மலர்களாலே அணி செய்ய வேண்டும் என்றெண்ணியிருந்தேன். இறப்பினும் என் உடலை உன் மண்ணிலே சாய்க்க வேண்டும்" என்றாசைப்பட்டேன், நீயோ என்னை வெறுத்துத் தள்ளிவிட்டாய். நீ துரத்தி அடித்தாலும், என்னால் உன்னை மறக்க முடியவில்லை. நீதியற்று ஆட்சி புரியும் நேயர்களுக்கிடம் தந்து, நேர்மையுடன் ஏழைகளுக்காக வாழ்கின்ற என்னை துரத்தியதேன் என்று மனம் குமுறினான். இவற்றையெல்லாம் அவன் தான் எழுதியுள்ள "கான் விடோ" என்னும் நூலில் கூறுகிறான்.

ஊர்ஊராகச் சுற்றி, நாடு நாடாகச் சுற்றி முடிவில் ராவென்னா நகருக்கு வந்தான். அங்கே அதன் அதிபன் இதோ என்னும் புலவன் தாந்தேயோடு நட்பு கொண்டான். அங்கேதான் தாந்தே சற்று அமைதியைக் கண்டான். அங்குதான் தாந்தே தான் தொடங்கிய கவிதைகளை எல்லாம் பாடி முடித்தான். அவன் கவிதைப் புகழ் அகிலமெல்லாம் பரவியது. அதைக்கண்ட பிளாரென்ஸ் நகரமக்கள் மீண்டும் தாந்தேயை வருமாறு அழைத்தனர். அவனும் உடன்பட்டு பிளாரென்ஸ் நகர் நோக்கி வந்தான். ஆனால் நெரியர். "நீ போப்பிற்கு விரோதமாகப் புரட்சி காரியங்களிலெல்லாம் ஈடுபட்டாய் ஆதலின் அதற்கெல்லாம் அபராதம் கட்டிவிட்டு, இனி அவ்வாறு செய்வதில்லை என்று உறுதி கூறி நுழைக" என்றனர். இதைக் கேட்ட தாந்தே எரிமலை ஆனான். "நான் செய்தது எதுவும் தவறில்லை. என் தாய் நகரத்தில் நுழைய ஏன் இந்த நிபந்தனைகள்" என்று கூறி ராவென்னா சென்றுவிட்டான். அங்கே 1321 ஆம் ஆண்டு தாந்தே இறந்தான். அவன் இறந்த ராவென்னா நகரிலேயே அவனுடைய சமாதி கட்டப்பட்டது.

தாந்தேயின் உள்ளம் புரட்சி மணம் வீசும் ஒரு பூங்கா. அவன் எழுதிய நூல்கள் இனிக்கும் அமுதிலே தோய்ந்தெடுக்கப்பட்டவை. ஆனால் அவன் வாழ்வோ சோகவண்ணம் பூசப்பட்ட பரிதாப ஓவியம். அவன் இதயக் குமுறல்கள் யாவும் அவன் எழுதிய நூல்களிலே ஒலிக்கும். அவனை அடித்துத் துரத்திய மக்களே அவன் இறந்தபின் அவன் சமாதியை கண்ணீர் பெருக்கிக் கழுவினர். இத்தாலிய அறிஞர்களின் வரலாற்று வானில் தாந்தே மங்காத துருவ நட்சத்திரம். அவன், இத்தாலி தந்த இணையற்ற செல்வம்!

ஆர்க்கிமிடிஸ்

இரா. செழியன்

"கண்டு பிடித்துவிட்டேன், கண்டு பிடித்து விட்டேன்."

கடை வீதியில் குரல் வந்தது. அது சந்தைக் கடையின் இரைச்சலை அடக்குவதாயிருந்தது. குரல் வந்த திக்கை அனைவரும் நோக்கினார்கள்.

வயோதிகர் ஒருவர் விரைவாகப் போய்க் கொண்டிருந்தார். அவருக்குக் கூட்டம் வழி விட்டு, ஆச்சரியத்துடன் அவரைத் தொடர்ந்து நோக்கிற்று. வேடிக்கையான உருவம். தலையில் எண்ணெய் வழிந்தது. மேலும் கீழும் உடையில்லை.

சிசிலித்தீவின் பொன்னகர் என்று போற்றப்படும் சிரக்யூஸ் நகர். அதன் மக்களும் வேற்று நாட்டினரும் கலந்து பழகுகிற நீண்ட கடை வீதி. அதில் ஒருவன் உடை களைந்த நிலையில் ஓடுகிறான் என்று வேற்று நாட்டினருக்கு அருவருப்பு வந்தால் அதில் ஆச்சரியமில்லை. "கண்டு பிடித்து விட்டேன், கண்டு பிடித்து விட்டேன்" என்று குரல் வந்தது. திரும்பிப் பார்த்தால் கட்டிய கோவணத்துடன் ஒருவன் கடைவீதியில் போகிறான். "சே! யாரது? பித்தனா?" "சத்தம் போடாதே. சிரக்யூஸ் நகரத்தான். கேட்டால் கோபம் கொள்வான். பித்தனல்ல பேரறிஞர். அதனால்தான் மக்கள் வழிவிட்டனர். ஏதோ புதிய உண்மையைக் கண்டு பிடித்துவிட்டார் போலும். அதனால்தான் ஆரவாரத்துடன் தன்னை மறந்த நிலையில் விரைந்து செல்கிறார். அவர்தான் சிரக்யூஸ் நகரின் சிந்தனைச் செல்வம்"

"பெயர்?"

"ஆர்க்கிமிடிஸ்."

மற்ற நாடுகள் பண்படாத நிலையில் கிரேக்க நாடு ஒன்றுதான் ஐரோப்பாவின் பல்கலைக் களஞ்சியமாக விளங்கியது. விஞ்ஞானம், தத்துவம், வான நூல், தர்க்கம் போன்ற பல்வேறு அறிவுத் துறைகளின் ஆரம்பம்தான் கிரேக்க நாகரிகம். கிரேக்க நாகரிகத்தின் அறிவுக் கூடமாக ஏதன்ஸ் நகரம் முதலில் விளங்கியது. ஏதன்ஸ் நகரம் தாழ்வுற்றதும் அலெக்சாந்திரியா நகரத்தைச் சூழ்ந்து கிரேக்க நாகரிகம் தழைத்தது. அலெக்சாந்திரியா நூல் நிலையமும், பல்கலைக் கழகமும், துறைமுகமும் அதை அறிவியல் உலகின் தலைநகராக்கின. அலெக்சாந்திரியாப் பல்கலைக் கழகம் தந்த பெரு மனிதர்களுள் கணித வல்லுநரான யூக்லிடும், விஞ்ஞானத் தந்தையாக விளங்கிய ஆர்க்கிமிடிஸும் குறிப்பிடத் தக்கவர்கள்.

சிசிலித் தீவிலுள்ள சிரக்யூஸ் நகரில் கி. மு. 287-ல் ஆர்க்கிமிடிஸ் பிறந்தார். அவருடைய தந்தை வான நூல் அறிஞராகத் திகழ்ந்த பீடியஸ் என்பவராவார். தந்தையின் ஆராய்ச்சி அறிவும், கல்வி ஆர்வமும், கணிதத்தில் தேர்ச்சியும் சிறு வயதிலேயே ஆர்க்கிமிடிஸுக்கு ஊக்கத்தை அளித்தன. தக்க வயது வந்ததும், அலெக்சாந்திரியாப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். கல்விப் பயிற்சிக்குப் பின் அங்கு சிறிது காலம் பணியாற்றினார். பின் சிசிலித்தீவுக்குத் திரும்பினார். மத்தியதரைக் கடலில் நடுநாயகமாக விளங்கிய சிசிலித்தீவும், அதன் துறைமுகப் பட்டினமான சிரக்யூஸ் நகரும் வாணிபத்தில் வளம் பெற்று உயர்ந்தன. ஆர்க்கிமிடிஸ் அலெக்சாந்திரியாவிலிருந்து திரும்பிய பொழுது, ஹிரோ என்பவன் சிரக்யூஸ் நகரில் மன்னனாயிருந்தான். அவன் ஆர்க்கிமிடிஸிடம் அளவற்ற மதிப்பு வைத்திருந்ததாகத் தெரிகிறது. பேரறிஞர் என்ற விதத்தில் அவருக்கு வேண்டிய உதவியையும், ஆதரவையும் அளித்தான். ஆர்க்கிமிடிஸ் தனது ஆராய்ச்சிகளை வேறு கவலையின்றித் தொடர்ந்து நடத்தினார்.

ஆர்க்கிமிடிஸ் ஆராய்ச்சிகளின் உயிர்நாடியாக விளங்கியது கணிதம். கணக்கில் புது

வரிப்பாடுகள், புது முறைகள், புது வழிகள்; இலக்குவான நிருவணம் இவைகளில் இரவு பகலாக உழன்றார். ஆராய்ச்சி என்றால் ஓய்ந்த வேளையில் சிந்திப்பது என்று அர்த்தமல்ல, உண்பதும் உறங்குவதும் மறந்த நிலையில், அவரது சிந்தனை யெல்லாம் கணிதத்தில் பதிந்திருந்தது.

எண்களைப் பற்றிய எண்ணம், கோடுகளிடம் காட்டிய கவனம், வாழ்க்கையில் அவர் செலுத்தியதாகத் தெரியவில்லை. சரியாக உண்ணுவதோ, உடுத்துவதோ கிடையாதாம். சித்தம் கலங்கியவர் போல எப்பொழுதும் சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். தரையில் உட்கார்ந்து மணற் பரப்பின் மேல் கணக்குப் போட ஆரம்பித்து விடுவார். சாம்பலில் குச்சியால் படங்கள் போடுவது, சுவற்றில் கரியினால் கோடுகள் தீட்டுவதும் இப்படியாக எதையும் ஏடாக உபயோகிக்கத் தவறியதில்லை. குளிக்கப் போய் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும் பொழுது உடல் மீது எண்ணெயினால் கணக்கு வழிகள் போட ஆரம்பித்து விடுவாராம். அவரது முயற்சிகள் புது உண்மைகளை கண்டுபிடித்துத் தந்தன. சிந்தனை, முடிவு, ஒரு உண்மையிலிருந்து மற்றொரு உண்மைக்குத் தாவுதல், சிந்தனை, புதுமை, புதுமை, சிந்தனை. அவரது மூளை ஓயாது உழைத்தது.

பேரறிஞர். கணித வல்லுநர், சிறந்த ஆராய்ச்சியாளர் என்ற அளவிற்குத்தான் ஆர்க்கிமிடிஸைப் பற்றி அரசனால் அறிய முடிந்தது. ஆனால் வாழ்வில் வேறு கவனமுமின்றி கானல் போன்றிருக்கும் கணிதத்தில் உழைப்பதின் அவசியமும் முடிவும் அரசனுக்கு புரியவில்லை. அரண்மனைகளில் நடக்கும் ஆடல் பாடல்களில் ஆர்க்கிமிடிஸை காண முடியவில்லை. எங்கேயோ இருண்ட வானத்தில் ஊர்ந்து செல்லும் உடுக்களைக் கவனித்துக் கொண்டிருப்பார். நாள் தோறும் அவருக் கெதிரே இருந்த சுவடிக் கட்டுகள் அதிகமாயினவே யொழிய, அவருக்குப் பக்கத்தில் உருளை, கம்பி, உருண்டை, நாற்பட்டை, முப்பட்டை, மரக்கட்டைகள், துலாக் கோல், நீண்ட குச்சிகள் இவைகளின் எண்ணிக்கை நீண்டதே யொழிய அரசனுக்குப் புரியுமளவுக்கு ஆச்சரியமான புதுமை எதுவும் நிகழவில்லை.

மன்னன் பொறுத்துப் பார்த்தான். கடைசியில் ஒரு நாள் அவரை வெளிப்படையாகவே கேட்டான்.

"காலையிலிருந்து மாலைவரை உழைக்கிறீர். ஏடு கூடத் தேவையில்லை. சாம்பல் படிந்த இடம், எண்ணெய் தேய்த்த உடல், மணல் பரப்பிய தரை இவைகளில் கணித வாய்ப்பாடுகளை நிரப்பி விடுகிறீர். உங்கள் சிந்தனையில் மோதுகிற எண்ண அலைகளை எங்களால் அறிய முடியவில்லை. இருப்பினும் உங்களுடைய ஆராய்ச்சிகளால் பலன் ஏதாவது கிடைக்குமா? அதைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது, அறிவிக்கப்படவுமில்லை. புன்னகையும், பரபரப்பும், ஆவேசமும், ஆயாசமும் உங்கள் முகத்தில் தோன்றுவதைப் பார்த்திருக்கிறேன். பொன்னையும் முத்தையும் பாதுகாப்பது போல் உம்மைச் சுற்றிலும் மரக்கட்டைகளும், சிறு குச்சிகளும் பாதுகாக்கப் படுகின்றன. இந்த நீண்ட குச்சி, இதன் பெயரென்ன?"

"நெம்பு கோல்."

"பெயர் எதுவாயினும் சரியே. பெயர் கொடுத்து விடுவதாலேயே அது உயர்வடைந்து விடாது. யாராவது பார்த்தால் சிறு குழந்தையின் விளையாட்டுப் பொருள்கள் என்றுதான் நினைப்பார்கள். காலமும் மூளையும் செலவழிக்கப் படுவதுதான் மிச்சம் போலும். தேய்ந்த உடல், குழிவிழுந்த கண்கள், அழுக்கேறிய உடை, இவைதாம் ஆராய்ச்சிகளின் முடிவுகளா? உமது ஆராய்ச்சிகள் சிறு துரும்பைக் கூட அசைக்குமா என்பது சந்தேகம்?" என்று கூறி மன்னன் சிரித்தான். ஆர்க்கிமிடிஸ் புன்னகை செய்தார்.

"அரசே! இவை குச்சி, மரக்கட்டைகள் இவை. ஆனால் அறிவுள்ளவன் கையில் அவை அளவிடற்கரிய ஆற்றலைப் பெருகின்றன. என் ஆராய்ச்சிகள் சிறு துரும்பை அசைக்குமா என்று கேட்கிறீர்கள். சிறு துரும்பை அல்ல, இப் பெரும் பூமியையே என்னால் அசைக்க முடியும்!" என்றார்.

ஆர்க்கிமிடிஸின் பதில் மன்னனைத் திடுக்கிடச் செய்தது. சர்வ வல்லமையுள்ள கடவுள்கள் செய்ததாகப் படித்திருக்கிறான். செய்தவர்கள் கடவுள்கள், செய்ததாகச் சொல்லுபவை கதைகள். இவரோ சாதாரண மனிதர்! பூ என்று ஊதினால் ஆடுபவர் பூமியை அகற்றி விடுவேன் என்று கூறுகிறார்.

மன்னனின் திகைப்பைக் கண்ட ஆர்க்கிமிடிஸ் நெம்புகோலைக் கையிலெடுத்து "வான வெளியில் நான் நிற்பதற்குச் சிறிது இடம் கிடைக்குமானால் இப் பூமியை அகற்றிவிடுவேன்," என்று உறுதியுடன் கூறினார், குன்றத்தைக் கொத்தி எறிவேன் என்று குருவாதிட்டால், கேட்பவர்களுக்கு அவநம்பிக்கை தோன்றிய போதிலும் ஆச்சரியமும் அடை

வார்கள். ஆர்க்கிமிடிஸ் வீண் வாதங்களைக் கிளப்புபவரல்ல. பெரிய பாரத்தையும் சிறு சக்தியால் நகர்த்த முடியும் என்பது ஆர்க்கிமிடிஸின் நம்பிக்கை. தனது கூற்று மன்னனுக்குத் தடுமாற்றம் கொடுப்பதைக் கவனித்த ஆர்க்கிமிடிஸ் அதை நிரூபித்துக்காட்ட ஒப்புக் கொண்டார்.

சிரக்யூஸ் துறைமுகத்தில் அனைவரும் கூடினார்கள். துறைமுகத்திலிருந்த பெரிய கப்பல் ஒன்று கரையருகில் நிறுத்தப்பட்டு நிறைய பாரம் ஏற்றப்பட்டது. அங்கு கூடியிருந்தவர்களால் கப்பலைக் கொஞ்சம் கூட அசைக்க முடியவில்லை. பின் கப்பலில் இடமுள்ள வரையில் ஆர்க்கிமிடிஸ் கேட்டுக்கொண்டபடி எல்லோரும் ஏறினார்கள். கப்பல் முழுவதும் நிரம்பிவிட்டது.

கப்பலிலிருந்து கொஞ்ச தூரத்தில் ஆர்க்கிமிடிஸ் அமர்ந்தார். பல கப்பிகள் மாட்டப்பட்ட இயந்திரம் அவருக்கருகில் இருந்தது. கப்பிகளிடை நுழைந்து வெளிப்பட்ட கயறுகள் கப்பலுடன் இணைக்கப்பட்டிருந்தன. கப்பல் நிறைய பாரமேறியவுடன், தன் இடது கைகளால் இயந்திரத்தின் கைப்பிடியைச்சுற்றினார். தண்ணீரில் செல்வதைப் போன்று கப்பல் தரையில் நகர ஆரம்பித்தது. மன்னன் அசைவற்று நின்றான். மக்களோ திகைப்பைத் தருமளவுக்கு ஆச்சரியமடைந்தனர். இடது கையின அசைவு பெரும் கப்பலை அசைத்தது. சிறிய சக்தியால் பெரிய பாரத்தை நகர்த்த முடியும் என்பதை ஆர்க்கிமிடிஸ் நிரூபித்தார். ஆர்க்கிமிடிஸின் ஆற்றலைக்கண்ட அரசன் அது போன்று பல இயந்திரங்களைச் செய்து தருமாறு கேட்டான். இயந்திரங்கள் செய்வதை முழு வேலையாகக் கொள்ள முடியாது. புது விஞ்ஞானக் கருத்துக்களைக்கண்டு பிடிப்பதிலேயே அவர் ஈடுபட்டிருந்ததால், ஓய்வு நேரத்தில் இயந்திரங்கள் அமைப்பதாக வாக்களித்தார்.

மற்றொரு முறை கடுமையான ஆராய்ச்சி வேலையொன்று ஆர்க்கிமிடிஸுக்குத் தரப்பட்டது. புதிதாகப் பொன்முடி ஒன்று ஹிரோ மன்னன் செய்திருந்தான். சிறந்த வேலைப்பாடுகளுடன் பொன்முடி பார்ப்பதற்கு அழகாயிருந்தது. ஆனால், தான் கொடுத்த பொன்னில் சிறு பகுதியை மறைத்துவிட்டு அதற்குப் பதிலாக செம்பைக் கலந்து பொன்முடியைச் செய்திருப்பானோ என்ற ஐயம் அரசனுக்கு ஏற்பட்டது. மகுடத்தைச் சிதைக்கக் கூடாது; ஆனால் செம்பு கலந்திருக்கிறதா என்றும் தெரியவேண்டும். இந்தக் கடினமான வேலையை ஆர்க்கிமிடிஸுக்குத் தரப்பட்டது.

மற்ற வேலைகள் ஒதுக்கி வைக்கப்பட்டு பொன்முடி ஆராய்ச்சியில் ஆர்க்கிமிடிஸ் ஈடுபட்டார்.

"பொன்" "செம்பு" "எப்படி"......... "ஏன்?" என்ற சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. செவ்வானம், செப்புக் குடம், எரிகிற தீ, உண்ணும் உணவு எல்லாம் ஒரே பொருளைத்தான் காண்பித்தன. "பொன்முடி, பொன், செம்பு," கோட்டையைத் தாக்குபவன் கோட்டையைச் சுற்றிச் சுற்றி தாக்குவது போல அவரது சிந்தனை உண்மையைக் கண்டு பிடிக்க புதுப்புது வழிகளில் தாக்கியது. பித்தம் பிடித்தவர் போல சிந்தனையில் ஆழ்ந்தார்.

குளிக்குமிடம், தண்ணீர்த் தொட்டியில் தண்ணீர் நிரம்பியிருந்தது. உடைகளைக் களைந்து விட்டு, சிறு துண்டுடன் குளிக்க ஆயத்தமானார்.

தொட்டிற்குள் காலை வைத்ததும் தண்ணீர் வழிந்தது.

திடீரென்று அவர்மனதில் புதுமையொன்று மினனல் வேகத்தில் தோன்றியது. பொன்—செம்பு—எந்த உலோகமாயினும் சரி, அதன் பருமன், திண்மை முதலியவற்றைத் தண்ணீரின் உதவியால் கண்டுபிடிக்கலாம் என்று அவருக்குப் பட்டது. புதுமை கண்டுபிடித்த உணர்ச்சியில், உடை களைந்த வண்ணம் 'கண்டு பிடித்து விட்டேன், கண்டு பிடித்து விட்டேன்' என்று கடைவீதி வழியாக கூவிக் கொணடே ஓடினார்.

தண்ணீருக்குள் பெருங்கல்லைக் கூடத் தூக்கிவிடலாம். தண்ணீருக்குள் பளுவற்றதாக இருக்கும் அக்கல்லை வெளியே கொண்டு வந்தால், மேலே தூக்கமுடியாமல் திணறுவோம்—தண்ணீருக்குள் இருக்கும்பொழுது எவ்வளவு எடை குறைகிறது என்பதை ஆர்க்கிமிடிஸ் கண்டுபிடித்தார். இதனால் ஒரு பொருளை வெளியிலும், திரவத்தினுள்ளும் நிறுப்பதால் அப்பொருளின் எடையும், பருமனும் கண்டுபிடித்து விடலாம். ஒரே பருமனுள்ள பல்வேறு உலோகங்களின் எடை வெவ்வேறுயிருக்கும். பொன் மிக கனமானது. வெள்ளி, இரும்பு படிப்படியாகக் குறைந்த கனமுள்ளவை. இதனால் பொன்னோடு செம்பைக் கலந்தால் அதே பருமனுள்ள பொன் எடைக்கு வராது. இதன் மூலமாக அரசனது

முடியில் பொன்னோடு செம்பு கலந்திருந்ததை யும்; அத்துடன் எவ்வளவு பங்கு என்பதையும் ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடித்தார்.



அந்தக் காலத்தில் ஆர்க்கிமிடீஸைப் பொது மக்களுக்கு அதிகமாக அறிமுகமாக்கியது ஆர்க்கிமிடீஸின் திருகு என்ற இயந்திரமாகும். இது ஆழத்தில் இருக்கும் தண்ணீரை மேலே கொண்டுவரப்பயன் பட்டது. படத்தில் காட்டியபடி நீண்ட கம்பத்தின்மீது சுழன்று, சுழன்று மேற்செல்லுகிற குழாய் சுற்றப்பட்டு, அதன் இருமுனைகளும் திறந்திருக்கும். மேலே யுள்ள கைப்பிடியால் சுழற்றும்பொழுது தண் ணீர் கொஞ்சங்கொஞ்சமாக மேலேறி கடைசி யில் மேல்வாயின் வழியாக வழியும். மேட்டு நிலங்களுக்குக்கூட இதனால் தண்ணீர் பாய்ச்ச முடிந்தது. இன்றும் அது வழக்கில் இருக் கிறது. தண்ணீர் இறைக்கும் இந்தத் திருகு முறையை ஆர்க்கிமிடீஸ் கண்டுபிடித்ததால், அதற்கு ஆர்க்கிமிடீயன் திருகு என்ற பெயரே வழங்குகிறது.

இயந்திரங்கள் அமைத்துத் தந்தபோதிலும், அறிவியல் புதுமைகளைக் கண்டு பிடிப்பதி லேயே அவர் ஆழ்ந்திருந்தார். நாட்டின் வளப்ப நிலையும், அமைதியும் அவருடைய ஆராய்ச்சிகளுக்கு உதவியாயிருந்தன. ஆனால் ரோமாணியர்கள் சிசிலித்தீவின் மீது படை யெடுத்தபொழுது அவரது கவனம் கணிதத்தி லிருந்து சற்று நகர்ந்தது.

கார்த்தேஜ் நாட்டினருக்கும், ரோம் நாட்டின ருக்கும் நீண்ட காலமாக பகை இருந்தது. இரு நாடுகளும் அமைதியின்றி போர்க்கோலத் திலேயே வாழ்ந்தன. கார்த்தேஜ் என்ற பெயரைக் கேட்டாலே ரோம் நகரத்தான் கரம் வாளுக்குச்செல்லும். ரோம் என்று சொல்லி விட்டால் கார்த்தஜீனியர்களின் கண்கள் சிவந்துவிடும். அவ்வளவு வெறுப்பு நம்மால் இன்று நினைக்க முடியாத அளவுக்கு வளர்ந் திருந்தது.

சிசிலித்தீவு மத்தியதரைக்கடலின் நடுநாயக மாக அமைந்திருந்ததால் அதன அமைப்பு கடல் ஆதிக்கத்தில் முக்யத்துவம் வாய்ந்திருந் தது. மேலும் கார்த்தேஜ், ரோம் நாடுகளுக் இடையே சிசிலித்தீவு [illegible] களுக்கும் போர் மூளும்பொழுது, சிசிலித்தீவு போர்க்களமாகிவிடும். கார்த்தேஜ் — ரோம் சண்டை ஹனிபால் என்ற கார்த்தேஜ் வீரன் காலத்தில் உச்சநிலை அடைந்தது. அச்சமயம் சிசிலித்தீவின் படை அமைப்பைப் பாதுகாக்க மார்க்கெல்லஸ் என்ற படைத்தலைவன் ரோம் நகரத்திலிருந்து அனுப்பட்டான்.

மார்க்கெல்லஸ் ரோம் நாட்டினரால் மதிக்கப் பட்ட மாவீரன். முன்பொரு சமயம் கால் நாட்டினர் (தற்காலத்திய தென் பிரெஞ்சுப் பகுதியில் வாழ்ந்தவர்கள்) இத்தாலிக்குள் பெரும் படையுடன் நுழைந்தபொழுது மார்க் கெல்லஸ் படைத்தலைமை பூண்டு கால் நாட்டி னரை வென்றான். கால் நாட்டு காவலனைத் தனியே சந்தித்து, களத்தில் வீழ்த்தி அவ னது பொற்கவசங்களை ரோம் நகர வீதிகளில் சுற்றிக்காண்பித்தான். மற்றவர்கள் கார்த் தேஜ படைமுன் கலங்கியபொழுது, மார்க் கெல்லஸ் ஒருவனால்தான் எதிரிகளின் தாக்கு தலை எதிர்த்து நிற்க முடிந்தது.

மார்க்கெல்லஸ் சிசிலித்தீவுக்கு வந்ததும்' அவனுடைய கவனம் துறைமுகப்பட்டினமான சிரக்யூஸ் நகர்மீது விழுந்தது. அரசன் ஹிரோ இறந்ததால், சிரக்யூஸ் நகரம் குழப்பமாயிருந் தது. படைத்தலைவன் அரச அதிகாரத்தை ஏற்றுக்கொண்டிருந்தான். சரியான அரசின் மையால் நகர் அமைதியிழந்து தவித்தது. இச்சமயத்தில் மார்க்கெல்லஸ் சிரக்யூஸ் நகர் மீது படையெடுத்தான்.

தரைமூலமாகவும், கடல் வழியாகவும் தாக்கு தல் ஆரம்பித்தது. பலம் பொருந்திய படை அமைப்பு, களம்பல கண்டவீரர்கள், பலவித மான பொறிகள், விதவிதமான படைக்கலங் கள், கடலோரத்தில் உதவியாக வந்த கப்பற் படை இவைகளுடன் மார்க்கெல்லஸ் தாக்கு தலை ஆரம்பித்தான்.

தாக்குதல் ஆரம்பித்ததும் குழப்பமாயிருந்த சிரக்யூஸ் மக்கள் கலக்கமடைந்தனர். எதிர்த் தாக்குதல் புரியவேண்டிய அளவுக்கு சிரக்யூஸ் நகரத்திலும் படைபலம் காணப்படவில்லை. தொலைவில் கூட்டங் கூட்டமாக வரும் கப்பல் வரிசைகளும், புற்றீசல் போலப் புறப்படும் போர் வீரர்களின் தொடர்ச்சியும் அச்சத்தை அள்ளித்தெளித்தன. தாக்குதல், அதி னின்றும் தப்பமுடியாது என்று சிரக்யூஸ் நகரம் தவித்தது. ஆபத்து, தடுக்க முடியாத அழிவு, சிரக்யூஸ் நகர்மீது ஊசலாடிற்று. இவ்

வளவு குழப்பத்தினிடையேயும், கலங்காது இருந்தவர் ஆர்க்கிமிடிஸ் ஒருவர்தான். அவர் [illegible] ரும் ஆபத்து என்று அறியும்பொழுது எறும்புக்கூட்டத்தைப்போல தூரத்தில் வரும்படை வரிசைகளை அலட்சியமாகப் பார்த்து நின்றார்.

மார்க்கெல்லஸ் படைவீரர்கள் கோட்டைச் சுவரிலிருந்து கூப்பிடு தூரத்தில் வந்துவிட்டனர். கப்பற்படை, துறைமுகத்தை வளைத்து விட்டது. சிரக்யூஸ் நகரம்! நிலை பரிதாபமானதுதான். "அடங்கவேண்டியதுதான்" என்று மார்க்கெல்லஸ் எச்சரித்தான்.

"உடனே அடிபணியா விட்டால் அழித்துக் கட்டுவோம்" என போர்வீரர்கள் ஆர்ப்பரித்தனர். ஆபத்தை அணைத்துக் கொண்டோம், அழிவு நிச்சயம் என்று கோட்டைக்குள்ளிருந்த மக்கள் குழம்பினார்கள். தூரத்தில் வீரர்கள் உயர்த்திய வாட்களின் ஒளிகண்டு அவர்களின் கண்கள் இருண்டன. துறைமுகத்தை அடுத்து நின்ற பாய்மரங்களின் அசைவு அவர்களின் இருதயத்தை அழுத்துவதுபோலிருந்தது. அழிவின் முன் முதியோர் குழந்தைகள்போல தேம்பி நின்றனர். குழந்தைகள் முதியோர்போல கலக்கத்துடன் இருந்தார்கள். அப்பொழுதும் ஆர்க்கிமிடிஸ் கவலைப்படாமல் இருந்தார்.

மார்க்கெல்லஸ் படை குதூகலத்துடன் முன்னேறியது. கோட்டைக்குள் ஓலம் அதிகரித்தது. ஆனால் எதிர்பாராதது ஒன்று நிகழ்ந்தது. மார்க்கெல்லஸ் திடுக்கிட்டான். மக்கள் ஆச்சரியமடைந்தனர். சிரக்யூஸ் நகரம் அடிபணியவில்லை. கோட்டைக் கதவுகள் பலமாகச் சாத்தப்பட்டிருந்தன. எதிர்த்தாக்குதல் ஆரம்பமானது.

எதிர்த்தாக்குதல்! நம்பமுடியாத செய்தி. சிரக்யூஸ் நகரில் அமைதி இல்லை. உறுதியான அரசாங்கம் இல்லை. படையமைப்பில்லை. எதிரியின் படையோ அலைபோல முழக்கமிட்டுத் திரண்டு வந்தது. வெற்றி வீரன் போர் நிபுணன். கால் நாட்டின் காலன், கார்த்தேஜ படைக்குக் கலங்காதவன், ரோம் நகர படைத் தலைவன் மார்க்கெல்லஸ் தாக்குதலை நடத்தினான். அவன் பெயர் ஒன்றேபோதும் சிரக்யூஸ் நகரின் வாழ்வுக்கு முற்றிப்புள்ளி வைக்க. ஆனால் சிரக்யூஸ் நகரம் ஆதரவற்றுவிடவில்லை. அமைதியிழந்து அல்லற்பட்ட நேரத்தில், படை பலமின்றி பயந்த நேரத்தில், அதன் உதவிக்கு அமைதியை இழக்காத, படை பலமில்லா விட்டாலும் மூளைபலமிக்க ஆர்க்கிமிடிஸ் முன்வந்தார். ரோம் வல்லரசு அதன் பிரதிநிதியாக விளங்கிய மாவீரன் [illegible] போர்வீரர்கள், [illegible] நூற்றுக்கணக்கான கப்பல்கள், ஒளிவிடுகிற படைக்கலங்கள், ஊதுகிற கொம்பு, கொட்டுகிற படை முரசு, உயர்த்தப்பட்ட கொடி, எல்லாவற்றையும் விட படையமைப்பில் காணப்பட்ட ஒழுங்கு, உறுதி, மறுபக்கத்தில் சிரக்யூஸ், சிறிய ஊர் சீரழிந்த நிலையில் அதனருகில் ஆர்க்கிமிடிஸ்.

ஓய்ந்த வேளைகளில் தாம் கண்டுபிடித்த இயந்திரங்களை ஆர்க்கிமிடிஸ் மதிற்சுவர்களில் வைத்திருந்தார். மார்க்கெல்லஸ் படைகொஞ்ச தூரத்திற்குள் வந்ததும் ஆர்க்கிமிடிஸ் பல்வேறு இயந்திரங்களை முடுக்கினார். ஆர்க்கிமிடிஸின் இயந்திரப்படை வேலைசெய்ய ஆரம்பித்தது.

கூர்மையான ஆயுதங்களும், கற்களும் புயல் வேகத்தில் கோட்டைக்குள்ளிருந்து வீறிட்டன. கனமான கற்கள், பேரிரைச்சலுடனும், கடும் வேகத்துடனும் படைவீரர்களை வரவேற்றன. ஒதுங்கவோ, தடுக்கவோ முடியவில்லை. அவ்வளவு பெரிய கற்கள். யானையின் காலடியில் சிதறுகிற தேங்காய்போல, பெருங் கற்களின் கீழ் படைவீரர்கள் சிதைந்தனர். புயலுக்கு முன் உதிருகிற சருகுகள்போல, வீரர்கள் சிதறினர். தரைப்படையினரின் ஆசை எண்ணங்கள் தரை மட்டமாயின. வேறு வழியின்றி படை பின்வாங்கியது.

(அடுத்த இதழில் முடியும்)



MANKA

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி! டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர் மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு : வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STORE

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்–ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.